
www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


நவம்பர் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org




ஏகாதிபத்திய யுத்தவெறி உரை நிகழ்த்தும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்




வாஷிங்டனில் வெள்ளை மாளிகை முன்பாக ஈராக் யுத்த எதிர்ப்பாளர்கள் வீதியை மறித்து படுத்திருந்து நடாத்தும் "மரணத் தோற்ற" போராட்டப் படங்கள்




முன்னாள் அமெரிக்க சட்டமா அதிபர் ராம்சி கிளார்க் ஈராக் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்நிற்கிறார்




வியட்நாம் யுத்த எதிர்ப்பு முன்னோடி ஜோன் அண்டசன் உட்பட "மரணத் தோற்ற" எதிர்ப்பு இயக்கப் போராட்டத்தில்








குர்திஷ் தொழிலாளர் கட்சியின் (PKK) போராட்டத்திற்கும் அதன் போராளிகளுக்கும் எதிராக துருக்கிய ராணுவம் ஈராக்கின் எல்லைக்குள் புகுந்து அழித்தொழிப்புச் செய்வதற்கு எதிரான மக்கள் பேரணிகள் இடம் பெறுகின்றன.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா பண்டாரிக்குள விவகாரம் கமக்காரர் அமைப்பு கண்டனம்

**வவுனியா அரச அதிபர்** செயலகத்தில் 24.09.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நடைபெற்ற காரசாரமான விவாதங்களை அடுத்தே பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் 31.09.2007 கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் எமக்கு அரச அதிபர் தலைமையில் சிலவாக்குறுதிகள் தரப்பட்டன. இவை தற்காலிகமான தீர்வுகளாகவே எட்டப்பட்டன.

1. அத்துமீறி குடியிருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது என்பதும்

2. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 10.10.2007க்கு இடையில் சகல அத்துமீறல் குடியிருப்பாளரினதும் வேலிகள், தடைகள் அகற்றபடல் வேண்டும் எனவும்

3. அவர்களது வீட்டிலிருந்து 6 அடிகள் விட்டு அனைத்துப்பகுதியையும் ஆழப்படுத்தி மேலதிக ஆக்கிரமிப்புக்கு தடை ஏற்படுத்துவது என்றும்,

4. இந்த நடவடிக்கைகளின் போது இடையூறுகள் ஏற்படின் பொலிசாரின் பாதுகாப்புடன் இவ்வேலைகளை முன்னெடுப்பது என்றும் தற்காலிகமான தீர்வுகள் எட்டப்பட்டன.

ஆனால் அரச அதிபரினால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் இப்பிரச்சனை சுமூகமாகப் பேசித் தீர்க்கப்பட்டு விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இக்கடிதம் தங்களிற்கு அனுப்பப்படும் வேளை வரை அத்தகைய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

சமீபத்தில் 15.10.2007 அன்று 1 மணியளவில் எமது அமைப்பின் ஏற்பாட்டில் குளத்தை ஆழப்படுத்தி வேலிகளை அகற்றும் பணியைச் செய்ய முயன்றபோது சில அத்துமீறல் குடியிருப்பாளர்களால் எமக்கு தடைஏற்படுத்தப்பட்டதுடன் ஆயுதமுனையில் நாம் அச்சுறுத்தப்பட்டுள்ளோம். அத்துடன் மேலதிகமாக இவ்விட த்தில் ஏதேனும் வேலை இடம் பெறும் எனில் உயிருடன் இருக்க மாட்டீர்கள் என ஆக்கிரமிப்பு வாசிகள் எச்சரித்தது டன் எமது வாகனத்தையும் தாக்கி சேதப்படுத்த முனைந்தனர்.

இதன்போது அரச அதிபர் காரியாலய அதிகாரி ஒருவரும் கமநல உதவி ஆணையாளரும் அவர்களது சில அலுவலரும் நேரில் சமூகமளித்திருந்த போதும் அவர்களை அத்துமீறிகுடியமர்ந்தோர். சூழ்ந்து கொண்டதுடன் எமதுவேலையை நிறுத்துமாறு கூறி அவர்களை எச்சரித்தனர். அத்துடன் எமது வேலையை நிறுத்திவிட்டு நாம் வெளியேற வேண்டி ஏற்பட்டது.

இது தொடர்பாக அரச அதிபரை சந்தித்த போது எமக்கும் இவ்வாறே அறிவுறுத்தல் தரப்பட் டது. கப்பம், கசிப்பு காச்சுதல், களவு போன்றவற்றில் முக்கிய கவனம் எடுக்கும் நீதித்துறையினர் இப்பிரச்சினையில் ஒதுங்கியிருப்பது வேதனை தருகிறது. பிரதேச செயலாளர் இது தொடர்பாக ஒரு வார்த்தையேனும் பேசாதுயிருப்பது ஏன்?

**1.** கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரச அதிபர் தயக்கம் காட்டுவது எதனால்? **2.** சட்ட நடவடிக்கை மூலம் அத்துமீறல் குடியிருப்பாளர் அகற் றபட இதுவரை வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இது ஏன்? **3.** இக் கூட்டத்தில் சமூகமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் கள் வாக்குறுதியளித்தபடி இந்நடவடிக்கைகள் நடைபெறுகி ன்றதா என கவனித்து உரிய அழுத்தங்கள் பிரயோகிக்க தவறியமை ஏன்? **4.** பிரதேச செயலரின் அனுமதி இன்றி 12 காணி உறுதிப் பத்திரங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன. இது தொடர்பாக யார் விசாரனை நடாத்துவது. **5.** இனிவரும் காலங்களிளாவது விவசாயக்குளக் காணிப்பகுதிகள் துண்டாடப்பட்டு மேட்டு காணிகளாக்கபடுவதும், வீடு கட்டும் நிலங்களாக மாற்றப்படுவதையும் உரிய அரச அதிகாரிகள் தடுத்து நிறுத்துவார்களா? **தலைவர் செயலளார்.**

**பண்டாரிகுளம் கமக்காரர் அமைப்பு** (பதிவ இல:DAD/12/4F. O. 22)



புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களான வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், சி. கிருஷ்ணப்பிரியன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விடுதலைக்கு மலையகத்தில் கையெழுத்து இயக்கம் நடாத்தப்பட்டு வருவதுடன் நிதி சேகரிப்பும் நடைபெற்று வருகின் றன. அத்தோழர்களின் விடுதலைக்கு சகல வழிகளிலும் செயல்படுமாறு வேண்டுகிறோம். **[ஆ.குழு]**

**ஊடக சுதந்திரம்**
**1ம் பக்க தொடர்ச்சி**

அவற்றில் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். அதன் பட்டியல் நீளமானதாகும். இன்றும் அக் கொலைப்பட்டியல் நீண்டு செல்கிறது. அத்துடன் ஊடகப் பணிமனைகள் தாக்கப்பட்டு பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சி ஏற்கனவே தெற்கு நோக்கியும் திருப்பப்பட்டு விட்டது. அரசாங்கத்தையும் அமைச்சர்களையும் விமர்சனம் செய்து பொதுமக்களுக்குக் கருத்துக் கூறும் ஊடகங்கள் மீது அரசாங்கம் பாய்ந்து கொள்வதை மேலும் முடுக்கி விட்டுள்ள போக்கையே அண்மைய இரு சம்பவங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் ஊடகங்களும் தமிழ் ஊடகவியலாளர்களும் புலிகளாகவே ஆளும் தரப்பினரால் சித்தரிக்கப்பட்டு வந்துள்ளனர். அவ்வாறே ஆங்கில சிங்கள ஊடகங்கள் சில பொது நியாயங்களையும் செய்திகளையும் வெளியிட்டால் புலிகளுக்கு உதவோர் அல்லது “சிங்களப் புலிகள்” என்றும் பட்டம் சூட்டப்படுகின்றனர். மகிந்த சிந்தனையின் கீழான யுத்த நிகழ்ச்சி நிரலுக்கு துதிபாடாத ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் புத்திஜீவிகள் என்போர் யாவரும் புலிகளுக்கு உதவவோர் என்றே ஆளும் தரப்பினர் கூறி வருகின்றனர். இதற்கு அரசாங்க ஊடகங்களைப் பயன்படுத்தியும் கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பற்றியும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப் பட வேண்டும் என வற்புறுத்தியும் வரும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு வந்தன. இப்போது அரசாங்கத்தின் வீண்விரயம் ஊழல் மோசடிகள் விலைவாசி உயர்வு பற்றியெல்லாம் அம்பலப் படுத்தியும் விமர்சனங்கள் எழுதியும் ஒலிபரப்பியும் வரும் தெற்கின் ஊடகங்கள் மீது அரசாங்கம் பாய்ந்து கொள்கிறது. இந் நிலை மேன்மேலும் அதிகரித்துச் செல்வதற்கான அறிகுறிகளையே அரசாங்கத்தரப்பில் இருந்து காணமுடிகிறது.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் பாதுகாப்பட்டு வருவதாக வாயளவில் பீத்திக் கொண்டு செயலில் அதனை ஒடுக்கிப் பறிப்பதையே அரசாங்கம் மேன்மேலும் முன்னெடுத்து வருகிறது. இது அபாயப் போக்கினதும் அப்பட்டமான பாசிச சர்வாதிகாரத்தினதும் வெளிப்பாடேயாகும். இந் நிலைக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் அணிதிரண்டு செயல்படுவது அவசியமாகும்.

## நாலு நடக்கும் உலகிலே
நற்குணன்

## சக்தி மிக்க குறுக்கீடு?

**மிலிந்த மொறகொடவின் மீது** முன்வைக்கப்பட்டுள்ள பெரும் ஊழல் குற்றச்சாட்டை முன்னிட்டு அவர் மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி மொறகொடவை விட அதிகம் தவித்துப் போயிருப்பது சக்தி- சிரச- எம்.ரி.வி நிறுவனம் போலவே தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கண்டித்தும் மொறகொடவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது செய்திகளின் இடையே ஒரு பிரமுகரைக் கொண்டு பேசுவிக்கப்படுகிறது.

நடக்கப் போவதோ பிரேரணை மீதான ஒரு பாராளுமன்ற விவாதம். அது நடக்கத் தேவையில்லை என்ற விதமாக ஒரு ஊடக நிறுவனம் ஏன் இவ்வளவு அந்தரப்பட வேண்டும்?

மிலிந்த மொறகொடவுக்கும் இந்த நிறுவனத்திற்கும் இருந்து வந்த நெருக்கம் பற்றி எல்லாருக்குத் தெரியும். அவருடைய அரசியல் தில்லு முல்லுகளும் கட்சித் தாவலும் ஊரறிந்தவை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத இந்த ஊடக நிறுவனம் அவரைக் காப்பாற்ற அதிரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது ஏன்? அவரைப் புனிதமானவர் என்று காட்ட முற்படுவதன் மர்மம் யாது?

## புரிந்துணர்வு

**ரணில் விக்கிரமசிங்ஹ** சமஷ்டி ஆலோசனை பற்றிய தனது நிலைப்பாட்டைத் தலைகீழாக்கி விட்டது பற்றித் தமிழர் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) பாராளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துணர்வுடன் உள்ளனர் என்று யூ.என்.பி பேச்சாளர் ஒருவர் கூறினார். இதை மறுத்து ரணிலின் திசைமாற்றத்தைக் கண்டித்துத் தமிழ் அரசியல்வாதிகள் யாருமே பேசாதது அந்தக் கூற்று உண்மையோ என்று எண்ணத் தூண்டுகிறது.

ரணிலின் திசை மாற்றத்தின் பின்னணியில் அண்டைநாடொன்றின் ஆலோசனையும் இருந்திருக்கலாம் என்ற கருத்தும் பரவலாகப் பேசப்படுகிறது. அப்படியானால் அந்த மாற்றம் பற்றிய தமிழரசுக் கட்சியின் புரிந்துணர்வுக்கும் அதே ஆலோசகர்கள் துணை செய்திருப்பார்களா?

## பேராசிரியராவதன் இடர்ப்பாடுகள்

**சமுத்திரன் என்ற பேரில்** அறியப்படும் பேராசிரியர் சண்முகரத்தினம் ஒரு காலத்தில் தன்னை மாக்ஸிய லெனியவாதியாக (இன்றைய அவரது சொற்களில் ஒரு மாஓ வாதியாக) காட்டிக் கொண்ட ஒரு வரட்டு மாக்ஸியவாதி. ஏ.ஜே. கனகரத்தினா பற்றி ஒரு நீண்டகுறிப்பை ஒக்ரோபர் 21 ஞாயிறு தினக்குரலில் அவர் எழுதியிருந்தார். 1981ல் அவரது வரட்டுத் தனமான வாதத்திற்கு ஏ.ஜே. கனகரத்தினாவிடம் செம்மையாக வாங்கிக் கட்டியதை அதிற் பூசி மழுப்பியுள்ளார். இப்போது ஸ்றாலினிச விரோதியாகத் தன்னை அடையாளங்காட்டிக் கொண்டு “இட து” என்.ஜி.ஓ அரசியல் பண்ணுகிறார்.

அவரது கட்டுரையில் ஏ.ஜே. யைத் தன்னுடனான விவாதத்திற்கு முன் சந்தித்திருந்தால் விவாதத்தின் போக்கே வேறு விதமாகப் போயிருக்கும் என்ற விதமாக எழுதியிருக்கிறார். இன்னமும் ஏ.ஜே. க்கு மறுமொழியாகத்தான் எழுதியது சுத்த உளறல் என்று ஒப்புக்கொள்ள அவரிடம் தைரியமில்லை. கைலாசபதியின் இலக்கியக் கோட்பாட்டைக் கூடச் சரிவர விளங்கிக் கொள்ளாமல் உருவமும் உள்ளடக்கமும் பற்றிக் குழப்பியடித்து மாக்ஸியலெனினியவாதிகள் வரட்டுத்தனமானவர்கள் என்ற சிலரது கருத்தை வலுப்படுத்திய பெருமை அவருடை யது.

தினக்குரல் கட்டுரையிலும் தன்னைச் சுய விமர்சனம் செய்யாமல் தனது குழப்பமான சிந்தைகட்கெல்லாம் வேறு எங்காவது பழியைப் போட முயலுகிறாரே ஒழியத் தனது நேர்மையற்ற அரசியலே காரணம் என்றும் கூறித்தயாராக இல்லை. சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகராகச் சில ஆண்டு கள் முன்பு இருந்த போதும் தனது அரசியல் கேள்விக்குட்பட்டிருந்தது என்பதையும் அவரால் ஏற்க இயலவில்லை. அது, பேராசிரியத்தனத்தின் கோளாறுகளில் ஒன்று.

## இந்தியப் பயங்கரக் கனவுகள்

இந்தியா குறிக்கிட வேண்டும் என்று தருணங்கிடைக்கிற போதெல்லாம் சொல்லத் தவறாதவர் மனோகணேசன். எந்த வகையில் இந்தியா குறுக்கிட வேண்டும் என்று மட்டுஞ் சொல்லமாட்டார். இப்போது இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை விற்பது பரகசியமாகி விட்டது. இப்போது இந்தியா குறுக்கிடுகிற விதமாகத் தான் இனியுங் குறுக்கிட வேண்டும் என்று நினைக்கிறாரா? இந்தியக் குறுக்கீட்டை வேண்டி நின்ற தமிழ் அரசியல் வாதிகள் எல்லாரும் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

இவர்கள் சொல்லுகிற மாதிரி இந்தியா குறுக்கிடாது என்று இவர்கட்குத் தெரியாமலில்லை. ஆனால் இந்தியாவின் இன்றைய குறுக்கீடு இப்படிப் பகிரங்க அதிர்ச்சி தரும் என்று இவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கொஞ்ச நஞ்ச நேர்மை மனதில் மிஞ்சியிருந்தால் இனியாவது இலங்கையின் உள்அலுவல்களில் எந்த அயல்நாடுங் குறுகிடலாகாது என்றும் எல்லா அயற் குறுக்கீடுகளையுங் கண்டித்தும் பொதுமக்களிடம் சொல்வார்களா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உயிருக்கு உத்தரவாதம் இல்லாத வடபுலத்து அவல வாழ்க்கை!

**வடபுலம் இன்று** சபிக்கப்பட்ட பிரதேசமாக காட்சி தருகிறது. சபித்த அந்த மா முனிவர் யார்? அந்த சாபத்திலிருந்து எப்போது சாப விமோசனம் கிடைக்கும். இப்படித்தான் மத நம்பிக்கையுள்ள ஒவ்வொரு தமிழர்களும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். "கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற அந்த தீர்க்க தரிசியின் இறுதி வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டு விட்டது போன்ற நிலைதான் அங்கு காணப்படுகிறது.

வடபுலம் இன்று கொலை வெறி கொண்டோரின் கைகளிலேயே இருந்து வருகிறது. அதனால் அடுத்து யார் கொல்லப்படுவார்? யார் கடத்தப்படுவார்? என்ற கேள்வியுடனும் பயப்பீதியுடனுமே மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கொல்லப்படுவோர் கட்தப்படுவோர் ஏன் அக்கதிக்கு ஆளாகிறார்கள் என்பது அவர்களுக்கும் தெரியாது ஏனையோருக்கும் தெரிய முடியவில்லை. திடீர் திடீரென இடம் பெறும் இக்கொலை வெறிச் செயல்களால் மக்கள் பேயறைந்த பீதியில் உறைந்து காணப்படுகின்றனர்.

வேலைக்குச் சென்றவர், வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவர், வீட்டில் இருந்தவர், நடுநிசி உறக்கத்தில் கிடந்தவர் நொடிப் பொழுதில் சுட்டுப்பொசுக்கிப் பிணமாக்கப்படுகின்றனர். அரிசிக்கும் பாணுக்கும் ஒரு வேளை உணவுக்கும் ஆலாய்



பறக்கும் பலரையே யாழ்ப்பாண வீதிகளும் ஒழுங்கைகளும் காணுகின்றன. இந்த உணவு அவலத்தின் மத்தியில் தான் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத பயப்பீதியுடன் மக்கள் வாழ வேண்டியுள்ளது. உயிர் வாழும் உரிமை மறுக்கப்படுகிறது.

இந் நிலையிலே தமக்கான கொலை அச்சுறுத்தலை ஏதோவகையில் முன் உணர்ந்து கொண்டவர்கள் மனித உரிமைகள் ஆணையத்தில் சரண் அடைகின்றனர். அவர்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் போது நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்க உத்தரவிடப்படுகின்றது.

அவ்வாறு நீதிமன்றப் பாதுகாப்பில் கடந்த டிசம்பரில் இருந்து இது வரை 170பேர் வரை இருந்து வருகிறார்கள். அவர்களில் 79 பேர் கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் பாதுகாப்புத் தேடி மனித உரிமைகள் ஆணையத்தை நாடினர் என அறிய முடிகிறது. இவர்கள் குற்றவாளிகளோ அன்றி விளக்கமறியல் சந்தேக நபர்களோ அல்லர். தமது உயிரைப் பாதுகாக்கும் படி நீதிமன்றத்தை நாடியோராவர். ஆனால் இத்தகையோர் இடநெருக்கடிகளும் வசதிகளும் அற்ற யாழ் சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்படுள்ளனர். இவர்களுக்கு தனியே புனர்வாழ்வு நிலையம் திறக்கப்பட வேண்டும் என அண்மையில் உயர் நீதிமன்ற நீதியரசர் பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கடந்த டிசம்பரில் இருந்து இது வரை 533 பேர் வரை கொல்லப்ப ட்டுள்ளனர். அவ்வாறு 900 பேர் காணாமல் போய் உள்ளனர். ஆனால் இவற்றின் தொகை அதிகரிப்பு நாளாந்தம் உயர்வடைந்து கொண்டே செல்கி றது.

இவ்வாறு உயிர் அச்சுறுத்தலால் யாழ். மனித உரிமை ஆணையகப் பணிமனைக்கு நாளாந்தம் பலர் சென்று கொண்டிருக்கின்றனர். வடபுலத்து மக்கள் அனுபவிக்கும் பன்முகப்பட்ட அவலங்களில் முதன்மையாக இருப்பது உயிர் வாழ்வதற்கான பாதுகாப்பு அற்ற பயங்கரச் சூழலேயாகும்.

## அமைச்சர்களுக்கான மாதாந்தப் படி விபரம்

அமைச்சர்களுக்கு பல வழிகளாலும் வழங்கப்படும் வாழ்க்கைப் படியின் (அலவன்ஸ்) மொத்தத் தொகை கொழுத்த பணவருவாய் ஆகும். மக்களுக்கு வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்ட காரணத்தால் அமைச்சர்கள் தாம் பெற்று வந்த படியில் அரைவாசியைக் குறைத்துப் பெறுவதாக ஜனாபதியும் அரசாங்கமும் பெருமையடித்துக் கொண்டனர். அவ்வாறு குறைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பின்பும் அமைச்சர்கள் பெறும் மாதாந்தப் படியின் விபரம் கீழே தரப்படுகிறது.

| | ரூபா - சதம் |
|---|---|
| நேரடியான மாதாந்தப் படி | 27142 - 00 |
| டீசல் படியாக | 75000- 00 |
| 2 உத்தியோகபூர்வ தொலைபேசிக்கு | 25000- 00 |
| வீட்டிற்கான தொலைபேசிக்கு | 10000- 00 |
| கையடக்க தொலைபேசிக்கு | 4000- 00 |
| வீட்டு வாடகைக்கு | 100000- 00 |
| மொத்தம் | 241142 .00 |

பாராளுமன்ற அமர்வுக்கு ஒரு தடவை ரூபா 500 வழங்கப்படுகிறது.
குறைந்தது பத்து அமர்வுக்கு 5000 ரூபா கிடைக்கிறது.
2 லட்சத்து 46 ஆயிரத்து 420 ரூபாவுக்கு மேல் ஒரு அமைச்சருக்கு கிடைக்கிறது.

# மலையகத்திற்கு புதிய ரட்சகர்கள் தேவையாம்!

## மின்னல் ரங்காவின் கதம்ப நிகழ்ச்சி.

**எல்லா விளம்பரங்களும்** வியாபார நோக்கம் கொண்டவைதாம். இதில் முன்னிற்பது தொலைக்காட்சி ஊடக விளம்பரமாகும். அந்த வகையில் சக்தி தொலைக்காட்சி மலையக மக்களை கவர்ந்திழுத்து வைத்திருப்பதற்கு சில நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது. வடக்கு கிழக்கின் இன்றைய சூழல் அதற்கு இடம் தராமையால் மலையகத்தைச் பற்றிப் பிடித்துக் கொள்ள அத் தொலைக்காட்சி முன் நிற்கிறது. அதில் ஒன்றே ரங்கா என்பவர் நடாத்தி வரும் மின்னலின் மலையக நேரடி நிகழ்ச்சியாகும்.

கடந்த 28- 10- 2007 ஞாயிறு அன்று மலையகத்தில் இடம் பெற்ற மின்னல் நேரடி நிகழ்ச்சியைப் பார்த்த போது அதன் கதம்பத்தனமும் திசை திருப்பும் போக்கும் வெளிப்பட்டது. மின்னல் ரங்கா கேட்கும் கேள்விகளும் அம்பலப்படுத்துவதாகக் கூறும் விடயங்களும் மலைகத் தொழிலாளர்களுக்கு புதிய விடயங்கள் அல்ல. அவை இப்போது தான் தொழிலாளர்களுக்கு அறியப்படுத்தப்படுகிறது என ரங்காவும் மின்னலும் கூறினால் அது தோட்டத்தொழிலாளர்களை எதுவும் அறியாத முட்டாள்கள் எனக் காட்டும் முயற்சி போன்றதேயாகும்.

சம்பள உயர்வுப் பிரச்சினை வீடு வேலை வாய்ப்பு கல்வி ஆசிரிய நியமனங்கள் போன்ற பிரச்சினைகள் மின்னலில் கூறித்தான் தொழிலாளர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. அதே போன்று தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் ஏமாற்றுக்களும் சுய நலன்களும் சுய ஈடேற்றங்களும் சுகபோக வாழ்வுகளும் இரகசியமானவைகள் அல்ல. அப்படி இருந்தும் ரங்கா என்பவரும் மின்னல் நிகழ்ச்சியும் ஏதோ ரட்சகர் போன்று வந்ததால் தான் பிரச்சினைகள் வெளிவருகின்றன போன்ற தோற்றம் காட்டப்படுகிறது.

அன்றைய நிகழ்ச்சியில் பல தொழிலாளிகள் மாணவர்கள் உரத்துக் கேள்விகள் கேட்பதும் அங்கிருந்த அமைச்சர் சந்திரசேகரம், பா.உ. புத்திரசிகாமணி, திகாம்பரம், கனகராஜ் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ள ஏதோ ஏதோ பதில்கள் கூறியதும் வேடிக்கையாக இருந்தது. சந்திரசேகரம் தான் இன்றைய அரசில் ஒரு அமைச்சர் என்பதைப் பற்றி வெட்கப்படாமலே இ.தொ.கா. வைத் தாக்கிக் கொண்டார். ரங்காவும் தேவையான நேரத்தில் அவரைப் பாதுகாத்து குறிப்பாக இ.தொ. காவையும் ஏனையோரையும் தாக்குவதையும் அவதானிக்க முடிந்தது.

இத்தகைய மின்னல் நேரடிக் கதம்ப நிகழ்ச்சியால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவுமே ஆகப் போவதில்லை. வேண்டுமானல் தொலைக்காட்சியில் முகம்களைக் காணவும் குரல்களைக் கேட்கவும் மட்டுமே முடியும். ஏற்கனவே என். ஜீ. ஓக்கள் எவ்வாறு மலையகத்தில் மாற்று அரசியல் சிந்தனைகள் பரவா வண்ணம் திசை திருப்பி வருகின்றனவோ அவ்வாறே தொழிலாளர்கள் மத்தியில் புதிய அரசியல் தொழிற்சங்க சிந்தனைகளும் செயற்பாடுகளும் முன் செல்லாதவாறு திசை திருப்பிக் கொள்கிறது. அதாவது பாராளுமன்றப் பதவி பெறும் அரசியல் தொழிற்சங்கப் பழைய இரட்சகத் தலைமைகளுக்குப் பதிலாக புதிய இரட்சகர்கள் தேவை என்பதையே ரங்காவின் மின்னல் நிகழ்ச்சி கூற முற்படும் செய்தியாகும். அந்தப் புதிய ரட்சகர்கள் யார்? என்பதே கேள்வியாகும். அத்தகையவர்களின் பாதையும் பயணமும் எத்தகையது? தவறான பாதையில் பயணித்துக் கொண்டு மாடுகளையும் வண்டிகளையும் மாற்றிப் பயனில்லை. பாதையும் பயணமும் உரியவாறு முன்னெடுக்கப் படவேண்டும். அதற்கு முதலாளித்துவ பெரு நிறுவனம் ஒன்றின் காட்சி ஊடகம் எவ்வாறு வழிகா ட்டமுடியும். விளம்பர வியாபாரம் செய்து கொள்ளலாமே தவிர ஒடுக்கப்பட்டு வரும் மலைகத்தமிழ்த் தேசிய இனத்திற்கும் சுரண்டி அடக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழிகாட்ட முடியாது. பிரச்சினைகளுக்கு தீர்வு தேடவும் இயலாது. இதனை நமது மக்களும் தொழிலாளர்களும் தெளிவுடன் புரிந்து கொண்டு புதிய மாற்று அரசியல் தொழிற்சங்கப் பாதையில் வழி நடக்க முன்வரல் வேண்டும்.

இரா. சிவகணேசன்
அட்டன்

## தலைப்பில்லாத கவிதை

உன் அலுவலகத்திற்கழைத்து
நீ செய்யும்
விசாரணைகளும், மிரட்டல்களும்
ஆறு மணிநேரம்
தொடர்ந்து சப்தமிடுதலும்
மதிப்பிற்குரிய என் உழைப்பின்
களைப்பை
ஓய்வுக்குரிய இரவுகளில் கூட
கரைத்துக் கொள்ள முடியாதபடி
நிர்ப்பந்திக்கின்றன.
எனது தொலைபேசியில்
நாய் குரைக்கும்
சப்தம் என்னை அருவருப்பூட்டும்.
உனது அழைப்பிற்கான
எனது தெரிவு அது.

எனது கனவுகளிலும்
உனது கணினி அறையும்
வலது மூலை சிறு கமராவும்
'நீ' யும் வந்து போகின்றன.
என் காதலியை விட அதிகமாய்
விழிகளை உற்றுப்பார்த்தபடியே
கதைத்து கொண்டிருப்பது நீ தான்.
உண்மை சொல்!
எத்தனை முறை
தோற்றுப் போனாய்?
என் நடை பாதைகளிலும்
விழாக்களிலும்
செல்லப் பிராணியாகிவிட்ட
உன் சகாக்களின்
நோட்டம் அறிவேன்.
என்னூர் தபால்காரன்
உனது ஆள் என்பதையும்
என் தொழிற்களம்
உனதினதும் தொழிற்களம்
என்பதையும்
பொது நூலகத்தில், பேருந்தில்
நான் வாசிப்பவை
என்னவென்பதை நீ அறிவாய்
என்பதையும் நானறிவேன்.

ஊற்று நீரை மறித்து
ஊக்க மருந்து
சோதனை நடாத்துகிறாய்
நடாத்து......!
நான் கொண்ட
'பதக்கங்கள்'
நீ தேடுவன அல்ல.
உன் மொழியில் வழியும்
"அன்பும் இரக்கமும்"
மிரட்டலில் பீறிடும்
கோபமும், கோரமும்
உண்மையை ஏதும்
செய்து விடமுடியுமென
நம்பவில்லை.
உனது சாதனைகளாக
இவற்றை முன்மொழிகிறேன்.
என் தாயை ஒரு நாள்
அழ வைத்தாய்
எனை- தோழர்களிடம்
துரோகியாக்கினாய்.

~ஆதிபகவன்~

## பௌத்த தர்மத்திற்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ள இலங்கையில் குற்றச் செயல்கள்

| | | கடத்தல் | வீடுடைத்து கொள்ளை | கொலை | வன்புணர்ச்சி | களவு |
|---|---|---|---|---|---|---|
| பதியப்பட்ட வழக்குகள் | 2006 | 1190 | 9315 | 2045 | 1463 | 7911 |
| | 2007இன் முதல் 6 மாதம் | 667 | 19050 | 918 | 696 | 3518 |
| விசாரணை முடிவுறாத நிலையில் உள்ளவை | 2006 | 910 | 9227 | 1733 | 1398 | 4559 |
| | 2007இன் முதல் 6 மாதம் | 551 | 5580 | 776 | 677 | 2328 |

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தொழிலாளர்களுக்கு ரூபா 30 மட்டுமே

# இ.தொ.கா.விற்கு 5 அமைச்சர்கள்

**தோட்டத்தொழிலாளர்களிற்கு** நாளாந்த அடிப்படை சம்பளம் ரூ 170 விலிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தோட்டக் கம்பெனிகள் கூறுகின்றபடி (?) நாளாந்தம் மொத்த சம்பளம் ரூ 260 இலிருந்து ரூ 290 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி சம்பள உயர்வுபற்றி கூட்டு ஒப்பந்தத்தில் தோட்டக் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களின் சார்பில் இ.தொ.கா, இ.தே. தோ தொ. சங்கமும் (ஐ.தே.க) பெருந் தோட்டத்தொழிற் சங்கக் கூட்டுக்கமிட்டியும் கையெழுத்திட்டுள்ளன. இது ஜனாதிபதியின் ஏற்பாட்டில் நடைபெற்றது. ஒரு சதத்தையேனும் அதிகரிக்க முடியாது என்று சொல்லி வந்த தோட்டக்கம்பெனிகள் ரூபா 30 ஐ அதிகரிக்க ஒத்துக் கொண்டமைக்கு காரணம் ஜனாதிபதியின் வற்புறுத்தலே ஆகும். ஜனாதிபதி 'தனக்காக' இந்த 30 ரூபாவை அதிகரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது பெரியதொரு கருணையான விடயம் போல் தோன்றினாலும் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவை ஈடு செய்யக் கூடிய சம்பள உயர்வல்ல. இதனை 8 சதவீத சம்பள உயர்வென்று எடுத்துக்கொண்டால் வாழ்க்கைச் செலவு கடந்த ஒரு மாதத்திற்குள் 50 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது.



இந்த சம்பள உயர்விற்கு ஜனாதிபதி அழுத்தம் கொடுத்ததேன். வரவு செலவு திட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் போய்விட்டால் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தமுடியாது. பாராளுமன்றத்தை கலைக்க வேண்டி வரலாம். எனவே எப்படியும் இ.தொ.கா.வை வளைத்துப் போட வேண்டியிருந்தது. முன்பு ஜனாதிபதியின் சகோதரரும் ஆலோசகருமான (தற்போது எம்.பியாகவும் இருக்கின்ற) பசில் ராஜபக்ச இ.தொ.கா தலைவரை அவமானப்படுத்தியதாக கூறப்பட்ட காரணத்திற்காக இ.தொ.கா வின் ஐந்து பேர் அமைச்சர் பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தனர். எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடனும சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற மங்கள சமரவீர குழுவினருடனும் இ.தொ.கா நெருக்கமான தொடர்பை வைத்திருந்தது. அந்த நெருக்கம் அரசிற்குப் பாதகமாகி விடக்கூடாது என்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டியமையே இ. தொ. கா. வை இழுத்தமையாகும். தற்போது பாராளுமன்றத்திலும் ஆறு பேர் (பிரதியமைச்சர்களாக இருக்கும் பைசர் முஸ்தபா, சுரேஷ் வடிவேல் ஆகியோர் ஏற்கனவே அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கின்றனர்) இருக்கின்றனர். வரவு செலவு திட்ட வாக்கெடுப்பில் இந்த எண்ணிக்கை தீர்க்கமானதாக இருக்கலாம் என்பதாலேயே ஜனாதிபதி ரூபா 30 சம்பள உயர்வை ஏற்பாடு செய் தார்

இ.தொ.கா உறுப்பினர்கள் விலகிக் கொண்ட பிறகு பாராளுமன்றத்தில் இரண்டு ஆசனங்களை கொண்டிருக்கும் (அமைச்சர் சந்திரசேகரம் பிரதியமைச்சர் ராதாகி ருஸ்ணன்) ம.ம.முக்கு ஜனாதிபதி முக்கியத்துவம் கொடுத்தார். மீண்டும் இ.தொ.கா வை இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி அதனையும் பயன்படுத்திக் கொண்டார்.

இவ்வேளையில்தான் ஜே.வி.பி தொழிற்சங்கமும் ஏனைய தொழிற் சங்கங்களும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வற்புறுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட தயாராகியிருந்தன. இதனை முறியடிக்கும் வகையிலும் இ.தொ.காவை வழிக்கு கொண்டு வரும் வகையிலுமே தோட்டத்தொழிலாளிகளின் மாதாந்த சம்பளத்தை ஆகக்குறைந்தது ரூபா 5000 ரூபா ஆக்க வேண்டுமென்று தோட்டக் கம்பெனிகளை கேட்டிருந்தார். தோட்டக்கம்பெனிகள் ஆம்பத்தில் அதற்கு சம்மத்தை தெரிவித்திருக்கவில்லை.

இவ்வேளை ஜனாதிபதி தோட்டத்தொழிலாளிக்கு சம்பள உயர்வை பெற்றுத் தருவார் என்று நம்புவதாகவும் அதனால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதில்லை என் றும் ம.ம.மு தலைவரும் அமைச்சரு மான பெ. சந்திரசேகரம் கூறியிரு ந்தார். அதற்காக ஜனாதிபதி ம.ம.மு ஐ பாராட்டியிருந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. சம்பள உயர்வு போராட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கு விலையாக ம.ம. மு இன் உபதலைவர்களில் ஒருவரான ஏ. லோரனசுக்கு வெளிநாடொன்றில் இலங்கைத் தூதுவர் பதவி வழங்க வேண்டு மென்று ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின. அவருக்கு தூதுவர் பதவி கொடுப்பதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கவிருப்பதாகவும் கூறப்பட்டது.

அதற்கிடையில் ஜனாதிபதி தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளத்தில் ரூபா 30 உயர்த்தும்படி தோட்டக்கம்பெனிகளை நிர்ப்பந்தித்தார். அதன் படி கூட்டுஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 'தகுதியை' பெற்றுள்ள மூன்று தொழிற்சங்கங்களில் இ.தொ.கா வினை இணங்க வைப்பதில் ஜனாதிபதிக்கும் இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகனுக்குமிடையில் நீண்டநேரம் கையிறு இழுத்தல் நடைபெற்றுள்ளது. சம்பள உயர்வை மட்டுமன்றி தோட்டத்தொழிலாளர்களின் பல பிரச்சினைகளை தீர்க்கும்படியும் கேட்டு ஆறுமுகன் (ஒரு பேச்சுக்காக) நேரத்தை கடத்தியுள்ளார். அந்தப் பலப்பிரச்சினைகளும் தீர்வுகளும் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இறுதியில் ரூபா 30 உயர்வு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இச்சம்பளம் 2009 நவம்பர் வரை அமுல் இருக்க வேண்டும் என்ற கம்பெனிகளின் நிலைப்பாடு மாற்றப்பட்டு 2009 மார்ச் வரை அமுலில் இருக்க வேண்டும் என்பதிலும் உடன்பாடு காணப்பட்டது. அதன்படி கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ரூ 30 டன் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவுக்கான சம்பளஉயர்வு கோரிக்கை அடக்கப்பட்டது.

அத்துடன் இ.தொ.கா வின் ஐந்து பேர் மீண்டும் அமைச்சர்களாகப் பதவி ஏற்றனர்.

இதனால் எரிச்சலடைந்த ம.ம.மு தலைவர் மேற்படி ரூபா 30 சம்பள உயர்விற்கான கூட்டு ஒப்பந்த இ.தொ.காவும் ஏனைய இரண்டு தொழிற்சங்கங்களும் தோட்டத் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்துவிட்டதாக அறிக்கை விட்டிருந்தார். தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக ரூ 300 ஐ வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.



இந்த அறிக்கையின் அடிப்படையில், கூட்டு ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத தொழிற்சங்கங்களை கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்து ம.ம.மு தலைவர் விளக்கமளித்தார். இதில் ஜே.வி.பி தொழிற் சங்கமும், பாட்டாளிவர்க்க புதிய-ஜனநாயக சங்கமும் கலந்து கொள்ளவில்லை.

ம.ம.முயின் இந்த ஏற்பாடு இன்னொரு பம்மாத்தாகும். ஏற்கனவே கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்குப்போடப் போவதாக அறிவித்த போதும் எதனையும் செய்யவில்லை. பின்னர் இ.தொ.ஐ. மு.யும் தொ.தே.சங்கமும் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

ரூபா 30 ஐ பெற்றுத்தந்தது இ.தொ.கா தான் என்று வழமை போல் அது கூறுகிறது. வேறு எவருக்காவது முடிந்தால் அதைவிட அதிகமாக பெற்றுத்தரமுடியுமா என்பதை பார்க்கலாம் என்றும் கூறுகிறது. ஏனைய தொழிற்சங்கங்கள் இச்சம்பள உயர்வு காணாது என்று மாறி மாறி அறிக்கை விடுகின்றது. இ.தொ.கா அரசாங்கத்துடன் நெருக்கமாகி விட்டது என்பதால் ஏற்பட்ட எரிச்சலின் வெளிப்பாடே ஆகும்.

இது ஒரு புறமிருக்க இச்சம்பள உயர்வு தோட்டத்தொழிலாளர்களைப் பொறுத்த வரை தோல்வியே ஆகும். இதனை கொண்டு எவ்வகையிலும் அவர்களின் வாழ்க்கைச் செலவ அதிகரிப்பை சமாளிக்க முடியாது. அவர்களின் அடிப்படை உணவாக இருக்கின்ற கோதுமை மாவின் விலையும் மற்றும் ஏனைய பாவனைப் பொருட்களின் விலைகளும் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

ஆனால் இ.தொ. காவிற்கும் ஜனாதிபதி மஹிந்தவிற்கும் வெற்றி. இ. தொ. காவிற்கு அமைச்சுப்பதவிகளும் அதிகாரங்களும் சலுகைகளும் கிடைத்துள்ளன. வரவு செலவுத் திட்டத்திற்கு ஆறு வாக்குகள் உறுதி செய்யப்பட்டுள்ளதால் மஹிந்தவிற்கு வெற்றியே.

ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பிரச்சினை தொடர்ந்தும் இவ்வாறே இருக்கும். இதற்கு காரணம் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் "தகுதி பெற்றுள்ள" சங்கங்களின் அல்லது இ.தொ. கா வின் குத்துக் கரணங்கள் தான். மறு பக்கத்தில் கூட்டு ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறும் ஏனைய தொழிற்சங்கங்களின் பம்மாத்துக்கள் தொடர்கின்றன.

இவை இரண்டிற்கும் மாறாக உறுதியான தொழிற்சங்க இயக்கம் பலமாக கட்டி வளர்க்கப்பட வேண்டும். அதனூடாக தோட்டக்கம்பெனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் சக்திமிக்க போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த இழுபறி நிலையும் காட்டிக் கொடுப்புகளும், துரோகங்களும் தொடரத்தான் செய்யும்.

**அழகேசன்**

---

# தோட்டத் தொழிலாளர்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்

**இன்றைய அரசாங்கத்தின்** தவறான பொருளாதாரக் கொள்கைகளாலும் யுத்தத்தாலும் நாளாந்தம் பொருட்களின் விலைகள் ஏறிக் கொண்டே செல்கிறன. இதனால் அனைத்து மக்களும் பாதிக்கப்படுகின்றனர். அதேவேளை நாட்சம்பளம் 170 ரூபா (தற்போது 200 ரூபா) பெறும் தோட்டத் தொழிலாளர்கள் தான் அதிகம் பாதிக்கப்படும் மக்களாக உள்ளனர். அவர்களது உணவில் கோதுமை மா முத லிடம் வகிக்கின்றது. அவ்வாறே மண்ணெண்ணைப் பாவனையும் உள்ளது. அவற்றின் விலை இன்று மோசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பெறும் மிகக் குறைந்த சம்பளத்தைக் கொண்டு உணவைப் பெற முடியாத நிலை மட்டுமன்றி தமது பிள்ளைகளின் கல்வித் தேவைகளையும் சுகாதாரத்தையும் சமாளிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் பட்டினி நிலைக்குத் தளப் பட்டு வருகின்றனர். எனவே தோட்டத் தொழிலாளர்களின் இக்கஷ்ட நிலையை இச் சபையின் ஊடாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இவ்வாறு வலப்பனை பிரதேச சபைக் கூட்டத்தில் உரையற்றும் போது புதிய- ஜனநாயக கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் தோழர் ச. பன்னீர் செல்வம் கூறினார்.

மேலும் தோழர் பன்னீர் தனது உரையில் இன்றைய அரசாங்கத்தில் 107 அமைச்சர்கள் இருக்கிறார்கள். பொதுமக்களின் பணத்தில் ஒவ்வொரு அமைச்சரும் லட்சக்கணக்கில் செலவு செய்கிறார்கள். அவ்வாறு சகல வசதிகளையும் ஆடம்பரங்களையும் அனுபவித்த போதிலும் அவர்களுக்கு சாதாரண மக்கள் அனுபவிக்கும் வறுமை மற்றும் கஷ்ட நிலைமைகள் பற்றித் தெரியாது. ஆனால் மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் பிரச்சினைகள் பற்றி முடிந்தளவுக்கு சேவை செய்து வரும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வெறும் ஐயாயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது. இது ஒரு வெட்கக் கேடான விடயமாகும்.

பொருட்களின் விலை உயர்வுக்கு மேலும் காரணமாக யுத்தமும் ஊழல் மோசடிகளும் தொடர்கின்றன. இவற்றுக்கு தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் தவறுமானால் நாடு மேன் மேலும் அழிவுப் பாதையிலேயே செல்லும் என்பது திண்ணம் என்றும் எடுத்துரைத்தார்.

மேலும் தோழர் பன்னீர் செல்வம் மற்றொரு விடயத்தையும் சுட்டிக் காட்டி பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என

## பிரதேச சபையில் தோழர் பன்னீர்

வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். அதாவது வலப்பனைத் தேர்தல் தொகுதியில் இருக்கும் பொது நூலகங்களில் அதிக வாசகர்களைக் கொண்டது ராகலை நகரில் அமைந்துள்ள பொது நூலகமாகும். ஆனால் அதன் இன்றைய நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். அங்கு போதிய இருக்கைகள் ஏனைய தளபாடங்கள் இல்லை. ஆர்வம் மிக்கவர்கள் நூலகத்திற்கு வந்தாலும் பழைய நூல்களே உள்ளன. அண்மைய வருட வெளியீடுகள் வாங்கப்படவில்லை. ஆர்வம் மிக்க வாசகர்கள் அங்கு வந்து புதிய நூல்கள் இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல் வதை அவதானிக்க முடிகிறது.

மற்றொரு விடயத்தையும் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். இந் நூலகக் கட்டிடத்தை கடந்த காலத்தில் கால் நடை அபிவிருத்தி அமைச்சர் சீ. பி. ரட்ணநாயக்கா பிராந்திய காரியாலயமாகப் பயன்படுத்தினார். அக் காலத்திற்குரிய மின் கட்டணம் பல ஆயிரம் ரூபாய்கள் செலுத்தப்படவில்லை. இதனால் பல ஆண்டுகளாக நூலகம் மின்சாரம் இன்றி துண்டிக்கப்பட்டே இருக்கிறது. சுற்று வேலி இன்மையால் ஆடுமாடுகள் நூலகத்தைச் சுற்றி தங்கிக் கொள்கின்றன. அத்துடன் ராகலை நூலகத்திற்குக் கிடைத்த சில லட்ச ரூபாய் பணம் வலப்பனை நூலகத்திற்கு செலவிடப்பட்டுள்ள தாகவும் அறிய முடிகிறது. எனவே இந் நிலையில் இருந்து ராகலை நூலகத்தை மீட்டு உரியவாறு இயங்க வைக்க இப் பிரதேச சபை உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 14 நவம்பர் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 108

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# வரவுசெலவுத் திட்டம் மக்களுக்கு எதிரானது

**2007/ 2008 ஆம் ஆண்டு** இலங் கை அரசாங்கத்தின் துண்டுவிழும் தொகை அல்லது மேலதிகமாக தேவைப் படும் தொகை ரூ 61.8 பில்லியன், ஆகும். இதில் பாது காப்புச் செலவீனம் 16 ஆயிரத்து 644 கோடி 70 லட்ச மாகும். இது கடந்த வருடத்தை விட 19 சதவீதம் அதிக மாகும். இதை விட ஆயுதக் கொள்வனவிற்கு தேவைப் படும்போது பாராளுமன்றத்தில் தீர்மானங்கள் எடுக் கப்படும். ஆக பாதுகாப்பு செலவீனம் என்பது வரவு செலவுத்திட்டத்தில் மட்டும் நிதியொதுக்கப்படுவது டன் நின்றுவிடுவதில்லை. இந்நிலை கடந்த 25 வருடங் களாக நீடித்து வருகிறது.

தற்போது சொல்ல முடியாத பாதுகாப்பு செலவீனங்களு க்குட்பட்டு இருக்கும் மக்களின் எதிர்பார்ப்பு அத்தியா வசியப் பொருட்களின் விலைக் குறைப்பும், சம்பள அதிகரிப்புமாகும். ஆனால் அப்படி எந்தவொரு அற்புதங்க ளும் நடப்பதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என்பது அரசாங்க அமைச்சர்களின் பேச்சுக்களிலும் அறிக்கைகளிலும் இருந்து ஏற்கனவே வெளிப்பட்டுள்ளது. விலை வாசி உயர்வுகளுக்கு யுத்தமும், வெளிநாட்டு சந்தை களில் விலை அதிகரிப்பும் என்ற இரண்டு காரணங் களை கடந்த 25 வருடங்களுக்கு மேல் அரசாங்கங் கள் கூறு வருகின்றன. ஆனால் அவை இரண்டிற்கும் மக்கள் எவ்வகையிலும் பாத்திரவாளிகள் அல்லர். ஆளும் வர்க்கத் தினரே காரணமாவர்.

வருடம் முழுவதும் விலைகளை அதிகரித்துக் கொள்வ துடன் வரவு செலவுத்திட்டத்திலும் விலைகளை அதிகரிக்கும் நாகரீகத்தை கொண்டே முதலாளித்துவ அரசாங்கங்கள் இயங்குகின்றன. அதேவேளை அமைச்சர்கள் அதிகாரிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் செலவுகளை குறைக்க எவ்வித நடவடிக்கைக ளும் எடுக்கப்படுவதி ல்லை. ஊழல், மோசடிகள் துஷ்பிர யோகங்கள் போன் றவற்றினால் ஏற்படும் செலவுகள் அதிகம். அமைச்சர்கள் பலரின் ஊழல்கள், மோசடிக ளை பாராளுமன்றம் தெரிவுக்குழு வெளிக் கொண்டு வந்திருந்தாலும் அதில் ஈடுபட்டவர்கள் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க அரசாங்கம் இடம் கொடுப்பதில்லை. அவை இழுத்தடிக்கப்பட்டே வருகிறது.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக ஜே.வி.பி வாக்களிக்க விருப்பதாக அறிவித்துள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் விரை யங்கள் கட்டுப்படுத்தப்படவில்லையென்று தங்களுடன் அரசா ங்கம் ஒத்துக்கொண்டபடி அமைச்சர்களின் தொகையை 20 இற்குள் அடக்காமல் நூற்றுக்கு மேல் உயர்த்தியுள்ளது. அதனால் அவற்றுக்கு நிதியொதுக்குவதற்கு ஜே.வி.பி வாக்களி க்க முடியாது என்றும் கூறியுள்ளது. ஆனால் ஜே.வி.பி மஹிந்த ராஜபக்சாவின் அரசாங்கம் ஆட்சிக்கு வர பெரிதும் பங்காற்றியது. அரசாங்கத்தின் யுத்த முனைப்புக்கு அரசாங்கத்தை விட விஞ்சி நிற்கும் கட்சியாகவும் அது இருக்கிறது.

ஜே.வி.பி வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க விருப்பதன் நோக்கம் மக்கள் நலன்சார்ந்ததாக இருந்தால் பாதுகாப்பிற்காக கூடியளவு செலவிடப்படுவதை முதன்மையான காரணமாகக் காட்ட வேண்டும். ஏனெனில் அதனாலேயே வாழ்க்கைச் செலவு கடந்த 25 வருடங்களாக மிகவும் அதிகரித்து வந்துள்ளது. ஆனால் அதற்கு ஜே.வி.பி தயாராக இல்லை.

ஐ.தே.கட்சி வரவு செலவுத் திட்டத்தை வாழ்க்கைச் செலவு உயர்விற்காக எதிர்ப்பதாகக் கூறினாலும், பாதுகாப்பிற்கு அதிகம் செலவிடப்படுவதை தவிர்க்கும்படி கூறப்போவதில்லை. அது அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சியென்ற ரீதியில் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கிறது.

வரவு செலவுத்திட்டம் என்ற அரசாங்கத்தின் நிதி மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கத்தை கொண்டு நடத்தமுடியாமல் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டிவரும் அந்நிலையை ஏற்படுத்தவே ஐ.தே. கட்சி வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப்போகிறது. தனித்து அதனால் ஆட்சியைத் தோற்கடிக்க முடியாது. அதனால் ஜே.வி.பி எதிர்ப்பதை வரவேற்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராகவே வாக்களிக்கும். ஏனைய சிறுபா ன்மை இனக்கட்சிகளும் (மு.கா, இ.தொ.கா போன்றன) எதி ர்த்து வாக்களிக்க வேண்டுமென ஐ.தே. கட்சி விரும்புகிறது. அதனை முன் உணர்ந்தே ஜனாதிபதி ஆறு முகத்தை மடக்கி ப்பிடித்தார்.

நிதிமசோதா சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறை வேற்றப்படலாம். அது அரசியலமைப்பு ஏற்பாடுகளுடன் முரண்படுவதாக எடுத்துக்காட்டி உயர்நீதிமன்றம் அம்மசோதாவை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற வேண்டுமென சபா நாயகருக்கு பரிந்துரை செய்ய வேண்டியே ஜே.வி.பி அதற்கு எதிராக வழக்கு தொடுத்தார். அதேபோன்று கலாநிதி சரவணமுத்துவும் ஒரு வழக்கை தொடுத்தி ருந்தார்.

அவ்விரண்டு வழக்குகளையும் விசாரித்த உயர்நீதிமன்றம் அதன் பரிந்துரையை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளது. அதன்படி வரவு செலவுத்திட்டத்தை (நிதிமசோதாவை நிறைவேற்ற) மூன்றில் இரண்டு பெரும்பாண்மை வாக்குகள் அவசியமா இல்லையா என்பதையே உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு தெரிவித்திருக்கும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையென்றால் அரசாங்கத்திற்கு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. அது அரசாங்கத்தின் தோல்வியிலும் பாராளுமன்ற கலைப்பி லும் முடிவடையலாம். சாதாரண பெரும்பான்மை வாக்குகள் போதுமென்று உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தால் வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவது அரசாங்கத்திற்கு இல குவான காரியமே. அச்சந்தர்ப்பத்தில் ஐ.தே. கட்சியும் ஜே.வியியும் எதிர்த்து வாக்களித்தாலும் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாது.

அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு இன்னுமொரு தேர்தலின் பின் இன் றைய இலங்கையின் அரசியல் வளர்ச்சி மட்டத்தில் ஐ.தே. கட்சி அல்லது சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டாளி கட்சிகளுமே ஆட்சிக்கு வருவர். அதன் பின்னர் இன்னொரு வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம். அதுவும் இதே விலையேற்றங்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு விரயங் கள் பெருகுதல் அதிகரித்த பாதுகாப்பு செலவீனம் போன்றவற்றை ஏந்திக்கொண்டே இருக்கும். அப்போது என்ன செய்வது? இன்னொரு ஆட்சி மாற்றத்திற்காக ஓடுவதா?

எனவே மீண்டும் வேதாளம் முருங்கையில் தான் என் பது போன்ற நிலைதான் உருவாகும். மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வும் மூன்றாவது போராட்ட மார்க்கமும் திறக்கப் படாதவரை செக்கிழுத்த பாதையில் தான் ஆட்சி அதிகாரம் தொடரும் மாடுகள் மாற்றப் பட்டு பிரயோசனம் இல்லை.

**–ஆசிரியர் குழு–**

# அரசியல் தீர்வு பற்றிய புதிய ஞானம்

**கடந்த 30-10-2007 அன்று** பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சேர் ஜோண் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு வைபவம் இடம் பெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் சமாதானத்தின் தேவை பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்.

அதே தினம் ஜனாதிபதியின் சகோதரரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தினக்குரல் நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் அரசியல் தீர்வு பற்றி எடுத்துக்கூறி இருக்கிறார்.

மேலும் அனுராதபுரத் தாக்குதல் இடம் பெற்ற பின் வெளிவிவகாரச் செயலாளர் பாலித கொஹணவும் அமைச்சர் ரோகித போகல்லகமாவும் அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு தயாராக இருப்பதாகக் கூறி இருந்தார்கள்.

பாதுகாப்பு அமைச்சர் கோதாபாய ராஜபக்ஷ தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் முன்னைய உற்சாகத்துடன் இன்றி ராணுவத் தீர்வைப் பற்றி அடக்கியே வாசித்தார். அவர் அரசியல் விடயங்கள் பற்றியே கருத்துக்கள் கூறினார்.

ஜே.வி.பி. அனுராதபுரத் தாக்குதலுக்குப் பின்பு ஒரு அறிக்கை மட்டும் வெளியிட்டதுடன் மௌனமாகிக் கொண்டது. ஜாதிக ஹெல உறுமயவும் முன்பு போன்று யுத்த வெறிக் கருத்துக்களை வெளியிட முடியாது அடங்கிக் கொண்டுள்ளது.

அதேவேளை விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்பது போன்று திட்டமிட்டபடி வடக்கு மீதான தாக்குதல்கள் தொடரும் என்ற குரல்கள் ஒரு சில ஒலிக்கவும் செய்கின்றன.

எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சி இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முனைந்து நிற்கிறது. அரசியல் தீர்வு வேண்டும் எனக் கூறி வரும் அக் கட்சி யுத்தத்தை உரியவாறு முன்னெடுக்கத் தவறியமையைச் சுட்டிக் காட்டியே அரசாங்கத்தை எதிர்த்து வருகிறது. அனுராதபுரத்தில் ஏற்பட்ட அழிவுகளைச் வெளிக் காட்டி ரூபா 660 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணக்குக் காட்டி நிற்கிறது. ஆதலால் புதிய யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட வேண்டும் எனவும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் உரத்துக் கூறி வருகிறது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளார்ந்த உற்சாகத்துடன் மனித உரிமை மீறல்களை தமக்குரிய ஆயுதமாகக் கொண்டு இந்தியா அமெரிக்கா ஐரோப்பாவிடம் கோரிக்கை வைத்து நிற்கின்றனர். ஐ.நா. மனித உரிமை கண் காணிப்பு அலுவலகம் இங்கு திறக்கப்படுவதை வற்புறுத்தியும் வருகின்றனர். ஏனைய தமிழ்த் தேசியவாதத் தரப்பினர் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும் என உரத்து வாசித்தும் வருகி ன்றனர்.

இவையாவும் 22-10-2007 அன்று அனுராதபுரம் விமானப்ப டைத் தளத்தின் மீதான புலிகள் இயக்கம் நடாத்திய கடுமை யான தாக்குதலுக்கும் அதன் மூலமான பாரிய இழப்புகளுக்குப் பின்பு அரசாங்க எதிர்தரப்பினரிடம் இருந்து வெளிவந்த கருத்துக்களாகும். இவற்றின் மூலம் தெற்கின் அரசியல் அரங்கிலும் ஆளும் தரப்பின் மத்தியிலும் காணப்படும் கருத்தோட்டங்களை நாடி பிடித்துப் பார்க்க சந்தர்ப்பமாகியுள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ள புலிகளின் அதிரடித்தாக்குதல்கள் அரசாங்கத் தரப்பில் ராணுவ ரீதியிலான அதிர்ச்சியையும் அதன் மூலமான அரசியல் போக்கில் அதிர்வுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால்

**வெகுஜனன்**

இதன் மூலம் யாரும் பிரமைகளையோ கற்பனைகளையோ கொள்ள முடியாது. ராணுவ ரீதியான வெற்றிகள் தோல்விகள் பின்னடைவுகள் முன்னேறுதல்கள் என்பன கடந்த மூன்று தசாப்த காலத்தின் மாறிமாறி ஏற்பட்ட நிகழ்வுகளேயாகும்.

அண்மையில் ஜனாதிபதி ஆற்றிய உரையில் விரைவில் சர்வகட்சி மாநாட்டின் மூலம் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்று கூறியுள்ளார். அத்துடன் இன மோதலுக்கு பயங்கரவாதத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதை வரலாறு நிரூபித்து வந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார். தமது இலக்கு பயங்கரவாதத்திற்கு கப்பம் செலுத்தாத சமாதானத்தை அடைவதே என்பதையும் கூறிக் கொண்டார். அவர் கூறியுள்ள பயங்கரவாதம் புலிகளின் போராட்டத்தையே குறித்ததாக இருந்த போதிலும் அந்தப் பதத்திற்குள் அரச பயங்கரவாதமும் உள்ளடங்கும் என்பதையும் மறந்து விட முடியாது.

ஐ.நா. சபைக் கூட்டத்திலும் புதுடில்லி கருத்தரங்கிலும் அரசியல் தீர்வை முதன்மைப்படுத்தி அழுத்திக் கூற ஜனாதிபதி முன்வரவில்லை. ஆனால் இப்பொழுது அதுவும் ராணுவப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வைத்து அரசியல் தீர்வு பற்றி அழுத் திக் கூறி இருப்பது சிந்தனைக்கு உரியதாகும். அதேபோன்று தான் அரசின் கொள்கை வகுப்பாளர்களும் யுத்தம் பற்றி தாழ் ந்த குரலும் அரசியல் தீர்வு பற்றி சற்று உரத்த குரலிலும் பேசி வருவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே தான் எவ்வளவிற்கு யுத்த சன்னதம் ஆடினாலும் இரண்டு விடயங்கள் முக்கியமானவையாகும். ஒன்று நீதியான யுத்தமாக இருத்தல் வேண்டும். இரண்டாவது ராணுவ ரீதியான வெற்றிக்கு பொருளாதார நிலைமைகள் இடம் கொடுக்க வேண்டும். இவை இரண்டையும் வைத்து நோக்கும் போது அரசாங்கத்தின் யுத்த முனைப்பானது சய புள்ளிகளைக் கொண்டதாகவே உள்ளது.

பேரினவாத நியாயங்களை வைத்தும் பலவீனமடைந்து செல் லும் பொருளாதாரத்தைக் கொண்ட நிலையிலும் யுத்தத்தை நடாத்திச் செல்ல முடியாது. அண்மைய யால, அனுராதபுரத் தாக்குதல்கள் ராணுவ ரீதியான இழப்பை மட்டுமன்றி பொருளாதார ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன என்ற உண்மையை நிராகரித்து விட முடியாது.

எவ்வாறாயினும் இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் முன்வரல் வேண்டும் என்பதே யுத்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்களினதும் சமாதானம் விரும்பும் சக்திகளினதும் விருப்பமாகும். அத்தகைய விருப்பங்கள் நியாயமான அரசியல் தீர்வாக விரிவடைந்து செல்லல் வேண்டும். அப்பொழுது தான் இனப்பிரச்சினை, மனித உரிமை மீறல், மனிதாபிமான உதவி என்பனவற்றின் ஊடாக நாட்டிற்குள் ஊடுருவ முற்படும் அந்நிய ஆதிக்க சக்திகளைத் தடுத்து நிறுத்த முடியும். இதனைச் செய்வதற்கு பேரினவாதத்தையும் ராணுவத் தீர்வையும் ஒரு புறத்தில் ஒது க்கி வைத்து விட்டு துணிவுடனும் நேர்மையுடனும் ராஜபக்ஷ சகோதரர்களும் அவர்களது சகபாடிகளும் முன்வருவார்களா என்பது முக்கியமான கேள்வியேயாகும். "எவ்வளவிற்கு கம்பத்தில் ஏறி நின்று ஆடினாலும் கீழே வந்துதான் காசு வாங்க வேண்டும்" என்பதிற் கிணங்கவே இரு தரப்பும் செயல்பட்டே ஆக வேண்டும்.

புலிகள் இயக்கம் எவ்வளவிற்கு திடீர் தாக்குதல்கள் மூலம் வெற்றிகளை ஈட்டினாலும் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளை நிராகரிக்காது செயல்பட வேண்டும். தமிழ் மக்கள் தரப்பில் ஜனநாயகம் சுதந்திரம் ஐக்கியம் என்பனவற்றின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கான பரந்துபட்ட வெகுஜன மார்க்கத்தை முன்னெடுக்க வேண்டும். ராணுவ வெற்றிகள் மட்டும் யாவற்றையும் தீர்மானித்து விட முடியாது என்பது நடைமுறை அனுபவம் மூலம் உணரப்பட வேண்டும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய இன முரண்பாட்டில் இந்தியாவின் பாத்திரம்

**தென்னாசியப் பிராந்தியத்தில்** இந்தியா அமெரிக்காவின் பங்காளர் போன்று செயற்படுவதாக அமெரிக்காவின் பாதுகாப்பு தலையகமான பென்டகனுக்கு பொறுப்பான பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் தென்னாசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் கூட்டணி என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டிலேயே அவ்வாறு கூறப்பட்டுள்ளது. இந்தியா அமெரிக்காவின் கூட்டணியில் இருக்கிறது என்று கூறுவதை விட அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கக்கூடிய இடத்திலேயே இந்தியா இருக்கிறது என்று காட்டுவதற்கே அமெரிக்கா முயற்சிக்கிறது.


இந்தியாவின் ஆளும்வர்க்கம் சீனாவிற்கு எதிராக நடப்பதாகக்காட்டிக் கொண்டு அமெரிக்காவின் சீன விரோதத்தை இப் பிராந்தியத்தில் முன்னெடுப்பதாகவே இருக்கின்றது. பாகிஸ்தானில் நிலவும் உள்நாட்டு அரசியல் சிக்கல்கள் மற்றும் அங்கிருக்கும் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளின் செயற்பாடுகள் காரணமாக பாகிஸ்தான் அமெரிக்காவின் சிறந்த நண்பனாக இருக்கும் தகுதியை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. சீன எதிர்ப்பு பாகிஸ்தான் எதிர்ப்பு இரண்டையும் வெளிவெளியாக கொண்டிருக்கும் இந்திய ஆளும் வர்க்கம் இரண்டுக்கும் போட்டியாக செயற்படும் நிகழ்ச்சி நிரலை அமெரிக்காவின் அனுசரணையுடன் முன்னெடுத்தும் வருகிறது.

இந்திய நாட்டின் சுதந்திரம், இறைமை போன்றவற்றை சரணடையச் செய்யும் அணு சக்தி கூட்டு ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் செய்தார். அதனை இந்தியப் நாடாளுமன்றத்தின் அங்கிகாரத்தை பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தவும் முயற்சி எடுத்தார். இதற்கு சாதாரண இந்திய மக்களிடமிருந்தும், இடதுசாரிகளிடமிருந்தும் ஜனநாயக வாதிகளிடமிருந்து பலத்த எதிர்ப்புகள் காட்டப்பட்டன. இந்திரா காங்கிரஸ் தலைமையிலான தேசிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்துள் ஆதரவளித்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பன தயக்கத்துடன் அதனை எதிர்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. பாராளுமன்றத்துக்கு வெளியில் இருக்கும் மாக்சிசலெனிசக் கட்சிகள் இடதுசாரிகள் பாரிய வெகுஜன எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தன.


இந்த தாக்கங்களின் காரணமாக அமெரிக்காவுடனான இந்தியாவின் அணு சக்தி ஒப்பந்தம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறுவதும் அமுல்படுத்துவதும் ஒத்திவைக்கப்பட்டது. இது அமெரிக்காவிற்கு பலத்தை அடியாகும். இந்திய மக்களுக்கு கிடைத்த ஒரு வகை வெற்றியுமாகும்.

இந்த நிலைமையில் தான் பென்டகனில் தென்னாசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் கூட்டணி என்ற தலைப்பில் தென்னாசியப் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான மாநாடு கடந்தமாதம் நடைபெற்றது. அதில் இந்தியா அமெரிக்காவின் பங்காளி என்று தெரிவிக்கப்பட்டு அமெரிக்கா சான்றிதல் வழங்கியுள்ளமை தெளிவாகிறது. அமெரிக்காவின் இந்த சான்றிதழ் இந்திய ஆளும் வர்க்கத்தின் அமெரிக்க அடிமை விசுவாசத்தையே எடுத்துக்காட்டியுள்ளது.

காலனித்துவத்திற்கு எதிரான இந்திய சுதந்திரப்போராட்டம் இந்தியாவின் சகல மட்டங்களிலும் அனைத்து இந்திய மக்களின் அர்ப்பணிப்பு, தியாகம், அயராத வீரப்போராட்டங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. காலனித்துவம் இந்தியாவிலிருந்து பௌதிகரீதியாக விலகிச் சென்றதற்குப் பிறகு கடந்த ஆறு தசாப்தங்களாக இந்திய ஆளும் வர்க்கங்களே நேரடியாக ஆட்சியில் பங்கெடுத்து வந்தன. இருப்பினும் வறுமையும் வர்க்க இன மொழி







பிரதேச முரண்பாடுகளுக்கு மத்தியிலும் இன்றைய இந்தியா எழுந்து நிற்பதற்கு வீரப்பாரம் பரியம் கொண்ட சாதாரண உழைக்கும் இந்திய மக்களே காரணமாவர்.

அதற்கு எதிராக செயற்படும் ஏகாதிபத்திய, நவதாராளவாத உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குள் செல்வதையே இந்திய ஆளும் வர்க்கங்கள் அவற்றின் தெரிவாக கொண்டுள்ளன. அரசியல், பொருளாதாரம், சமூகப் பண்பாடு பாதுகாப்பு போன்றவற்றில் இந்தியாவின் சுதந்திரத்தை முழுமையாககாவு கொடுக்கும் நடவடிக்கைகளிலேயே இந்திய ஆளும் வர்க்கம் முனைப்புடன் இருந்து வருகிறது. அதாவது அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் முன்னின்றும் வருகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையில் அமெரிக்கா ஏகாதிபத்திய நலன்களுடன் வித்தியாசங்களைக் கொண்டிருந்தாலும் இந்தியா தனது மேலாதிக்க விஸ்தரிப்புவாத நலன்களை முரண்பாடுகளுக்குள் ஒருமைப்பாட்டை காணும் வகையில் முன்னெடுக்கவே முயற்சிக்கிறது.

இலங்கை அரசாங்கம் போரை முன்னெடுப்பதற்கு பாகிஸ் தானிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் ஆயுதங்களை பெறக் கூடாது. இந்தியாவிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தியா வெளிப்படையாகவே வற்புறுத்திக் கூறியுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கைக்கு சீனாவும் பாகிஸ்தானும் தொடர்ந்து ஆயுதங்களை விற்று வருகின்றன. இந்தியா இடைக்கிடையே அதன் நிபந்தனைகளுடன் விற்று வந்தாலும் அது எந்தளவிலும் இலங்கையின் பேரினவாத முதலாளித்துவ பாதுகாப்பு கட்டமைப்பை உறுதிசெய் வதற்கு மட்டுப்பாடுகளைக் கொண்டி இருக்கவில்லை.

தமிழகத்திலுள்ள சில கட்சிகளும் அமைப்புகளும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதங்களை வழங்கக்கூடாதென்று தொடர்ந்து குரலெழுப்பி வருகின்றன. (இலங்கை தமிழரசுக் கட்சி) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கைகளை விட்டு வருகிறது. ஆனால் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கி வருவதாகவே அண்மைக் காலச் செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்தமாதம் புது டெல்லியில் நடைபெற்ற இப் பிராந்திய தலைவர்களுக்கான “இந்துஸ்தான் ரைம்ஸ்” பத்திரிகையின் மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆற்றிய உரை அதன் பின்னர் இந்தியாவில் வெளியிட்ட கருத்துக்கள் என்பன இந்தியாவின் இராணுவ உதவிகளை இலங்கை அரசாங்கம் பெரிதும் நம்பி இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1980களில் இலங்கையின் இனமுரண்பாட்டில் தீர்மானிக்கும் சக்தியாக வெளிப்படையாக இருந்த இந்தியா மீண்டும் தற்போது வெளிப்படையாக தீர்மானிக்கும் சக்தியாகி வருவதை அவதானிக்க முடிகிறது. 1990களின் இறுதியிலிருந்து தற்போது வரை நோர்வே அனுசரனை மேலோங்கி இருந்தாலும் இந்தியா கண்களை மூடிக்கொண்டு நித்திரைக் கொள்வது போன்று பாசாங்கு செய்து வந்ததே தவிர உண்மையில் நித்திரை கொள்ளவில்லை.

இலங்கையில் யுத்தம் நடக்கின்றபோது மனித உரிமைகள் நசுக்கப்படுகின்ற போதும் தமிழ் நாட்டு கட்சிகளினதும் மக்களினதும் எதிர்ப்புக்குரல்களுக்கு மேலாக இராணுவ உதவிகளை இந்தியா வழங்குவதாயின் அதன் அக்கறை தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது. ஆனால் இடைக்கிடை அரசியல் தீர்வை உச்சரித்துக் கொண்டிருக்கிறது.

நேபாளத்தில் சமாதான முயற்சிகளை (மாவோயிட்டுகளுக்கும் நேபாள அரசாங்கத்திற்குமிடையில்) மேற்கொள்ள இந்திய அரசின் தலையீடு மிகவும் வரையறுக்கப்பட்டதே. அதுவும் நேபாள மன்னரின். அரசிற்கு சீனா இராணுவ உதவிகளை செய்ததும், ஐ.நா. சபையின் பிரசன்னமும் இந்திய அக்கறைகளை நேபாளத்தில் ஆட்டம் காணவைத்ததுள்ளதெனலாம். அந்த அடிப்படையிலேயே அந்த தலையீடு இருந்ததெனலாம்.

# தென் ஆசியா இந்தியாவின் பிராந்தியம்



இந்தியா தென் ஆசியாவின் “ஸ்திரத்தின் தளம்”. அமெரிக்கா இந்தியாவின் பிராந்தியத்தில் சம்பந்தப்பட்டு குழப்பம் ஏற்படுத்த விரும்பவில்லையென அமெரிக்காவின் பென்ரகன் பிரிகேடியர் ஜெனரல் யோன் ஏ. ரூலான் தெரிவித்துள்ளார். அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் தெற்கு தென்கிழக்கு ஆசியாவுக்கான பிரதம இயக்குனராக யோன் ஏ. ரூலான் விளங்குகிறார்.

“நாம் ஒன்றிணைந்து செயற்படவுள்ளோம். இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையேயான முழு உறவின் மூல உபாயமும் இந்தியாவுக்கு தென் ஆசியப் பிராந்தியத்தின் மீதான அக்கறையை உணர்ந்ததன் அடிப்படையிலே அமைந்துள்ளது.”

அமெரிக்க- இந்திய பாதுகாப்பு கூட்டமைப்பு என்ற தலைப் பில் இடம்பெற்ற மகாநாட்டில் முதலாவது பேச்சாளராக உரையாற்றிய ஜெனரல் ரூலான் மேற் கண்டவாறு கூறி னார்.

“அமெரிக்காவும் இந்தியாவும் ஒரு மூல உபாய ஒத்துழைப் பை ஏற்படுத்த முயல்கின்றன. அவ்வாறு செய்வதன் மூலம் எங்களுக்கும் யப்பானுக்கோ அவுஸ்திரேலியாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்குமிடையேயான உறவையொத்த முறைமையை ஏற்படுத்த முயல்கின்றோம்.”

“எவ்வாறாயினும் இந்தியாவுடனான எமது உறவு தனித்துவமானது. இந்த உறவை ஒரு குறித்த வரைவிலக்கணத்துள் அடக்கிவிடமுடியாது”.

“பல்வேறு மதிப்புக்கள் நலன்கள் என்பவற்றை கணக்கில் கொண்டால் எமது ஒத்துழைப்பு ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமில்லாமலே ஆழமாகப் பலமடையும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது.”

“பிராந்தியம் அதன் சுற்றுப்புறம் தொடர்பாக அமெரிக்காவும் இந்தியாவும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. இந்தப் பிராந்தியத்தில் இந்தியா செயற்பட வேண்டும்.”

“இந்தியா பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் பாரிய அனுபவமுடையது என்றும் இந்தியாவிடமிருந்து இது தொடர்பாக அமெரிக்கா கற்றுக் கொள்வதற்கு அதிகம் உண்டு. உதாரணத்திற்கு இந்திய இராணுவம் காஷ்மீரில் நீண்ட காலமாக நிலை கொண்டுள்ளது. ஆனால் 2003ல் எமது படைகள் ஈராக்கில் முதற்தடவையாக இறங்கியபோது எங்களுக்குப் புதுமையாக இருந்தது.”

“சமாதானத்தை நிலை நிறுத்துவதில் இந்தியா தலைமை வகிக்கின்றது. இந்தப்பகுதியில் சமாதானப் படை நடவடிக்கைகளில் அவர்கள் முன் முயற்சி எடுத்துள்ளதுடன் சமாதானப் படைகளைப் பயிற்றுவிப்பதிலும் முன்மாதிரியாய் உள்ளனர். உலகளாவிய ரீதியில் எமது சமாதான நடவடிக்கை முன் முயற்சிகளுக்கு இந்தியா பங்களிப்பு செய்யுமென அமெரிக்கா எதிர்பார்க்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் ஏனைய நாடுகளும் கற்றுக் கொண்டு, பயிற்றுவித்து இந்த முயற்ச்சியில் பங்களிப்பும் செய்ய முடியும்.”

“ஏவாயுத பாதுகாப்பே எமது அடுத்த மூலோபாய ஒத்துழைப்பின் தூணாக அமையும். அமெரிக்காவும் இந்தியாவும் ஏவாயுத பாதுகாப்பு தொடர்பாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளன.”

“இது தொடர்பாக வேறுபட்ட அணுகுமுறையுள்ளதென் பதை நான் அறிகிறேன். நாம் இருவரும் சேர்ந்து ஏவாயுத பாதுகாப் பொன்றை ஏற்படுத்துவோம்.”

இந்தியா அமெரிக்கா பற்றி கனவு காண்போர் அமெரிக்க ஜெனரலின் மேற்படி உரையை விளங்கிக் கொள்வார்களா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# விடுதலையை வாங்கித் தருவது யார்?


**"நாளை முதல் குடிக்க மாட்டேன்"** என்கிற மாதிரி அமெரிக்கா அடுத்த வருடம் இலங்கைக்கு ஆயுதங்களை விற்காது என்று அறிவித்துள்ளது. வெளிவெளியாக இலங்கை அரசாங்கத்தைச் சமாதானப் பேச்சு வார்த்தைகட்குப் போகுமாறு தூண்டுவது போல அமெரிக்கா காட்டிக் கொண்டாலும், உண்மையில் அரசாங்கத்தின் தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் பலவீனப்படுவது பற்றி அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியே. எனவே தான் மனித உரிமைக் கண்காணிப்பு நிறுவனம் முதல் ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையகத் தின் தலைவர் வரையிலான பிரமுகர்கள் வரை இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்க விட் டுத் தனது விமர்சனங்களை அளவோடு வைத்துக் கொள்கிறது.

மியான்மாரில் அண்மைய ராணுவ அடக்குமுறைப் பயங்கரத்தை அமெரிக்கா கண்டித்தளவு உக்கிரமும் சீனாவும் இந்தியாவும் மியான்மார் ராணுவ ஆட்சியினருடன் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்ற வற்புறுத்தலும் சனநாயகம் பற்றியோ மனித உரிமைகள் பற்றியோ உள்ள அமெரிக்க அக்கறையின் விளைவுகளல்ல. மியான்மாருள் ஏகாதிபத்தியப் பொருளாதார ஊடுருவலுக்கு இன்றைய ராணுவ சர்வாதிகாரம் தடையாக உள்ளது. அது உலகமயமாக்கற் கொள்கைக்கு உடன்பாடாக மாறுமானால் மியான்மார் ஒரு நிரந் தர ராணுவ சர்வாதிகாரமாக இருக்க அமெரிக்காவின் பூரண ஆசிகளும் இருக்கும். மியான்மாரில் ஒரு உண்மையான ஏகாதிபத்திய விரோத சனநாயகம் ஏற்படும்போது தான் அமெரிக்காவின் வேஷம் கலையும்.

இந்தப் பின்னணியில் இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் லூயிஸ் ஆபரினதும் பிற மனித உரிமை அக்கறையாளர்களதும் அக்கறைகள் பற்றித் தமிழ்த் தலைமைகளும் அச்சு, வானொலி ஊடகங்களும் காட்டுகிற கரைகடந்த உற்சாகம் பற்றி எச்சரிக்கை வேண்டியுள்ளது.

இந்த விதமான அக்கறைகள் ஏற்கெனவே தெரிந்த உண்மைகளின் ஒரு பகுதியைப் பகிரங்கமாகக் கூறுவதற்கும் அப் பால் எதையுமே சாதிக்கப்போவதில்லை. ஐ.நா. மனித உரிமை ஆணையாளரது பிரதான நோக்கங் கூட இலங்கையில் ஒரு ஐ.நா மனித உரிமைக் கண்காணிப்பு மையத்தை நிறுவுவது போலவே தெரிகிறது. எந்த மனித உரிமைக் கண்காணிப்பும் அரசியல் நோக்கங்கடந்து நடப்பதில்லை. அதன் மூலம் எங்கும் மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட்டதும் இல்லை. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் மக்களைச் சந்திக்க இயலாது போனமை யார் இன்று வடக்கு- கிழக்கின் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முடிவுகளை எடுக்கிறார்கள் என விளங்கும்.

ஆனால் நமது ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் இவ்வாறான விடயங்களைப் பெரிதுபடுத்துவது ஏன்? விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல இயலாது என்று ஐரோப்பிய நிபுணர் ஜெராட் சாலியான்ட் சொன்னதை அரைக்காற்பக்கம் நிரம்பும்



படி கொட்டை எழுத்துக்களிற் போட்டு ஆரவாரித்துள்ளன நமது ஏடுகள் சில. விடுதலைப் புலிகளின் அனுராதபுர விமானத்தளத் தாக்குதல் நமது ஊடகத் துறைத் தமிழ்த் தேசியவாதிகட்கு இன்னுஞ் சிலவாரங் களுக் காவது தாக்குப் பிடிக்கக் கூடிய ஒரு உற்சாக ஊசி. அது வரை சர்வதேச சமூகம் கரு ணை காட்ட வேண்டும் என்று மன்றாடுவதும் வேண்டிய படி கருணை காட்டாத போது கடவுளிடம் "உனக்குக் கல்லு நெஞ்சமா?" என்று நொந்து கொள்கிற மாதிரி அவர்களிடமும் நொந்து கொள்வதும், கடவுளர் போலவே அவர்கள் தொடர்ந்தும் கவனிக்காமல் நடந்து கொள்வதும் கடந்த இரண்டாண்டுகளாகக் கண்டு அலுத்த விடயங்கள்.

அதைவிட விடுதலைப்புலிகள் திருப்பி அடிக்காமல் மாதக்கணக்காகச் சும்மா இருப்பதும் பின் வாங்குவதுமாக உள்ள போது புலம்பல்களிலும் "எதிரி முன்னேறும் போது நாம் பின் வாங்குகிறோம்." என்ற மாஓவின் மேற்கோளில் ஆறுதல் காணுவதும் சற்று முன்பான காலித்துறைமுகத் தாக்குதல் அண்மையயால தாக்குதல் அனுராதபுர விமானத்தளத் தாக்குதல் போன்றவற்றை அடுத்து வீராவேசமாக "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?" என்று எழுதுவதும் ஒரு மன நோய் போலச் சில அரசி யல் ஆராய்வாளர்களைப் பீடித்துள் ளது.

இன்று தமிழ்மக்களின் தேசிய இன விடுதலைக்கான போராட்டம் பல முனைகளிற் பலவீனமடைந்துள்ளதாகவே தெரிகிறது. இவற்றிற் சில தோற்றங்கள் முன்னைக்கால மாயைகளின் கலைவுகள். குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் பற்றிய வீண் விசுவாசங்கள் போர் நிறுத்தக் காலத்திலிருந்து அல்லாவிடின் அதற்குச்சிறிது முன்பிருந்து அந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் பற்றிய மயக்கங்கள் கலைய வேண்டிய ஆதாரங்கள் அப்பட்டமாகவே தெரியத் தொடங்கி விட்டன. மறுபுறம் விடுதலைப் புலிகளால் வரன்முறையான போர் மூலம் அடுக்கடுக்காக வெற்றிகளைக் குவித்துத் தமிழனின் மண்ணை விடுவிக்கலாம் என்பது முதலாகத் தமிழ் மக்களிடயே அக முரண்பாடுகள் இல்லை என்ற கருத்துப் பொய்ப்பிக்கப்பட்டு முன்பு இல்லாதளவுக்கும் தமிழ் மக்கள் பிளவுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பலவீனப்படுத்தல் என்பது அண்மைக்காலப் போர் காரணமான பின்னிடைவுகளைக் குறிக்க நியாயமில்லை. ஆனால் அரசியல் அடிப்படையில் அது பலவீனப்பட்டு வந்துள்ளது. மக்களின் சுய நம்பிக்கையும் தியாக உணர்வும் தளர்வு கண்டுள்ளன. துரோகச் செயல்கள் எனப்படுவனவற்றை மட்டுமன்றித் தமக்கு எதிரான பாரிய குற்றச் செயல்கள் பற்றியும் எதுவுஞ் செய்ய இயலாத நிலையில் மக்கள் உள்ளனர். இதுவே உண்மையான பலவீ னம்.

எந்த ஆயுதத்திலும் வலியது மக்களின் மன உறுதி. அதை வலுப்படுத்தாமல் வேறு எந்த வலிமையையும் நம்பி இருப்பது பயனற்றது. மக்கள் போராட்டத்தின் பிரதான பகுதியாக உள்ள போது அவர்கள் அதற்குப் பொறுப்பானவர்களாகின்றனர். தோல்விகளிலிருந்து கற்கின்றனர். முடிவில் தோல்விகளை வெற்றிகளாக மாற்றுகின்றனர். இது தான் மக்கள் போராட்ட அரசியலின் மகிமை. ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றிக்கான மார்க்கம் வேறு கிடையாது.

நமது தலைமைகளும் ஊடகங்களும் இந்த விடயத்தைப் பேசுவதை மட்டுங் கவனமாகவே தவிர்ந்து வருகின்றனர். மாறாக அவர்கள் விடுதலைப் புலிகளின் வெற்றிகளைப் பற்றிப் பேச இயலாத வேளைகளில் மனித உரிமை மீறல்கள் பற்றிப் புலம்பி ஆறுதல் சொல்லுகிற அந்நியர்களுக்குப் பின்னால் அடியழித்து வழிபட்டு அலைகின்றன. இது தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தின் பெரிய அவலங்களுள் ஒன்று.

**-மோகன்-**

# வடபுல முஸ்லீம்களின் வெளியேற்றம் ஒரு வரலாற்றுக் கொடுமை!

**கடந்த ஒக்ரோபர் மாதம் 27ம்** திகதியுடன் வடபுலத்து முஸ்லீம் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் வெளியேற்றப்பட்டு 17 வருடங்கள் முடிவடைந்து விட்டன. சுமார் ஒரு லட்சம் மக்கள் குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்குள் பலவந்தமாக வெளி யேற்றப்பட்ட ஒரு வரலாற்றுக் கொடுமை 1990ல் நடந்தேறியது. கைகளில் எடுத்து வரக் கூடிய உடுப்புகளும் சிறுதொகைப் பண மும் மட்டுமே தம்முடன் எடுத்துவர அனுமதிக்கப்பட்டனர். ஏனைய அசையும் அசையாச் சொத்துக்கள் யாவும் கைவிட்ட நிலையிலேயே முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். பலநூறு ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாகத் தாம் வாழ்ந்த தாயக பூமி



யில் இருந்து முஸ்லீம் மக்கள் விரட்டப்பட்டனர். துப்பாக்கி முனையில் இடம் பெற்ற இவ் வெளியேற்றத்தை மொழியாலும் பிரதேசத்தாலும் ஒன்றுபட்டு சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அச்சம் நிறைந்த மௌனத்துடன் கலங்கிய கண்களுடன் பார்த்து நின்றனர். அதற்கு அப்பால் அவர்களால் எதையும் செய்ய இயலவில்லை என்பதும் ஒரு வரலாற்றுக் கறை தான்.

இவ்வாறு வடபுலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் புத்தளத்தில் 161 அகதி முகாம்களிலும் அனுராதபுரத்தில் 14 அகதி முகாம்களிலும் குருநாகல், கொழும்பு, ஆகிய மாவட்டங்களிலும் தஞ்சமடைந்தனர். தமது தாயக மண்ணின் சூழல்களில் இருந்து அறித்தெறியப்பட்ட வாழ்வை அந்நியமான வேறு பிரதேசங்களில் நிலை நிறுத்திக் கொள்ள இயலாது அம் மக்கள் பட்ட துன்பங்களும் வேதனைகளும் விபரிக்க முடியாதவைகளா கவே நீண்டு செல்கிறது. 'வடபுலத்தார்' 'அகதிகள்' 'வந்தேறு குடிகள்' போன்ற பெயர்களில் அம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவாறே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். கூடுதலான வடபுலத்து முஸ்லீம் மக்கள் புத்தளத்தையே தமக்குரிய பாதுகாப்பான பிரதேசம் என்ற நம்பிக்கையில் வந்தடைந்தனர். சக முஸ்லீம் மக்களின் ஆதரவும் அரவணைப்பும் இருக்கவே செய்தது. பல அகதி முகாம்கள் உருவாக்கப்ப ட்டன. நிவாரண உதவிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டன.

அகதி முகாம்களில் இடநெருக்கடியும் சுகாதார கல்விப் பிரச்சினைகள் தொடர்கின்றன. வேலை வாய்ப்புப் பிரச்சினைகள் உருவெடுத்தன. வியாபார த்தில் தொழில்களில் போட்டியும் நெருக் கடிகளும் விரிவடைந்தன. அத்துடன் அரசியல் போட் டா போட்டிகளும் தலைதூக்கிக் கொண்டன. எவ்வளவிற்கு முஸ்லீம் மத ஒற்றுமை சமத்துவம் சகோதரத்துவம் பேசிய போதிலும் நடைமுறை வாழ்வில் வர்க்க ரீதியான ஏற்றத்தாழ்வுகள் நன்கு பாராட்டப்பட்டன. வட புலத்தில் வாழ்ந்த காலத்து வசதி படைத்தோர். அல்லது அந்தத் தெரு முஸ்லீம் இந்தத் தெரு முஸ்லீம் என்ற பாகு பாடுகள் அகதி முகாம்களிலும் தொடர்வது காணப்பட்டது.

இவ்வாறு வடபுலத்து முஸ்லீம் மக்கள் இடப் பெயர்வின் பன்முக அவலங்களை அனுபவித்த மக்களாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அண்மையில் புத்தளத்தில் வாழ்ந்து வரும் வடபுலத்து முஸ்லீம் மக்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட வீடுகள் பற்றிய பிரச்சினையில் இரண்டு முஸ்லீம் அமைச்சர்கள் எதிரும் புதிருமாக நடந்து கொண்ட தைக் காண முடிந்தது.

அவ் விவகாரத்தில் பிரதேசவாதத்தால் வடபுலத்து முஸ்லீம்கள் புத்தள முஸ்லீம்கள் எனப் பிரிந்து நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதேவேளை புத்தளம் மாவட்டத்தில் முஸ்லீம் பெரும்பான்மை அதிகரிப்பது பேரினவாதிகளுக்குப் பெரும் உறுத்தலாகவே உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு பேரினவாத அமைச்சர் ஒருவர் புத்தளத்திலிருந்து வடபுலத்து முஸ்லீம் அகதிகள் வெளியேற்றப்பட வேண்டும் என எடுத்துரைத்தார். சொந்த இடத்திலும் வாழ முடியவில்லை. வந்த இடத்திலும் நிம்மதி பெறமுடியவில்லை. 18வது வருடத்தினுள் அவர்கள் துன்பதுயரச் சுமைகளுடன் பிறவேசித்துள்ளனர்.

வடபுலத்து முஸ்லீம்களைத் தாம் வெளியேற்றியமை தவறு என்பதைப் புலிகள் இயக்கம் காலம் கடந்து ஏற்றுக் கொண் டது. முஸ்லீம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறத் தாம் முழு ஆதரவு தருவதாகவும் புலிகள் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து சிறு தொகை முஸ்லீம்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று பார்த்த போதும் அங்கு அவ ர்களால் நிலைக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் தமது வீடுவாசல்கள் வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழந்து நிற்கின்றனர். அரசாங்கம் அம் மக்கள் பற்றி பெரிதாக எதனையும் செய்யத் தயாராக இல்லை. அத்துடன் வடபுலத்து யுத்த சூழலும் முஸ்லீம் மக்களது மீள் குடியேற்றத்திற்கு இடமளிக்கவில்லை. வெறுப்பும் விரக்தியும் நம்பிக்கையீனமும் அவலங்களுமே வடபுலத்து முஸ்லீம் மக்களின் இன்றைய வாழ்வாகத் தொடர்கின்றது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

### தேசிய இன முரண்பாடு

6ம் பக்க தொடர்ச்சி

இலங்கையில் சீனா, பாகிஸ்தான் என்பவற்றின் இராணுவ உதவிகளுக்கு எதிராக செயற்படுவதாயின் இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்குவதாகவே இருக்கும். இது மேலாதிக்க நிலைப்பாடேயன்றி இலங்கையில் சமாதானத்தை கொண்டு வரவேண்டு மென்ற அவாவல்ல.

ஆக இலங்கையின் இனப்பிரச்சினையில் மீண்டும். தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள இந்தியா தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமைக்கு எதிராக இருக்கிறதா? ஆதாரவாக இருக்கிறதா? அல்லது பேரினவாத அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிறதா? ஆதரவாக இருக்கிறதா? போன்ற கேள்விகளுக்கு பதில் மிகவும் இலகுவானது. அந்த பதில்களின் அடிப்படையில் இலங்கையின் அனைத்து தேசிய இனங்களும் சிறுபான்மை சமூகங்களும் தனித்துவ மாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் சமத்துவத் துடனும், ஐக்கியத்துடனும் வாழ்வதற்கான அரசியலமைப்பைக் கட்டு வதற்கான அக்கறை ஏற்படுமா? இந்தியா இவற்றில் எந்தளவிற்கு நேர்மையாக நடந்து கொள்ளும் என எவராவது எதிர்பார்க்க முடி யுமா?

அந்த அக்கறையை வலுப்படுத்தும் வகையில் இந்தியாவின் முற்போக்கு, இடதுசாரி, ஜனநாயக சக்தி கள் குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்களின் நிகழ்ச்சி நிரல்கள் விரிவுபடுத்தப்படுமா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மனித உரிமைகள் மீறலும் சர்வதேச மாயையும்

## இலங்கையில் ஐ.நா மனித உரிமை அலுவலகம் திறக்கப்படுவது அவசியமா?

**இலங்கையில் ஆட்கடத்தல்கள்,** கைதுகள், கொலைகள் காணாமல் போதல்கள் பரவலாக நடக்கின்றன. அவை கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கான பொலிஸ் விசாரணைகள், புலனாய்வுகள் பயனளிக்கவில்லை. மூதூரில் வெளிநாட்டு தன்னார்வ அமைப்பில் வேலை செய்த 17பேர் கொல்லப்பட்டமை திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டமை பற்றிய விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமுமில்லை. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர்கள் இருவர் கொழும்பில் கடத்தப்பட்டு அவர்களின் உடல்கள் இரட்னபுரியில் காணப்பட்டன. அது தொடர்பாக பாதுகாப்பு படையை சேர்ந்த முன்னாள் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த போதும் அவ் விசாரணைகளுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. இவ் விசாரணைகள் வெளிப்படையான தன்மையைக் கொண்டதாக இல்லை. இவைப்பற்றி இலங்கையின் நீதித்துறையாலும் எதுவும் செய்ய முடியவில்லை. ஆணைக்குழு விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் வெளிநாட்டு சட்டத்துறை நிபுணர்கள் அதனை கவனிப்பதற்கெனவும் அழைக்கப்பட்டனர். அந்த விசாரணைகள் சாதாரண விசாரணை தராதரங்களையும் அடிப்படைகளையும் கொண்டிருக்கவில்லை என்று அந் நிபுணர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசரும் சமூக வழக்கா டும் உரிமையை உயர்த்தி பிடிப்பவரு மான டி.என். பகவதி மேற்படி ஆணைக்குழுவின் விசாரணைகளின் தரமற்றத்தன்மை, குறைபாடுகள், பாரபட்சங்கள் பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் அலட்சியம் செய்யக் கூடியவை அல்ல.

அதற்கு பதிலளித்த இலங்கையின் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி. சில்வா எழுதிய கடிதம் கடுமையான பதங்களைக் கொண்ட



வையாக இருந்ததேயன்றி அவரின் திணைக்களத்தின் பொறுப்பை உணர்ந்து எழுதப்பட்டதாக இருக்கவில்லை. சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணைகளை நடத்தும் கடமையை மட்டும் கொண்டுள்ளதாகவே தெரிவித்துள்ளார். மாறாக ஆணைக்குழு விசாரணைகள் நிகழ்வுகளை கண்டறியும் விசாரணையையே சட்டமா அதிபர் திணைக்களம் நடத்துகிறது. அதன் மூலம் சாதாரண புலனாய்வுகளில் கண்டறிய முடியாத விடயங்களை கண்டறிய முடியும். அது ஒருவகையில் புலனாய்வே ஆகும். மேலும் புலனாய்வாளருக்கு உதவும் கடப்பாட்டையும் சட்டமா அதிபர் திணைக்களம் கொண்டுள்ளது.

இந்த நிலைமையில் உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இலங்கையின் மனித உரிமை மீறல்களில், சட்ட ஒழுங்கு நிறுவனங்கள், நீதி நிறுவனங்கள், விஷேட ஆணைக்குழு விசாரணைகள் போன்றவற்றின் போதாமை பற்றி பிரசாரப்படுத்தி வந்தன. இவைகள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. அதன் பின்னர் இலங்கைக்கு ஐ.நா.ம.உ. ஆணைக்குழுவின் அதிகாரிகள் வந்து சென்றனர். அவர்கள் இலங்கையின் மனித உரிமை மீறல்களை, அவதானிக்க ஐ.நா.ம.உ.ஆ வின் அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமென சிபாரிசு செய்தனர்.

கடந்த மாதம் ஐ.நா.ம.உ.ஆ. குழுவின் தவிசாளர் லூயிஸ் ஆபர் இலங்கைக்கு வந்தார். அவர் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டபோதும் மக்களை குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களை சுதந்திரமாக சந்திக்க வாய்ப்பளிக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்திற்கு அவர் செல்லவில்லை. கிளிநொச்சிக்கு செல்ல அவருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. கொழும்பு சிறைச்சாலைகளில் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை ஆபர் சந்திக்க வேண்டுமென்று வற்புறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். அவர்களில் ஐந்து பேரை சிறைக்கு வெளியில் ஓரிடத்தில் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

ஆபரின் விஜயத்தின் முடிவில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி விமர்சனங்களை முன்வைத்ததுடன், ஐ.நா.ம.உ.ஆ. யின் அலுவலம் ஒன்றை இலங்கையில் திறகக்க இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினார். அதனை இலங்கையின் மனித உரிமைகளுக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்கா நிராகரித்தார். இதனையடுத்து அவரின் அமைச்சின் கீழ் இயங்கிய ஆலோசணைக் குழுவில் செயலாற்றிய ஆலோசகர்கள் நால்வர் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். அவர்களில் சில இடதுசாரிகளும், தாராளவாதிகளும் இருந்தனர். அவர்களும் இலங்கையில் ஐ.நா.ம.உ.ஆ குழுவின் அலுவலகம் ஒன்றை திறக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்தனர். கடந்த மாதம் ஐ.நா. பொதுக் கூட்டத்தின் போது இலங்கை அரசாங் கத்தின் பிரதிநிதிகள் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்பான பதில்களை கூறவில்லை என்று அந்த ஆலோசகர்கள் விமர்சனச் செய்கின்றனர்.

கடந்தமாதம் நடைபெற்ற ஐ. நா. சபை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் பாரிய அளவில் இல்லை என்று கூறியுள்ளதுடன் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதில் முன்னணியில் நிற்பதாகவும் கூறியுள்ளார். பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு உதவவேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்தார். இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழித்தப் பிறகே அரசியல் தீர்வு பற்றி கவனஞ் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த கூறிவருகிறார். ஆபர் இலங்கையில் தங்கியிருக்கும் போது கூட கடத்தல்கள், கொலைகள் நடைபெற்றன. தற்போது குற்றச்சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் போது பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் சந்தேகநபர்கள் கொல்லப்பட்டதாக ஏறக்குறைய நாளாந்தம் கூறப்படுகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலை 1971, 1988-89-90 கால கட்டங்களிலும் நிலவியது. இன்றைய சூழ்நிலை முன்பைவிட மிகவும் மோசமாகவே இருக்கிறது.

சோவியத்யூனியன் பலமாக இருந்த காலத்திலிருந்து அது வீழ்ச்சியடையும் வரை ஐ.நா முற்று முழுவதுமாக அமெரிக்காவின் கருவியாக இயங்கியதெனக் கூறமுடியாது. ஒரு வித மான அதிகார தளம்பல் பேணப்பட்டது. ஆனால் தற்போது அமெரிக்காவின் ஏகாதிபத்திய உலகமயமாதலின் கருவியாக ஐ.நா. இயங்குகிறது. அதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் செல்வாக்கும் குறிப்பிடத்தக்களவு இருக்கிறது. ஜப்பானும் செல்வாக்கு செலுத்துகிறது. சீனாவினதும், ரஷ்யாவினதும் வீட்டோ அதிகாரங்கள் என்பதைவிட ஐ.நா அமெரிக்காவின் பிடியிலேயே இருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் தான் ஐ. நாவின் ம.உ.ஆ. வின் அழுத்தங்களை இலங்கையின் பேரினவாத அரசாங்கத்தின் மீது பிரயோகிக்க முடியும் என்று சிலர் நம்புகின்றனர். இதில் தமிழ் தேசியவாத சக்திகள் அளவு கடந்த நம்பிக்கையை வெளிக்காட்டி வருகின்றன.

ஐ.நா. வில் ஆதிக்கம் செலுத்தும் சர்வதேச சக்திகள் அவற்றின் "நடுநிலைமை" "நேர்மை" எல்லாவற்றையும் ஏகாதிபத்திய மேலாதிக்க அக்கறைகள் என்ற சிறைக்குள்ளேயே வைத்திருக்கின்றன. தேசிய அரசுகளின் மனித உரிமை மீறல்கள் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்க்கும் வெகுஜன நடவடிக்கைகள் பலவீனமாக அல்லது செயலற்று இருக்கும்போது அவற்றை கட்டுப்படுத்தும் எந்தப் பொறிமுறையும் இங்கு இல்லை. அதனால் ஏகாதிபத்திய மேலாதிக்க அழுத்தங்களிலேயே தன்னார்வக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் தங்கி இருக்கின்றன. மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சில பாராளுமன்ற வாதிகள், தொழிற்சங்கவாதிகள் தன்னார்வ செயற்பாட்டாளர்கள் அவர்களின் இயலாமையால் அடக்குமுறை அரசிடமே நீதியை கேட்கலாம் என்ற நம்பிக்கையை வளர்ப்பதுடன் "சர்வதேச சமூகத்திடம்" முறைப்பாடு செய்வதையும் அவர்களின் உயர்ந்தபட்ச நடவடிக்கையாகக் காட்டி வருகின்றனர்.



அதேவேளை இலங்கை அரசாங்கம் கூறுகின்ற காரணங்களுக்காகவன்றி இலங்கையின் சுதந்திரம் இறைமையைப் பாதிக்கின்ற பல விடயங்களை 'சர்வதேச சமூகம்' செய்து வருகின்றது. அதன் பொறிக்குள் மாட்டிக்கொண்டுள்ள இலங்கை அரசாங்கம் அதற்கு எதிராக அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டுவருகிறது. இலங்கையில் ஐ.நா. ம.உ. ஆ குழுவின் அலுவலகம் திறக்கப்படுமாயின் மனிதஉரிமை மீறல்கள் அறிக்கை செய்யப்படலாமேயன்றி அதற்கு அப்பால் எதையும் என்று எதிர்பார்க்க முடியாது. இவற்றைவிட இலங்கை அரசாங்கத்திற்கு உடனுக்குடன் அழுத்தங்கள் அதிகரிக்கலாம். அந்த அழுத்தங்கள் மனித உரிமை மீறல்களை குறைக்கும் என்று கூறமுடியாது. சர்வதேச சமூகம் 'நேர்மையாக இருந்தால்' இங்கு அலுவலகம் திறப்பதைவிட வேறு அர்த்தமுள்ள அழுத்தங்களை கொடுக்கலாம். ஆனால் அது அலுவலகம் திறப்பது போன்ற தலையிடும் நடவடிக்கைகளிலேயே அக்கறை செலுத்துகிறது. அதன் அக்கறை அப்படியானதே.

மனித உரிமை மீறல்களுக்கு எதிரான போராட்டங்கள் உள்நாட்டில் நடத்தப்படுவதுடன், சர்வதேச அழுத்தங்களை கொண்டதாகவும் அமைய முடியும். இம் மண்ணிலிருந்து போராட்டங்களை "சர்வதேச சமூகத்திற்கு" கையளிக்கப் படுவது என்பது இயலாமையாவதுடன் வெறும் நம்பிக்கையை வளர்ப்பதாகவே இருக்கும் சர்வதேசத்திற்கு கையளிக்கப்படும் எல்லா நடவடிக்கைகளாலும் மக்களுக்கும், நாடுகளுக்கும் இழப்புகளே அதிகம்.

இங்கு இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி எதிர்க்கட்சியினர் பேசி வருகின்றனர். சில அமைப்புகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பங்கெடுத்தும் வருகின்றனர். இடதுசாரி சக்திகளிடமிருந்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை. தன்னார்வ அமைப்புகள் அவற்றின் திட்டங்களுக்குள் மூழ்கியுள்ளன.

இந்நிலைமையில் அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற்றுவருவதாகச் செய்யப்படும் பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் பகுதியாகவே மனிதஉரிமை மீறல்கள் இடம் பெறுவதாக அவர்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்கம் தான் இலங்கையின் இறைமை சுதந்திரம் போன்றவை பறிக்கப்படுவதற்கான அடிப்படையாக இருக்கப்போகிறது. யுத்தம் நிறுத்தப்பட்டு இலங்கை ஆகக்குறைந்தளவிலாவது ஜனநாயகப்படுத்தப்படாவிட்டால் தற்போதைய இக்கட்டிலிருந்து நாடு மீளமுடியாது. இறைமை, சுதந்திரம் போன்றன ஆபத்திற்குள்ளாகியுள்ளனமைக்கான காரணம் யுத்தமே என்பதை சிங்களமக்கள் புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட வேண்டும். அவர்கள் பேரினவாத போதைக்கு அடிமையாகி, ஆளும் வர்க்க அதிகார சக்திகளின் ஏமாற்றுக்களை தொடர்ந்தும் ஏற்றுக் கொண்டால் நாடும் இறைமையும் சுதந்திரமும் பறிபோவதை தடுக்க முடியாத நிலையே தோன்றும். அத்தகைய சூழலில் இப்போதைய விலைகளை விடப் பாரிய விலைகளை மக்கள் அனைவரும் செலுத்த வேண்டியே ஏற்படும்.

# அழிக்கப்படும் அரசியல்

## அரசியலை அபிவிருத்தியிலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டுமாம்!

பேராசிரியர்:- பிரபாத் பட்நாயக் (மாக்சிய ஆய்வாளர்)
இந்தியாவின் மார்க்சிச ஆய்வாளர்
தமிழில் : அஸ்வத்தாமா

"அரசியலை அபிவிருத்தியிலிருந்து பிரித்துப் பார்க்க" இன்று இந்த மந்திரம் எங்கும் ஒலிக்கிறது. நாட்டின் ஜனாதிபதி இதைத் தான் சொல்கிறார். பிரதமர் இதைத்தான் சொல்கிறார். வருகை தருகிற உலக வங்கி உயரதிகாரிகள் இதையேதான் சொல் கிறார்கள். உள்ளூர் அரசியல்வா திகள் முதல் ஊடகங்கள் வரை இதே கருத்தைத் தான் எதி ரொலிக்கி றார்கள். அரசியல் என்றால் வேறொரு கருத்தாக்கமாக, மாறுபட்டவர்க்க நிலைப்பாடுக ளாக முன்வைக்கப்படுவது அதி கரித்து வருகிறது.

அர சியலை அபிவிருத்தியிலி ருந்து பிரித்துப் பார்க்க எனக் கூறுவ தன் மூலம், உண்மை யான "அபிவி ருத்தி" என்றதொரு கருத்தாக்கம் இருப்பது போல வும், அது தான் எல்லாவற்றையும்விட மேலானதாக ஓங்கியிருப்பதாகவும், அதற்கு எதிராக யாரும் பேசக் கூடாது என்பதாகவும் வலியுறுத் தப்படுகிறது. அனைத்து வர்க்க ங்களின் மீதும் அனைத்து அரசியல் சக்திகளின் மீதும் "அபிவிருத்தி" என்பது குறித்த ஒரு குறிப்பிட்ட கருத் தாக்கம் திணிக் கப்படுகிறது. அந்தக் கருத்தாக் கத் தைத் திணி ப்பது உலக நிதி மூல தனம். இந் தத் திணிப்பு வெறும் பொருளாதார ஆளுமை தொடர்பானது மட்டுமல்ல, கருத்து ஆளுமை தொடர்பானதும் கூட. இது ஒரு வகையில் கருத்துநிலை சர்வாதி காரத்தை வளர்க்கின்ற செயன்முறையே. .இப்படிப்பட்ட ஒரு கருத்துநிலை சர்வாதிகாரத்தை வளர்ப்பது என்பது எப்போதுமே முதலாளித்துவ அமைப்பின் பண்பாக இரு ந்து வந்துள்ளது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு எதிரான அறிவுக் களப் போராட்டத்தை நடத்திய முதலாளித்துவ அறிஞர்கள், "இயற்கையான ஒழுங்கமைப்பு" என்றொரு கருத்தாக்கத்தைக் உருவாக்கி விட்டார்கள். தங்களது கோட்பாடுகள் யாவற்றை யும் "இயற்கை விதிகள்" என்ற வடிவத்திலேயே வார்த்துக் கொடுத்தார்கள். ஏன் அப்படிச் செய்தார்கள் என்றால், அரசாங் கக் கட்டுப்பாடில்லாத வர்த்தக அமைப்பு என்பதாக அவர்கள் முன்வைத்த முதலாளித்துவ அமைப்பின் செயல்முறை நிலப்பிர புத்துவ வணிக அமை ப்பிலிருந்து மாறுபட்டது என்று வாதிட அவர்கள் விரும்பினா ர்கள். நிலப்பிரபுத்துவ அமைப்பில் ஏகபோக உடைமை, கட்டு ப்பாடுகள், சிலருக்கு மட்டும் சலுகைகள், ஆதர வுகள் என்ற சிக் கல்கள் காரணமாக பெருங்குழப்பமும் அராஜ கமும்தான் விளை ந்தன; ஆனால் கட்டுப்பாடுகளற்ற முதலாளி த்துவ அமைப்பு ஒழுங்கையும் சமூக நிலையையும் கொண்டு வரும் என்றார்கள். அப்படிச் சொன்னால் மட்டும் போதாது என்ப தால் அதற்கு விளக்கமும் அளிக்க வேண்டியிருந்தது. அப்படி அவர்கள் அளித்த விளக்கம்தான், இயற்கை விதிகளின் கீழ் முதலாளித்துவம் இயங்கும் என்பதாகும். இயற்கை எப்படி தனக்கென விதிகளை வகு த்துக் கொண்டிருப்பதாக அன்று தெரிய வந்திருந்ததோ, அதேபோன்ற இயற்கை விதிகள் அடிப்ப டையில் முதலாளித்து வம் இயங்கும் என்றார்கள். அதுவரையில் இருந்து வந்த கட்டுப்பாடுகளும் தலையீடுகளும்தான் "கட்டற்ற வர்த்தகத்தின்" இயற்கையான நிலைமைகளுக்கு முட்டுக்கட் டையாக இருந்து வந்தன என்றார்கள்.

கட்டற்ற வர்த்தகம் எப்போது வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துவிட்டதோ, "அன்றுமுதல்" அதன் பயனாக "இயற்கையான ஒழுங்கமைப்பு" நிலவியிருக்கும் என்று கூறினார்கள். "இது வரையில் வரலாறு என ஒன்று இருந்து வந்தது; இனி அப்படி இருக்காது" என முதலாளித்துவவாதிகள் சித்தரித்ததாக கார்ல் மார்க்ஸ் தமது "தத்துவத்தின் வறுமை" என்ற நூலில் குறிப்பிடுகி றார். முதலாளித்துவவாதிகளின் இந்த வாதம், கருத்துநிலை சர்வாதிகாரப் பிரகடனமாகவும், ஒரு தெய்வ நிலைக்கு முதலாளித்துவத்தை உயர்த்தி வைப்பதாகவும் இருந்தது. ஹெகலியம் முன்வைத்த "இருத்தலியல்வாதம்" என்பதை (அதாவது எது இப்போது இருக்கிறதோ அதுதான் வரலாற்றின் இறுதிக் கட்டம் என்பதை) உயர்த்திப் பிடிப்பதாக இருந்தது. (இதன் தாக்கத்தை .ஃ.பியூக்குயாமா [Fukuyama] போன்ற இன்றைய ஆய்வாளர்களின் எழுத்துக்களில் காணலாம்.)

இப்படியொரு கருத்துநிலை சர்வாதிகாரம் என்பது இன்றைய ஆளும் வர்க்கங்களுக்கு மிக மிகத் தேவைப்படுகிறது. நவீன தாராளவாதக் கொள்கைகள் பொருளாதார ஏற்றத்தாழ்வுக ளும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் மிகப் பெரிய அளவில் அதிகரிப்பதற்கு வழி வகுத்துள்ளன. சிறு உற்பத்திகளை பெரும் நெருக்கடியில் தள்ளி விட்டுள்ளது. வேலையின்மை வீதத்தை அதிகப்படுத்தியதுடன் பட்டினியையும் அதிகரித்துள்ளன. இப்படியெல்லாம் நடக்கவில்லை என்று நமது நாட்டு அனுபவங்களின் அடிப்படையில் கூட மறுத்துவிட முடியாது.

எனவே, இங்கே அரசியல் பற்றிய கேள்வி இன்றைய முதலாளித்துவ வாதிகளுக்கு இயற்கையாக ஏற்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஜனநாயகத் தேர்தல்கள் நடைமுறையில் இருக்கிறபோது எப்படித் தாக்குப் பிடித்திருக்க முடியும்? வேறு விதமாகக் கேட்பது என்றால், உலக நிதி மூலதன ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பொருளாதார ஒழுங்கமைப்பு ஜனநாயக அரசியலில் எப்படிப் பிழைத்திருக்க முடியும்? இந்தக் கேள்விக்கு பதிலாக, பன்னாட்டு நிதி மூலதனக்காரர்களும் அவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ள உள்நாட்டு முதலாளிகளும் பலப்பல வழிமுறைகளைக் கையாள்கிறார்கள். அவற்றில் ஒரு வழிமுறைதான், ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் எந்தவொரு அரசியல் அமைப்பு ஆட்சிக்கு வந்தாலும், அதே நவீன தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துவது என்பதாகும்.

### தெரிவை மறுத்தல்

பலவித வழிமுறைகளில் இது உறுதிப்படுத்தப்படுகிறது. ஒரு வழிமுறை – நவீன தாரளவாதப் பாதையிலிருந்து விலகினால் முதலீடுகள் நாட்டை விட்டு வெளியேறிவிடும் என்ற பயத்தைக் கிளப்பி விடுவதாகும். எல்லா அரசியல் அமைப்புகளிலும் (கட்சிகளிலும்) இந்தப் பயம் ஊன்றப்படுகிறது. அவ்வப்போது உண்மையாகவே இப்படி முதலீடுகள் வெளியேறுவ தன் மூலம், சில நேரங்களில் திட்ட மிட்ட சூழ்ச்சியா கவேகூட முதலீடு கள் வெளியேறச் செய்வ தன் மூலம், அந்தப் பயம் அப்ப டியே பாதுகாக்கப்படுகிறது. மற்றொரு வழி முறை, அதிகார வர்க்க ஆட்களிடையே ஏகா திபத்திய நிறுவனங்களின் ஆட்களைப் பெருமளவுக்கு ஊடுருவச் செய்வதும், அதிகார வர்க்கத்தின ரிடையே பெருமளவுக்கு நவீன தாராளவாதக் கருத்துக்களை ஆக்கிரமிக்கச் செய்வதுமா கும். மிகப் பரவலான வலைப்பின்னல் அமைப்பு, பயிற்சித் திட்ட ங்கள், பயிலர ங்குகள், "திறன் வளர்ப்பு" நடைமுறைகள் போன்ற ஏற்பாடுகள் மூலமாக இந்த ஆக்கிரமிப்பு நடத்தப்படுகிறது.

இங்கு நாம் விவாதிக்கிற மூன்றாவது வழிமுறை ஒன்று இருக்கிறது. இன்றைய நடைமுறைகள் எதுவானாலும், அவற்றை ஒரு நுட்பமான கோட்பாடு வடிவத்திற்கு உருமாற்றப்பட்ட கருத்தாக்கங்களாகத் தருகிறார்கள். அந்தக் கோட்பாடுதான் என்றென்றும் நிலைத்திருக்கும் உண்மை என்றும், அதுதான் "இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளோடு" அல்லது "மனித இயல்போடு" ஒத்துப் போவது என்றும் கற்பிக்கப்படுகிறது. "அபிவிருத்தி" என்ற கருத்தாக்கம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். ஆளுக்காள் இந்தக் கருத்தாக்கத்தைக் கட்டிவிட முயல்கிறார்கள். இந்த மூன்றாவது வழிமுறை, ஒரு கருத்துநிலை சர்வாதிகாரத் தைத் திணிக்கிற முயற்சியேயன்றி வேறொன்றுமில்லை. இவ் வாறு உருவேற்றப்படுகிற கருத்துச் சர்வாதிகாரத்திற்கு ஒரு அர சியல் பணியிருக்கிறது. மக்களுக்கு உள்ள அரசியல் தெரிவு உரிமையைத் தட்டிப் பறிப்பதுதான் அந்தப் பணி. அரசியலை அழிக் கும் கைங்கரியத்தின் ஒரு பகுதிதான் இது.

அரசியலை அழிப்பதன் பின்னணியில் ஒரு தொடர்ச்சியான தர்க்கவாத உக்தி இருக்கிறது. "அபிவிருத்தி" என்பது நவீன தாராளவாதத்தின் மிக உயர்ந்த புனிதமானதாகக் கட்டமைக்கப்படுகிறது. அதில் கருத்துநிலை சர்வாதிகாரம் பிரதிபலிக்கிறது. அது, மாறுபட்ட மேம்பாட்டுப் பாதைகளில் தங்களுக்குத் தேவையானதை மக்களே தேர்வு செய்கிற அரசியல் உரிமையை நிராகரிக்கிறது. அதை நியாயப்படுத்த "அரசியல் படுபாதாள நிலைக்குப் போய்விட்டது" என்றும், "அரசியல் கட்சிகள் எல்லாம் சுயநல நோக்கத்தோடுதான் செயல்படுகின்றன" என்றும் "அரசியல்வாதிகளிடைய ஊழல் ஊறிப்போய்விட்டது" என்றும், இதுபோல இன்னும் பல வகைகளிலும் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. அரசியலில் ஈடுபடுவோரின் தரம் தாழ்ந்துள்ளது என்ற அனுபவ உண்மையைக் காட்டி, மக்களின் அரசியல் தெரிவுரிமை மறுக்கப்படுகிறது. "தொழில் துறையின் தானைத் தலைவர்கள்" என் றும் "தொழில் முனைவோர்" என் று கூறப்படுகிறவர்களோ டும் – பத்திரிகைத் துறையில் உள்ள சில தொழில் முனைவோ ரோடும் கூட – "நேர்மையான கறாரான" அதிகாரிகளோடும் இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் சாதக மற்ற முறையில் முரண்படுகிறவர்களாகக் காட்டப்படுகிறார்கள். மேற்படி தொழில்துறைத் தளபதிகளும், தொழில்முனைவோரும் இந்த நுட்பமான ஏற்பாட்டில், நவீன தாராளவாத மேம்பாட்டுத் திட்டங்களை உயர்த்திப் பிடிப்போராக மேம்பாட்டுக்கு உறுதியளிப்போராக அதனை உருவாக்குவோராக காட்டப்படுகிறா ர்கள்.

இத்தகைய கருத்தாக்கங்களின் ஆதிக்கத்தால் அரசியல் கட்சிகள் பயத்திற்கு உட்பட்டவையாக, எந்தவொரு மாற்று மேம்பாட்டுத் திட்டத்தையும் முன்வைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. கருத்தாக்கங்களின் வர்க்கத் தன்மை பற்றிய தத்துவார்த்தப் புரிதல் உள்ள இடதுசாரிக் கட்சிகள் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

விரிந்து பரந்ததாக உள்ள மற்ற அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் மேம்பாட்டுப் பிரச்சனைகளில் இக்கட்சிகளுக்கு உள்ள கருத்து வேறுபாடுகள் பின்னுக்குச் சென்று காணாமல் போய்விடுகின்றன.

ஏனெனில் இக்கட்சிகள் எல்லாமே, மேற்படி நுட்பமான பொருளில், "அபிவிருத்தி" என்பதன் கைதிகளாக மாறிவிடுகின்றன. இக்கட்சிகளுக்கிடையேயான கருத்து மோதல்கள் எப்படித் தீர்க்கப்படுகின்றன என்றால் மாற்றுத் திட்டங்களுக்கிடையே தங்களுக்குத் தேவையான மக்களே தேர்வு செய்துகொள்வதன் மூலமாக அல்ல. மாறாக, பணபலம், தோள்பலம், சந்தர்ப்பவாதக் கூட்டணி அரசியல் ஆகியவற்றின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன. அதேபோல், இக்கட்சிகளிடைய, பொருளாதார செயல் திட்டம் பின்நோக்கி சவாரி செய்வதாக மாறிவிடுகிறது. அதனால், அறிவுபூர்வமான, உணர்வு பூர்வமான இளைஞர்களை ஆற்றல் மிக்க தலைவர்களாக இக்கட்சிகளால் தமது அணிகளுக்குள் ஈர்க்க முடிவதில்லை. இந்த இளைஞர்களின் சமூகக் கடமையுணர்வும் கூர்மையாகச் சரிவடைகிறது. வேறு சொற்களில் சொல்வதனால், பன்னாட்டு நிதி மூலதனத்தால் பரப்பப்படுகிற "அபிவிருத்தி" என்ற கருத்தாக்கத்தின் ஆதிக்கமே, அரசியல் செயல்பாட்டாளர்களின் தரம் அபிவிருத்தி அடையாமல் தாழ்ந்துபோவதற்குக் காரணமாகிறது.

இவ்வாறாக, "அரசியல்வாதிகள்" தரம் தாழ்ந்துவிட்டார்கள் என்ற அம்சத்தைப் பயன்படுத்தித் தான் "அபிவிருத்தி" என்ற நவீன தாராளவாதக் கருத்தாக்கத்தை மிகப் புனிதமானதாக உயர்த்துகிற முயற்சி நியாயப்படுத்தப்படு கிறது. (இதற்கு விதிவிலக்காக இடதுசரிகள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை மட்டும் ஒரு போதும் உரத்துச் சொல்லப்படு வதில்லை). அதே நேர த்தில் இப்படி "அரசியல்வாதி" தரம் தாழ்வதற்கு மேற் படி புனிதமய மாக்கல் தான் ஓரளவுக்காவது காரணமா கிறது. முதலாளித்துவ அரசியல்வாதிகள், சிறு முதலாளித்துவ அரசியல் வாதிகள் ஆகியோரின் தரம் தாழ்வதற்கு வர்க்கம் சார்ந்த காரணங்கள் கண்டிப்பாக உள்ளன; ஆனால், நவீன தாராளவாத "அபிவிருத்தி" என்ப தன் கருத்துப்பூர்வ ஆதிக்கமும் இதற்கு நிச்சயமாக் பங்களிக்கிறது.

### வேரறுக்கப்படும் அரசியல் தலைமை

ஆக அரசியலை அழித்தொழிக்கிற நடைமுறை இன் றைய உலகமயமாக்கல் யுகத்தின் ஒரு அடிப்படை அம்ச மாக இருக்கிறது. இது வெளிப்படுத்தப்படுவது, "அபிவி ருத்தி" என்ற நவீன தாராளவாதக் கருத்தை மிக நுட்பமான உண்மையாக உயர்த்துவதன் மூலமாக மட்டு மல்ல. இந்த அபிவிருத்தி வியூகத்தின் மூலகர்த் தாக்க ளாகிய "தொழில் துறைத் தளப திகள்", பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்கள், தொழில் முனை வோர் எனப்படுவோர், "நேர்மையான அதிகாரிகள்" எனப்படு வோர் ஆகியோரை சமூக முன் மாதிரிகளாக ஏன் அரசியல் தலைவர்களாகக்கூட உயர்த்துவதன் மூலமாகவும் இது வெளிப்படுகிறது.

அரசியலை அழிப்பது என்பது நவீன தாராள வாதத்துக்கு எதி ரான எந்தவொரு சவாலையும் தடுத்துக் குலைப்பது மட்டுமல்ல; நாடு இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிற துயரங்களை மேலும் பெருக்குவது மட்டுமல்ல; மக்கள் தங்களுக்குத் தேவை யான பாதையைத் தாங்களே சுதந்திரமாகத் தேர்வு செய்வதற் கான மாற்று வாய்ப்புகளை மறுப்பது மட்டுமல்ல; அதாவது ஜனநாயகத்தை மறுப்பது மட்டுமல்ல; எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் அரசியல் பங்கேற்பைத் தடுப்பதாகும். அர்த்தமுள்ள அரசி யல் பங்கேற்பு என்பது மக்களின் தன்னாளுமையை உறுதிப்படுத்துகிற ஒரு வழிமுறை. எடுக்கப்பட்ட முடிவுக ளுக்கு உட்படு கின்றவர்களாக அல்லாமல், தங்க ளது வாழ்க்கையைத் தாங்களே வடிவமைக்கிறவர்களாக, முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாக மாறுகிற ஒரு வழிமுறைதான் அரசியல் பங்கேற்பு. அரசியல் என் பது பொருளாதார மாற்றத்துக்கான ஒரு கருவி மட்டுமல்ல, ஒடு க்கப்பட்ட மக்கள் தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள் கிற ஒரு வடிவமுமாகும். உலகமயமாக்கல் கோட்பாடும் நடை முறைகளும் அரசியலை அழிக்க முயல்வதன் மூலம் மக்களின் இந்த வழிமுறையை நிராகரிக்க முயல்கின்றன.

### கருத்துருவாக்கங்களின் வர்க்கத்தன்மை

ஆனால், உலகமயமாக்கல் இப்படி அரசியலை அழிக்க முயன்றாலும், அரசியல் வேறு வடிவத்தில் மறுபடியும் காட்சிக்கு வரவே செய்கிறது. யுத்தம் என்பது ஒரு மாறுபட்ட வடிவத்தில் அரசிய லின் தொடர்ச்சியேயாகும் என்கிறார் ஆய்வாளர் கிளாஸ்விட்ஸ் [Clauswitz]. பொதுவாக அரசியல் என்பது அதன் அறிவுபூர்வ நியாயமான வடிவத்தில் அதற்குரிய நியாயமான வெளி இல்லா மல் தடுக்கப்பட்டாலும் கூட, அறிவப்பூர்வமற்ற நியாயமற்ற எல்லா வடிவங்களிலும் அது மீண்டும் தலைதூக்குகிறது. பயங்கரவாதம், சகோதரப் படுகொலைகள் போன்ற வன்முறை மிக்க, எவ்வித ஆக்கப்பூர்வ விளைச்சல்களையும் கொடுக்காத வடிவங்களில் அரசியல் மறுபடி தோன்றுகிறது. ஆகவே, அரசியல் அழிக்கப்படுவதற்கு எதிரான போராட்டம், அரசியலின் அறிவு பூர்வமற்ற நியாயமற்ற வடிவங்களுக்கு எதிரான போராட்ட முமாகிறது. இந்தப் போராட்டத்தில் ஜனநாயக சக்திகள் உணர்வுப்பூர்வமான உந்துதலுடன் இணைந்ததாக வேண்டியுள்ளது.

எதையும் வர்க்கக் கண்ணோட்டத்தில் காண்பது லெனினின் ஒரு சிறப்புக் குணமாகும். ஒருமுறை, லெனின் நாடு கடத்தப் பட்டு லண்டனில் இருந்தபோது, அவரைச் சந்திக்க ஒரு இளம் தோழர் தாய்நாட்டிலிருந்து வந்திருந்தார். சிறந்த விருந்தோம்பல் பண்பு கொண்டவரான லெனின் அந்த இளைஞரை லண்டனின் பல்வேறு முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினார். "இதோ இதுதான் அவர்களுடைய "டிரபால்கர் சது க்கம்," இதுதான் அவர்களுடைய "வெஸ்ட்மின்ஸ்டர் பாலம்", "அவர்களுடைய புனித பால் தேவாலயத்தை உனக்குப் பிடித் திருக்குமே" என்றெல்லாம் ஒவ்வொரு இடமாகக் காட்டி விளக் கினார். க்ருப்ஸ்கையா [Krupskaya] லெனின் பற்றிய நினைவுக் குறிப்புகளில் நினைவு கூரும் போது இப்படி லண் டனில் அவர் "அவர்களது", "அவர்களது" என்று அடையாளப் படுத்தியது ஏன் என விளக்கமளித்துள்ளார். தாமும் அந்த இளம் தோழரும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அந்த வரலாற்றுச் சின்னங்கள் ஆங்கிலேயர்களுடையவை என்பதாலும் லெனின் அவ்வாறு குறிப்பிடவில்லை. மாறாக, அவற்றைக் கட்டி யெழுப்பியவர்கள் ஆளும் வர்க்கத்தினர் என்பதால் அவ்வாறு குறிப்பிட்டார். "அவர்கள்" என்ற சொல்லை ஆங்கிலேயர்களை அல்ல, ஆள்வோரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தினார் லெனி ன். இன்று, அனைத்துக்கும் மேலாக அரசியல் அழிக்கப்படுவ தற்கு எதிரான போராட்டம் "அவர்களுக்கு" எதிராக நடந்தாக வேண்டும். அந்தப் போராட்டம் ஆளும் வர்க்கங்களிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டிடும் வகையில் தொடர்ச்சியான, உறுதியான , திட்டவட்டமான வடிவத்தினை எடுக்க வேண்டும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# ஆடல் பாடல்கள்

## சமூகமும் பண்பாடும் 18

பேராசிரியர் சி.சிவசேகரம்

**நாங்கள் எதையெதையோ எல்லாம்** எங்கள் கலைகள் என்று பெருமை பேசுகிறோம். எதுவும் ஒரு சமூகத்தின் ஒவ்வொருவருக்கும் எட்டக் கூடிய தொலைவில் இல்லாது போனால் அது ஒரு சமூகத்திற்குரியதாக இருக்க இயலாது. ஒரு சமூகத்தில் எல்லாப் பணிகளும் எல்லாரும் ஆற்றுவன அல்ல. ஆயினும் எதுவும் எவருக்கும் எட்டக் கூடியதாக இருக்கிற போது தான் அது முழுச் சமூகத்தினதும் உடைமையாகிறது. இது கல்விக்கும் தொழிலுக்கும் போலக் கலைகட்கும் பொருந்தும். எனினும் சமூகத்தில் வேலைப் பிரிவினை ஏற்பட்ட போது கல்வியும் தொழிலும் சமூகப் பிரிவுகளை யொட்டி வேறுபடுத்தப்பட்டன. எல்லாருக்கும் எதுவும் எட்டக் கூடிய நிலை இல்லாமல் இன்னாருக்கு இன்ன வகையான கல்வி இன்ன வகையிலான தொழில் என்ற பாகுபாடுகள் வர்க்க அடிப்படையில் ஏற்பட்டன. இந்தியத் துணைக் கண்டத்தில் வர்ணமும் தொழிலும் இணைந்து சாதி முறை இறுக்கம் பெற்ற போது பிறப்பே ஒவ்வொருவருக்கும் உரிய கல்வியையும் தொழிலையும் தீர்மானித்தது.

பழைய வர்க்கப் பிரிவினையற்ற சமுதாயங்களிலும் இன்றைய பல்வேறு பழங்குடியினரிடையிலும் எல்லாருக்கும் உரியதாக உள்ள ஆடல் பாடல்கள் வர்க்க சமுதாயத்தினது தோற்றத்தாலும் வேலைப் பிரிவினையாலும் சமுதாய விருத்திப் போக்கிலும் சமூகப்பிரிவுகள் சிலவற்றுக் குரியனவாகின. மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உடையவர்களாக இருந்த இசை, கூத்துக் கலைஞர்களிற் பெரும்பாலனவர்கள் காலப் போக்கிற் தாழ் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அரசவைக் கலைஞர்கள் போன்ற சிறுபான்மையானவர்கள் தவிர மற்றவர்களின் பொருளாதார நிலையும் தாழ்வானதாகவே இருந்தது. சாதி அடிப்படையிலும் பொருள்வள அடிப்படையிலும் பிரிவுபட்டிருந்த ஒரு சமூகத்தினுள் பண்பாட்டுப் பொதுமைகள் இருந்தாலும் பல விடயங்கள் பற்றிய பார்வையிற் கணிசமான வேறுபாடுகள் இருந்தன. அதை விடவும் பெண்களின் நிலையில் எற்பட்டிருந்த வீழ்ச்சி காரணமாகப் பெண் ஆணின் நுகர்வுக்கான ஒரு பண்டமாகி விட்டதால் பெண்கள் எதைச் செய்யலாம் எதைச் செய்யலாகாது என்ற மேலதிகமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன.

**பரத நாட்டியமும் கருநாடக இசையும் தமிழர்களின் கலை வடிவங்களா? அவற்றைப் பயில்வதும் அரங்கேற்றுவதும் பெருமைக்கும் அந்தஸ்துக்கும் உரியனவே**

ஆடல் பாடற் கலைகளைப் பொறுத்தவரை பொதுவான சமூக நிகழ்வுகள், சடங்குகள், கொண்டாட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஆடல் பாடற்கலைகளில் ஒன்றாக இணைந்து பங்கு பற்றுகிற சமூகத்தினரிடையே நாட்கள் இல்லாமல் எவரும் பங்குபற்றக் கூடிய வாய்ப் புக்கள் இருந்தன. இவ்வாறான நிகழ்ச்சிகள் சமூகத்தின் உறுப்பினர்களை ஒன்றிணைக்கிற ஒரு முக்கியமான சமூகப் பங்கையும் ஆற்றின. நாட்டார் கலைகள் பலவற்றில் இந்தத் தன்மையை நாம் காணலாம்.

மறுபுறம் சமூகத்தின் உயர் நிலையில் இருந்தவர்களுக்குக் களிப்பூட்டுகிற நோக்கத்திற்காக விருத்தி பெற்ற கலை வடிவங்கள் அரசவைக் கலைஞர்கள் போன்றோராலும் அதையே பிழைப்பாகக் கொண்ட சமூகப்பிரிவினருக்கு உரியனவாகவும் நிலை பெற்றன. அரண்மனைகள் தவிரக் கோவிற் சடங்குகள் விழாக்கள் போன்ற பொது நிகழ்வு களிலும் இத்தகைய கலைஞர்கள் பங்கேற்றனர். இக் கலை வடிவங்களின் விருத்திக்கு அரசர்களதும் செல்வந்தர்களதும் சில சமயங்களில் மத நிறுவனங்களதும் ஆதரவு இருந்து வந்தது. இவை தனி மனிதர்களது திறமையின் விருத்திக்கும் கலைஞர்களைக் குறிப்பிட்ட நோக்கங்கட் காகச் செம்மைப்படுத்திச் சமுதாயத்தில் உயர் நிலையில் வைத்திருப்ப தற்கும் உதவின. எனினும் இக் கலைகளைத் தமது பிழைப்பாகக் கொண்ட சமூகத்தினர் நிலவுடைமைச் சமுதாயத்தின் எழுச்சியின் போக்கில் மன்னர்களதும் பிரபுக்களதும் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தமது கலைகளைப் பயிலுகிற நிலைக் குத் தள்ளப்பட்டனர். மதத்திற்கும் அரசிற்குமி டையில் நெருக்கமான உறவு இருந்த சூழ்நிலை களில் பெரிய கோவில்களும் அரச அதிகாரத் தின் நீட்சியாக இயங்கின.

இந்தியாவின் வருணாசிரமத்தின் வழியில் பிராமணரும் அரச பரம்பரையினரும் சமூகத்தின் மீது செலுத்திவந்த ஆதிக்கம் காரணமாக அரசவை சார்ந்து வாழ்ந்த கலைஞர்கள் போன்று கோவில் சார்ந்து வாழ்ந்தவர்களையும் உருவாக்கியது. சாதியமும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் இவ்வாறான ஆடல் பாடற் கலைஞர்களின் கலைத் திறமையை மட்டுமன்றிக் கலைஞர்களையும் சமூகத்தில் மேல்நிலையில் இருந்தவர்களது நுகர்வுக்கான பொருட்க ளாகச் சீரழித்தது. இதன் விளைவாகத் தேவதாசி முறை பரத்தமையின் இன்னொரு வடிவமாக உருவெடுத்தது. கோவில்களையும் அரண்மனைகளையும் செல்வந்தப் பிரபுக்களையும் அண்டி வாழ்ந்த கலைஞர்கள் இந்தியாவின் நிலவுடைமைச் சமூகத்தின் சரிவையும் மன்னராட்சிகளது வீழ்ச்சியையும் அவற்றையொட்டி ஏற்பட்ட சமூக, பொருளாதாரச் சிதைவுகளையும் அந்நியப் படையெடுப்புக்களையும் அடுத்து ஆடல் பாடற் கலைஞர் களது சமூக நிலை மேலும் தாழ்வு கண்டது. ஆடல்பாடற் கலைஞர்களிற் சிறு பகுதியினர் தமது தனிப்பட்ட ஆற்றல்கள் மூலமும் கிடைத்த வாய்ப்புகளாலும் சினிமா போன்ற துறைக ளிலும் இசை நாட்டியத் துறைகளிலும் பொருளாதார அடிப்படையில் உயர்வு கண்ட போதிலும் ஒரு சமூகமாக அவர்கள் இன்னமும் பிற்படுத்தப்பட்டவர்களாகவே உள்ளனர். இசை குறிப்பாக வாய்ப்பாட்டு உயர்சாதி ஆண்க ளாற் பொது இடங்களில் பயிலப்பட்டதாயினும் சில குறிப்பிட்ட செவ்வியல் இசைக்கருவிகள் (தவில், நாதஸ்வரம்) சாதி அடையாளம் பெற்றன. புல்லாங்குழலும், வீணையும், வெளியிலிருந்து வந்த வயலினும் போன்று மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்ற தாள வாத்தியங்க ளும் வெவ்வேறு காலங்களில் உயர்சாதியினரது பாவனைக் குரியனவாகின. அதேவேளை கிராமத்துச் சமூகங்களின் ஆடல்பாடல் வடிவங்கள் போல அவர்களது இசைக் கருவிகளும் தத்தமக்குரிய சாதிய, பிரதேச அடையாளங்களைத் தொடர்ந்தும் பேணி வந்தன.

ஆடல் பாடல்கள் சமூக மரியாதைக் குரியனவாகியதற்கு இந்திய சமூகத்தின் நவீனமாதலும் பங்களித்தது. சினிமாவின் வருகையும் வளர்ச்சியும் பொருளாதார வாய்ப்புக்களை மேம்படுத்தின. செவ்வியல் இசையும் நடனமும் வருமானத்திற்குரிய துறைகளாயின. இப் பின்னணியில், பாரம்பரியமாக இக் கலைகளைப் பேணி வந்த இசை வேளாளார் சமூகத் தினரும் தேவதாசியரும் அந்த நன்மைகளை முழுமையாக அனுபவிக்க வாய்ப்பில்லாமல் உயர் சாதியினர் அந்தத் துறைகளைப் படிப்படியாக ஆக்கிரமித்துக் கொண்டனர். தமிழகத்தைப் பொறுத்தவரை பிராமணர் கருநாடக இசையிலும் பரத நாட்டியத்திலும் தமது ஆதிக்கத்தை வலுவாக நிலை நிறுத்திக் கொண்டனர்.

இந்திய சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலேயே பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இத் துறைகளில் பங்கேற் பதற்கான வாய்ப்புக்கள் வலுப் பெற்றன. எனினும் இசைத் துறையில் இருந்து வந்த பிராமண ஆதிக்கம் நீண்ட காலமாகவே இசைக்கான மொழியின் விடயத்திலும் தடைக்கற்களை விதித்தது. இதன் மறுப்பாகவே தமிழிசை இயக்கம் தனித்தமிழ் இயக்கம் போன்ற பார்ப்பனர் அல்லாத தமிழ் உயர் சாதியினரது ஆதரவுடன் மேலெழுந்தது. தெலுங்கு தான் இசைக்கு உகந்த மொழி என்றும் சமஸ்கிருதம் இறை வழிபாட்டுக்கு ஏற்ற மொழி என்றும் தமிழ் நீச மொழி என்றும் கூறி வந்த பிராமணர்கள் பலர் அதை உண்மையாகவே நம்பியவர்களாக இருந்திருக்கலாம். எனி னும் இந்திய விடுதலை இயக்கம் இவ்வாறான சிந்தனைகளில் உடைப்பை ஏற்படுத்தியது.

இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மேட்டுக்குடியினர் நடுவே செவ்வியல் இசை நடன வடிவங்கள் மீதான விருப்பம் இருந்து வந்தது. ஆயினும் அது தம்மிடையே பயில்வதற்கான ஒன்றாக இல்லாமல் நுகர்வுக்கான ஒன்றாகவே இருந்தது. கோவில் திருவிழாக்களுக்கும் பிற சிறப்பு விழா வைபவங்கட்கும் தென் இந்தியாவிலிருந்து இசைக் கலைஞர்களையும் (மேளகாரர்)) நடனக் கலைஞர்களையும் (சின்ன மேளம்) வரவழைக்கும் வழமை நீண்டகாலமாகவே இருந்து வந்தாலும், கலைஞர்கள் தாழ்ந்தோராகவே கருதப்பட்டனர். பரதநாட்டியம் "சதிர்" என்று தான் அன்று அழைக்கப்பட்டது. பொதுவாகப் பெண்களை நிந்திக்கும் முறையில் சதிர் ஆடுதல், ஆட்டம் என்பன போன்ற சொற்கள் பயன்பட்டு வந்துள்ளன. கலைஞர்களது சாதிப்பேர்களும் மரியாதைக் குறைவாகவே வழங்கப்பட்டு வந்தன. இன்று பரதநாட்டியத்திற்கும் கருநாடக இசைக்கும் நாம் உரிமை கொண்டாடுகிறோம். அவை தமிழரின் கலை வடிவங்கள் என்று பெருமை பேசுகிறோம். அவற்றைப் பயிலுவது பெருமைக்குரிய ஒன்றாகியுள்ளது. அரங்கேற்றங்கள் சமூக அந்தஸ்தை உணர்த்துகிற நிகழ்ச்சிகளாகி விட்டன. ஆனால் இவை உண்மையில் தமிழகத்திலோ வெளியிலோ வாழும் எந்தத் தமிழ்ச் சமூகத்தையும் ஒரு சேர அடையாளப்படுத்துகிற கலை வடிவங்களாக உள்ளனவா என்ற கேள்விக்கு நம்மால் நேர்மையாக "ஓம்" என்று விடைகூற இய லாது. இன்றைய கருநாடக இசையின் உள்ளடக்கம் பொதுப்படக் கருதும்போது பல நூற்றாண்டுக் காலம் முன்பு இருந்த ஒரு சமூக அமைப்பை இன்னுஞ் சரியாகச் சொன்னால் அதன் உயர்குடியினரது நலன்களையே அடையாளப்படுத் துகிறது. கருநாடக இசையில் இருந்த விடுதலைக் கோட்பாடுகள் இன்று தமது அடையாளமிழந்து இந்துத்துவ அடையாளஞ் சுமந்து நிற்கின்றன. தமிழிசை என்பது மொழி சார்ந்து நிற்குமளவுக்குச் சமூகம் சார்ந்து நிற்பதாக் கூறுவது கடினம். பரதத்தைப் பொறுத்த வரை அது மேலும் இறுக்கமாக மதமும் பழைமையும் சார்ந்த விழுமியங்களையே அடையாளப்படுத்துகிறது.

செவ்வியல் இசை நடன மரபுகளை நவீனப்படுத்துகிற முயற்சிகளில் உள்ளடக்கம் சார்ந்தவை மிகக் குறைவாகவே இருந்துள்ளன. இன்று வணிக நோக்கில் நடைபெ றும் நவீன மாக்கலின் அளவுக்குச் சமூக நோக்கில் நவீன மாக்கல் இடம் பெறவில்லை. எனவே இக்கலை வடிவங்கள் இன்னமும் விடுதலை பெறாத எல்லா மக்களுக்கும் உரியனவான ஒரு நிலையை வந்தடையவில்லை.

தமிழரின் இன்றைய ஆடல்பாடல் வடிவங்கள் வர்க்க, சாதிய, பிரதேச அடையாளங்களால் வேறுபடுத்தப்பட்டே இருந்து வந்துள்ளன. தனியே சாதிய, பிரதேச வேறுபாடு களின் அடிப்படையில் எதையும் எவருக்கும் மறுக்க இய லாது. எனினும் அவை எல்லாருக்கும் எட்டக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. செவ்வியற் கலைகளின் முறையான பயிற்சிக்கும் திறமைக்கான அங்கீகாரத்திற்கும் சமூக ஏற்றத்தாழ்வுகள் தடையாகவே உள்ளன. அதன் மறுபக் கமாகத் தாழ்ந்த சமூக நிலையுடன் அடையாளப்படுத்தப்பட்ட ஆடல் பாடல் வடிவங்கள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்ற கருத்து சாதிய மேலாதிக்கக் கண்ணோட்டத்துடனேயே முன் வைக்கப்படுகிறது. சில இசைக் கருவிகளும் இசை வடிவங்களும் நடனங்களும் உயர் நிலையில் உள்ளவர்களுக்குத் தகாதனவாகவே உள்ளன.

**எல்லா ஆடல் பாடல் வகைகளிலும் சாதிய வர்க்க பின்னணிகள் இருக்கின்றன**

எவ்வாறாயினும் தேசியத்தை வற்புறுத்துவோர் இன்னமும் தம்முட் சிறுபான்மையினர் மட்டுமே ஈடுபடுகிற செவ்வியற் கலைகளையே தமது தேசிய அடையாளங்களாக முன்னிறுத்துவதை நாம் காணலாம்.

ஒரு சமூகத்தினுள் வழங்கும் எல்லாக் கலை வடிவங்களும் அவை எங்கிருந்து வந்தாலும் அந்தச் சமூகத்திற்கு உரியனவே. எனினும் தேக்க நிலையில் உள்ள ஒரு சிலவற்றைப் பற்றியே நாம் உரிமை கொண்டாடிப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். நமக்குள் வழக்கிலுள்ள கலை வடிவங்கள் எவ்வாறு நமது சமூகத்தின் விடுதலைக்கும் சமூக நீதிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் வழி செய்யும் என்பது பற்றி நமது கலைஞர்கள் கூடிய கவனங் காட்ட வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




# "சாமியார்களின்" ஏமாற்றும்

# அறிவியல் பார்வையின் அவசியமும்

வட இந்தியாவில் யோகாசனத்தையும், ஆயுர்வேத மருந்துக்களையும் வைத்து எய்ட்ஸைக் கூட குணப்படுத்த முடியும் என்று கூறிப் பிரபலமானவர் பாபா ராம்தேவ், இதை அறிவியலும், மருத்துவர்களும் உண்மையல்ல என்று நிராகரித்து விட்டாலும் மக்களை புற்றீசல் போல இழுப்பதில் ராம்தேவ் தோல்வியடையவில்லை. ஆஸ்ரம் பாபு, சுதன்ஜி மகாராஜ் மற்றும் முராரி பாபு முதலானோர் டெல்லியின் பண்ணை வீடுகளில் பணக்காரர்களுக்கு மட்டும் தலைக்கு ரூபாய் 5,000 முதல் 10,000 ரூபாய் வரை கட்டணம் வாங்கிக் கொண்டு ஆன்மீக வகுப்பு நடத்துகிறார்கள். முடிந்தபின் இதே பண்ணை வீடுகளில் மேட்டுக்குடி குலக் கொழுந்துகளுடன் கேளிக்கைக் கூத்துக்களை நடத்துவது வழக்கம்.

90- ஆம் ஆண்டு இறந்து போன ரஜனீஷ் சாமியாரின் நிறுவனம் முன்பு போல் வீச்சாக இயங்கவில்லை என்றாலும் செக்ஸ் குரு என்று செல்லமாக அழைக்கப்பட்ட ரஜனீஷ் புத்தகங்கள், ஒலி- ஒளிக் குறுந்தகடுகள் பல பத்து மொழிகளில் இன்றும் கிராக்கியுடன் விற்கப்படுகின்றன. செக்ஸ், நிர்வாணம், தியானம், யோகம் முதலியவற்றைக் கலந்து பிரபலமான ரஜனீஷின் பக்தர்களில் வெளிநாட்டவர் அதிகம். வாழ்வின் வற்றாத இன்பங்களைத் தேடி அலைந்த மேலைநாட்டவருக்கு இவர் வடிகாலாகத் திகழ்ந்தார்.

நடனம், பஜனை, கிருஷ்ண வழிபாடு மற்றும் ஆச்சாரமான பார்ப்பன பண்பாட்டை முன்னிறுத்திய ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கம் 80- 90- களில் உச்சத்தை அடைந்தது. இவர்களுக்கும் உலகெங்கும் கிளைகள் உண்டு. இயற்கை வாழ்வும், யோகா, தியானம் முதலானவற்றை முன்னிறுத்தி ஈஷா யோக மையத்தை நடத்தி புகழ் பெற்றவர் ஜக்கி வாசுதேவ். 'வாழ்க வளமுடன்' என்ற முத்திரையுடன் பிரபலமானவர் வேதாத்ரி மகரிஷி.



**14 வன்புணர்ச்சி 1 கொலை ஆகியவற்றுக்கு 2 ஆயுள் தண்டனை பெற்ற 'சாமி' பிரேமானந்தா**

மேல் மருவத்தூரின் பங்காரு அடிகளார் சாதாரண மக்களை ஈர்க்கும் வண்ணம் சிவப்பாடை, பெண்கள் பூசை, ஆதி பாரசக்தி வார வழிபாட்டு மன்றம் வருடம் முழுக்க சடங்குகள் என்று வளர்ந்திருக்கிறார். மேல் மருவத்தூர் சென்றால் நோய் தீரும். திருமணம் நடக்கும், வியாபாரம் செழிக்கும் என்று பல கதைகளை பக்தர்களே இலவசமாய் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

வசதியான தனி நபர்களின் மன அமைதி, மகிழ்ச்சி, கலைத் தவங்கள் என்று பிரபலமானது பாண்டிச்சேரி அரவிந்த் ஆசிரமம். சங்கர மடம் பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. கல்லூரிகள், மருத்துவ மனைகள் போக அரசியல்வாதிகள் அதிகார வர்க்கம். முதலாளிகள் முதலான மேல்மட்டத்தின் பிரச்சினைகளைத் தேர்ந்த தரகன் போல தீர்த்து வைத்து தனி சாம்ராம்சியத்தையே உருவாக்கியவர் ஜெயந்திரர்.

நற்செய்திக் கூட்டங்களில் 'மூடவர்கள் நடக்கிறார்கள், குருடர்கள் பார்க்கிறார்கள்' என்று சாட்சியங்களை சொல்ல வைத்து பெரும் மக்கள் கூட்டத்தை நம்பவைத்து பெயரெடுத்த வர் டி. ஜி. எஸ். தினகரன். தொலை பேசி எண்ணில் பிரச்சினைகளைச் சொல்லி கட்டணத்தை அனுப்பி வைத்தால் பிரார்த்தனை செய்து தீர்ப்பதற்கென்றே ஒரு பெரும் அலுவலகத்தை நடத்தி வருகிறார். பரிசுத்த ஆவியை எழுப்பி, அதை வைத்து ஒரு பல்கலைக்கழகத்தையும் சேர்த்து எழுப்பியிருக்கிறார்.

இந்தியாவில் பள்ளிக்கூடங்களை விட கோவில்களும் சாமியார்களும் அதிகம். எனவே பட்டியலை இம் மட்டோடு நிறுத்திக் கொள்வோம். சாமியார்களில் பழைய பாணி சாமியார்களை விட நவீன பாணி சாமியார்களுக்கு மவுசு அதிகம். இருப்பினும் இரண்டு பாணிகளும் சொல்வது ஒரே மாதிரியான விசயங்களைத்தான்.

"குரங்கு போலத் தாவிச் செல்லும் மனதைக் கட்டுப்படுத்துங்கள். அதற்கு தியானம் செய்யுங்கள், மனதை வழிக்குக் கொண்டு வர உடலைக் கட்டுப்படுத்துங்கள், பேராசைப்படாதீர்கள், கிடைத்ததைக் கொண்டு வாழுங்கள், சைவ உணவு உண்டு, இயற்கையோடு ஒன்றி வாழுங்கள், வருவாயில் சிறு பகுதியை யாவது தர்மம் செய்யுங்கள், பொறாமை- அகங்காரம்- கோபம் முதலியவற்றை விட்டொழியுங்கள், செய்யும் தொழிலை ஈடுபா ட்டுடன் செய்யுங்கள், உலகுடன் அன்பு- எளிமை- அழகுடன் உறவு கொள்ளுங்கள் முதலான பொத்தாம் பொதுவான விசய ங்களைத்தான் அனைத்து குருமார்களும் ஓதுகின்றனர். இது போக சாமியார்களின் மகிமைகளை பக்தர்களே கண் காது மூக்கு வைத்து ஊதிப்பெருக்கிப் பிரச்சாரம் செய்வதும் இயல் பாக நடக்கிறது.

உண்மையில் பக்தர்கள் தங்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை மேற் கண்ட சாமியார்களின் விதவிதமான முறைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமா? பலராலும் பூடகமாக வியந்தோதப்படும் ஆன்மீகத்தின் பொருள் என்ன? பல்வேறு முறைகளில் பயிற்சி செய்யப்படும் யோகா முறை ஒரு மனிதனுக்கு நிம்மதியைத் தருமா? நேர்த்தியாகக் தயாரிக்கப்பட்ட சாமியார்களின் உரைகளில் சீடர்களுக்கு தெளிவு பிறக்க வாய்ப்புள்ளதா?


'மனதைக் கட்டுப்படுத்துதல் கட்டுப்படுத்தினால் இறுதியில் பேரானந்தம்' – என்பது ஆன்மீகம் என்பதற்கு இவர்கள் தரும் இலக்கணம். மனதையே ஆன்மா, ஜீவன் உடலுக்கும் உயிரு க்கும் அப்பாற்பட்டது என்றெல்லாம் கற்பித்துக் கொள்கிறார்கள். இத்தகைய அரூபமான விளக்கத்தில் உண்மையோ பொருளோ இல்லை. அறிவியல் பூர்வமாக மனது என்பது மூளையின் செய ல்பாடுகளில் ஒன்று. அதே சமயம் அதற்கென்று தனித்துவமான இடமும் உண்டு. ஆனால் அது தனியாய் பிறந்து வளர்ந்து செயல்படுவதில்லை. மனிதனின் உடற்கூறியலைக் கொண்டு குழந்தையின் மூளை இயல்பாக மனித மூளையாக உருவாகியிருந்தாலும் ஆரம்பத்தில் அது தன்மையில் விலங்குகளின் மூளையைப் போன்று சாதாரணமாகவே இருக்கிறது. புற உலகோடு கொண்டுள்ள தொடர்பால் மட்டுமே அது மனித மூளையின் செயல்பாட்டைப் பெறுகிறது.

உடலுக்கு வெளியே சுயேச்சையாக இயங்கிக் கொண்டிருக்கும் இயற்கையை, சமூகத்தை, முழு உலகைப் புரிந்து கொள்வதாலும், தொடர்பு கொண்டு வினையாற்றுவதன் வாயிலாகவும் தான் தனித்துவத்தைப் பெறுகிறது மனித மனம். சூழ்நிலையும் வாழ் நிலையும் தான் மனதின் அகத்தை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. உணர்ச்சிகளாலும் அறிவுத்திறனாலும் மனி தர்கள் வேறுபடுவதன் காரணமும் இதுதான்.

மனதின் தோற்றமும், இருப்பும் செயல்பாடும் இவையென்றால் அதனால் உருவாகும். பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு? மனதின் பிரச்சினை என்பது மனிதனின் பிரச்சினை; மனிதனின் பிரச்சினை என்பது அவன் வாழ்வதற்காகப் புற உலகோடு கொண்டுள்ள தவிர்க்க முடியாத உறவினால் ஏற்படும் பிரச்சினை. இத்தகைய பிரச்சினைகளினால் மனிதனிடம் இரண்டு விதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒன்று உடல் ரீதியானது. இரண்டாவது கருத்து ரீதியானது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தும் பிரிந்தும் வினையாற்றுகின்றன.

உடல் ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளில் மூளையும் அதனால் பாதிக்கப்படும் ஏனைய உடல் அங்கங்களும் அடக்கம். கருத்து ரீதியான பிரச்சினைகளை அவ்வளவு சுலபமாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட சமூக உறவில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் மனிதன். பிரச்சினை வரும்போது சமூகத்தில் தனது இடம் குறித்த குழப்பமும், பயமும் அடைகிறான். இது முற்றும் போது சமூகத்தோடும் முரண்படத்துவங்குகின்றான். முரண்படுதலின் வீரியத்திற்கேற்ப அவனது சமூக வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

ஆக மனிதனது உடல் நலமும் அல்லது மூளை நலமும் சிந்தனை முறையும் ஒத்திசைந்து இருந்தால் அவன் ஆரோக்கியமாக இருக்கிறான் என்று பொருள். ஆயினும் வர்க்க சமூகத்தில் இந்த ஒத்திசைவ குலைவது தவிர்க்க இயலாதது. வர்க்கப் பிளவுகளையும் நிச்சயமற்ற தன்மையை யும் அதிகரிக்கும் இன்றைய உலகமயமாக்க கால மக்கள் ஆன்மீகத்தை நோக்கி ஓடுவதையும் சாமியார்கள் வாழ்க வளமுடன் வாழுவதே கலையென்று ஆடுவதையும் சாத்திய மாக்கியிருக்கிறது. இருப்பினும் மன நலன் மற்றும் சமூக நலன் இரண்டையும் சீரடையச் செய்வதற்குரிய பொருத்தமான மருந்துகள் சாமியார்கள் மற்றும் அவர்களது யோக முறைகளில் நிச்சயம் இல்லை. ஏன்?



**பாலியல் விண்ணனான 'சாமி' ரஜனீஷ்**

வாழ்க்கைப் பிரச்சினைகளால் மனிதனும் மனதும் பாதிக்கப்படுகின்றனர் என்றால் மூளை பாதிக்கப்படுகிறது என்பதே சரி. கோபம், அச்சம், சலிப்பு, சோர்வு, விரக்தி, சோகம், பதட்டம், படபடப்பு, மன அழுத்தம் போன்றவை எல்லோருக்கும் எப்போதாவது ஏற்படக்கூடிய உணர்ச்சிகள். குறிப்பிட்ட காரணங்களால் இவை அடிக்கடி ஏற்பட்டு நாளடைவில் தொடர்ந்து நீடித்தால் மனம் மெல்லமெல்லச் சிதைவது நடக்கிறது. மனச் சிதைவின் விளைவால் மூளையில் உள்ள உயிர்ம வேதியல் சக்திகளின் சமநிலை குறைகிறது. இதன் தொடர் விளைவால் பல உடல் பிரச்சினைகளும் வாழ்க்கை மீதான விரக்தியும் ஏற்படுகிறது. இதற்குத் தீர்வென்ன?

மூளை இழந்து விட்ட சக்திகளை திரும்பப் பெறுவதன் மூலமே புண்ணாண மூளையையும், மனதையும் நேர் செய்ய முடியும்.



## தொழிலதிபர்களே துறவிகளாக! அடிமைத்தனமே ஆன்மீகமாக!

அதை

மனித உடலையும், நோய்க்கூறுகளையும் அறிவியல் பூர்வமாக கற்றுக் கொண்ட ஒரு உளவியல் மருத்துவரால்தான் கண்டு பிடித்துக் குணமாக்க முடியும். மாறாக, தியானம் செய்வதன் மூலமாக மூளை இழந்த பௌதீக ரீதியான சக்திகளைப் பெற முடியாது.

ஏனெனில் இது வெறும் கருத்துப் பிரச்சினையல்ல. உடல் நோய்வாய்ப்படுவது என்பது பொருளின் பிரச்சினை. பொருளுக்கு கருத்து மருந்தல்ல. எளிமையமாகச் சொல்வதாக இருந்தால் தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி, எலும்பு முறிவு மற்றும் எளிதில் குணப்படுத்த இயலாத எய்ட்ஸ் முதலான நோய்களுக்கு மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ளுகிறோம். இதை தியானம் செய்வதால் தீர்க்கமுடியாது. மனம் அல்லது மூளையின் பிரச்சினைகளும் அப்படித்தான்.

இருப்பினும் மனம் நோய்வாய்ப்படுவதற்கும் உடல் நோய்வாய்ப்படுவதற்கும் வேறுபாடு உண்டு. உணவின்மை சத்துக்குறைவான உணவு சுகாதாரச் சீர்கேடுகள், நுண்கிருமிகள் முதலியவற்றால் உடல் நோய்வாய்ப்படுகிறது. ஆனால் மூளையோ வாழ்க்கைப் பிரச்சினைகளால் குறிப்பிட்ட கருத்து நிலைக்கு தொடர்ந்து ஆட்படுவதால் சக்தியை இழந்து நோய்வாய்ப்படுகிறது.

இத்தகைய பலவீனமான மூளையால் உடலின் சமநிலை குலைந்து ஏனைய உடல் பாகங்களும் பாதிப்படைந்து செயல்பாடு சீர்கேடு அடைகின்றது. பாதிப்படையும் மனதிற்குப் பின்னே இத்தனை உண்மைகள் இருக்கும் போது சாமியார்கள் அடிமுட்டாள் தனமாக 'குணப்படுத்துவேன்' என்று திமிராகப் பேசுவது அயோக்கியத்தனம். நியாயமாக இவர்களைப் போலி மருத்துவர்கள் என்று கைது செய்து உள்ளே தள்ளுவதே சரி.

யோகா போன்ற முறைகளால் நோயைக் குணப்படுத்த முடியும் என்பதுதான் மூட நம்பிக்கையே தவிர தன்னளவில் நன்மையைக் கொண்டிருக்கின்றன. உடற்பயிற்சியால் ஒரு மனிதனின் உடல் நலம் பொதுவில் ஆரோக்கியமாக இருக்கும் என்பது உண்மைதான். இருப்பினும் இந்த ஆரோக்கியம் வெறும் உடற்பயிற்சியால் மட்டும் வந்து விடுவதில்லை. அது ஊட்டச்சத்து, சுகாதாரம் போதுமான ஓய்வு, உறக்கம் போன்றவையுடன் தொடர்புள்ளது. சுருக்கமாகச் சொன்னால் வசதி அல்லது வர்க்கம் சம்பந்தப்பட்டது.

அடுத்து தியானம் என்பது மனம் அதாவது மூளையின் ஒரு பகுதிக்கு அல்லது செயல்பாட்டிற்குச் செய்யப்படும் பயிற்சியாகும். தியானத்தின் மூலம் மட்டுமல்ல ஒரு நல்ல இசையைக் கேட்பதிலோ ஒரு குழந்தையைக் கொஞ்சுவதிலோ, இயற்கைக் காட்சியுடன் ஒன்றுவதிலோ கூட மனம் பயிற்சியையும் ஓய்வையும் பெற முடியும். இவை ஒவ்வொருவரின் விருப்பம், இரசனை, பண்பு, வாழ்க்கையைப் பொறுத்தது. ஆயினும் அழுத் திச் செல்லும் வாழ்க்கையின் இடைவெளிகளில் பலருக்கு இவை சாத்தியப்படுவதில்லை. அதனால் பிரச்சினை வரும் போது ஓய்வு பெறாத மனம் விரைவில் துவண்டு விடுகிறது.

மனத்திற்கு அப்படிச் சிறப்பாகப் பயிற்சியையும், ஓய்வையும் தந்திருப்பவர்களுக்குக் கூட வாழ்க்கைப் பிரச்சினைகளால் மனது பாதிக்கப்படுவது நடக்கும். இதிலிருந்து மீள்வதற்கு மருத்துவமே பெருமளவுக்கு உதவும் என்பதையும் தியானம் உதவாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல, மனதைச் சிதைத்து வதைக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளால் நோயுற்ற ஒரு மனிதனை எல்லா உளவியல் மருத்துவர்களாலும் குணமாக்கி விட முடியாது. 'நான்' எனப் படும் தன்னிலையை வைத்து வாழும் மனிதனின் அடிப்படை, உண்மையில் 'நாம்' எனும் சமூக மையத்தில்தான் சுழல்கிறது. அந்த மையம் மனிதர்களது விருப்பு, வெறுப்பின்படி அமைந்த தல்ல. அது சமூக உறவுகளால் பின்னப்பட்ட ஒரு நிர்ப்பந்தம். இந்த நிர்ப்பந்தத்தின் அழுத்தம் பல இன்னல்களை ஏற்படுத்துகிறது. இதனைப் புரிந்துகொள்ளும் சமூக அறிவியல் கண்ணோட்டம் கொண்ட ஒரு உளவியல் மருத்துவரால் தான் இந்த நோயின் காரணத்தையே புரிந்து கொள்ள இயலும்.

தொடரும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 4

## தொழிலாளரின் போர்க் குணஎழுச்சி

**இலங்கையின் முதலாவது** தொழிற்சங்கம் 19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் உருவானபோதும் அந்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் சிறிது சிறிதாகத் தொழிலாளர்கள் தாம் வேலை செய்யும் சூழல்களின் குறைபாடுகளை முன்வைத்து வேலை நிறுத்தங்களை நடத்தினர். இவை எழுந்தமானவையும் ஸ்தாபன ரீதியான அல்லது எதுவிதமான தலைமையினதும் வழிகாட்டலும் இல்லாமலும் முன்னெடுக்கப்பட்டன.

முதன் முதலாக ஸ்தாபன ரீதியாக நடந்த தொழிலாளர் போராட்டம் 1893 செப்ற்றெம்பரில் கேவ் அன் கம்பனியின் அச்சுத் தொழிலாளர் நடத்திய போராட்டம் எனப்படுகிறது. வேலை நிறுத்தம் ஆறே நாட்களில் முறியடிக்கப்பட்டது. தலைவர்கள் எனக் கருதப்பட்ட ஐவர் வேலையால் நீக்கப்பட்டனர். போராட்டத்தின் தோல்வியை அடுத்து அச்சுத் தொழிலாளரின் தொழிற்சங்கம் ஒன்று உருவானது. முற்போக்கான கத்தோலிக்கர்கள் உட்படப் பலவேறு சீர்திருத்தவாதிகளது ஆதரவும் அவர்கட்குக் கிட்டியது. எனினும் அந்தத் தொழிற்சங்க அமைப்பு நின்று நிலைக்கவில்லை. அதன் வீழ்ச்சிக்கு முதலாளிமாரின் கடுமையான தொழிற்சங்க விரோத நிலைப்பாடும் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடுவதில் அச்சுத் தொழிலாளரிடையே நிலவிய ஊக்கமின்மையும் முக்கியமாகப் பங்களித்தன. அதை விடவும் சுதந்திரக் கத்தோலிக்கன் (இன்டிபென்டன்க் கத்தலிக்) எனும் முற்போக்கான வார ஏடு போக முக்கியமான பத்திரிகைகள் அனைத்துமே அச்சுத் தொழிலாளர்களது போராட்டத்தை வன்மையாகக் கண்டித்தன. இப் போக்கு மேலை நாடுகளில் வளர்ச்சி பெறத் தொடங்கிய தொழிலாளர் இயக்கங்களது போக்கில் விருத்தி பெறலாம் என அவை அச்சம் தெரிவித்தன.

மேற் கூறியவாறான சிந்தனை அன்றைய வசதிபடைத்த நடுத்தர வர்க்கத்தின் நிலைப்பாட்டுக்கு உடன்பாடாகவே இருந்து. தொழிலாளர்கட்கு எதிரான கடும் நிலைப்பாட்டை அன்றைய ஊடகங்கள் வற்புறுத்தின. அத்துடன் வழக்கிலிருந்த மிக மோசமானதும் அடிமைச் சமுதாயத்திற்குப் பொருத்தமானதுமான வீட்டுப்பணியாளர், தோட்டத்தொழிலாளர், பயிற்றப்பட்ட தொழிலாளர் ஆகியோரைக் கட்டுப்படுத்தும் தொழிற்சட்டத்தை அச்சுத் தொளிலாளருக்கு எதிராகப் பயன்படுத்தியதை மெச்சின. அதேவேளை முற்போக்கான சிந்தனையாளர்களும் கிளர்ச்சிப் போக்குடையவர்களும் அரசாங்கத்தை விமர்சித்தனர்.

போராட்டம் தோல்வியடைந்தாலும் அது புதிய அரசியற் சிந்தனைகளைச் கிளறி விட்டது. சட்டவாக்கற் சபையில் உண்மையான பிரதிநிதித்துவம் இல்லாமை பற்றிய கேள்வியைச் "சுயாதீனக் கத்தோலிக்கன்" எழுப்பியது. கத்தோலிக்கத் திருச்சபையின் எதிர்ப்பிற்கும் நடுவே அந்த ஏடு தொழிலாளர்கட்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைக் கேள்விக்குட்படுத்தியது. இவ்வாறு தொழிலாளரின் போராட்டத்தின் தோல்வி அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில் கொழும்பில் மேலும் பலரைச் கிளர்ச்சிக்காரச் சிந்தனையாளர்கட்குச் சாதகமாகத் திரும்பியது. முன்பு அறியப்படாததும் நடுத்தர வர்க்கத்தினர் பலரது எதிர்ப்பைச் சம்பாதித்ததுமான வேலை நிறுத்தம் பற்றிய பார்வைகள் மாறத்தொடங்கின.

1893ன் பின்பு கொழும்பில் வேலை நிறுத்தங்கள் மீண்டும் நிகழத் தொடங்கின. அவர்களுக்கு ஆதரவு காட்டிய நடுத்தர வர்க்கத்தினரிடையே அதிகாரத்தை எதிர்த்து நிற்கவும் தேவையானால் வேலை நிறுத்தஞ் செய்யவும் ஆயத்தமான தொழிலாளர்கட்குப் "பொறுப்புணர்வுள்ளவர்களது" ஆதரவும் வழிகாட்டலும் மிதவாதத் தலைமை ஏனினும் தேவை என்ற எண்ணம் தலையெடுத்தது. எனினும் மிதவாதிகளால் கொழும்பில் யூலை 1896ல் தொடங்கிய சலவைத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தைக் தடுக்க முடியவில்லை. மூன்று வாரங்களாக மிகப் பெரும் ஒற்றுமையுடன் நடந்த போராட்டம் தோல்வி கண்டாலும் வேலை நிறுத்தம் முடிந்து சில ஆண்டுகளில் சலவைத் தொழிலாளருக்கு அரசாங்கம் சில சலுகைகளை வழங்க முன்வந்தது.

19ம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் நடுத்தரவர்க்கத் தினரது ஆதரவு இல்லாமலும் ஸ்தாபனப்படுத்தப்படாமலும் 1896ல் யாழ்ப்பாணச் சுருட்டுத்தொழிலாளரது வேலை நிறுத்தம் ஒன்று உட்பட்ட பல வேறு வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. எனினும் நகரின் நடுத்தர வர்க்கத்தினரிடையே தொழிலாளர் போராட்டங்கள் பற்றிய பார்வை கூடிய அனுதாபமுடையதாக மாறத் தொடங்கியது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொழிலாளரது நிலைப்பாடு மேலும் போர்க்குணங் கொண்டதாக விருத்தி பெறத் தொடங்கியது. அக் காலத்தில் வணிகம் மாட்டு வண்டிகளையே பெரிதும் நம்பியிருந்தது. எனினும் மோட்டார் வாகனங்களும் ட்றாம் வண்டியும் வந்த சூழ்நிலையில் இயந்திர வாகனங்களின் போக்குவரத்துக்கும் மாட்டு வண்டிப் போக்குவரத்துக்குமிடையிலான முரண்பாடுகள் வலுப்பட்டன. வண்டிக்காரர்கள் வண்டிகளில் அமர்ந்திருக்கையில் கண்ணயர்ந்து போவதால் மாடுகள் கால்போன போக்கிற் போவதாகக் குறை

### ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் சமூக நீதியை வற்புறுத்தி அரசியல் விழிப்புணர்வை தோற்றுவிக்கின்றன

கூறப்பட்டு அவர்கள் வண்டியின் எப்பகுதியிலும் அமர்ந்து செல்வதற்கு மாநகரசபை 1906ம் ஆண்டு தடை விதித்தது. நாள் முழுவதும் வண்டியின் ஓரமாக நீண்டதூரங்கள் நடப்பது இயலாது என்றும் மீறினால் விதிக்கப்படும் தண்டம் மிகுதியானது என்றும் எதிர்ப்புத் தெரிவித்து வண்டிக்காரர்கள் வேலைநிறுத்தம் ஒன்றில் இறங்கினர். மூன்றே நாட்களில் மாநகரசபை பணிந்து போனது. இந்த வேலை நிறுத்தத்தின் வெற்றிக்கு நகரின் தொழிலாளரின் எண்ணிக்கையும் தமது உரிமை பற்றிய அவர்களது விழிப்புணர்வும் அவர்களது ஆதரவும் வண்டிக்காரருக்கு உதவின. வண்டிக்காரர்களின் போர்க்குணமும் அவர்களின் நடுவிலிருந்தே உருவான தலைமையின் வழிகாட்டலில் அவர்களது கட்டுப்பாடான நடத்தையும் ஒற்றுமையுமே போராட்டத்தின் வெற்றிக்கு முக்கியமான பங்களித்தன. சேர் ஜோண் கொத்தலாவலவின் தகப்பனாரான கொத்தலாவல இவ் வேலை நிறுத்தத்திற்கு ஊக்குவிப்பும் ஆதரவும் அளித்ததுடன் வண்டிக்காரரது தலைவராகினார். அச்சுத் தொழிலாளர்களின் சங்கம் போன்று வண்டிக்காரர்கள் உருவாக்கிய சங்கமும் முடங்கிப் போனாலும் அவர்களது வேலை நிறுத்தத்தின் வெற்றி இலங்கையின் படித்த நடுத்தரவர்க்கத்தின் எழுச்சிக்கு மிகவும் உதவியது. முழுக்க முழுக்க அந்நிய நிருவாகத்தின் கீழேயே பணி புரியும் நிலையில் இருந்து வந்த நடுத்தர வர்க்கத்தினர் தமது அதிருப் தியை வெளிவெளியாகவே பேசத் தலைப்பட்டனர். அரசியல், மதவாத அடிப்படையிலான எழுச்சிகளும் தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமும் 1906க்குப் பின்பு எழுச்சி கண்டன. இலங்கையில் உருவாகி வந்த அதிருப்தியை எவ்வாறு கையாளுவது என்பதில் பிரித்தானிய அரசாங்கம் கடும் போக்கைத் தவிர்க்கும் முறையிலேயே நடந்து கொண்டது. ஒடுக்கப்பட்ட வர்க்கமொன்றின் போராட்டங்களின் பலாபலன்கள் அந்த வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைத் தனதாக்கிக் கொள்ளும் நோக்கமும் ஆற்றலுங் கொண்டதாக இல்லாது போகும் போது புதிதாக எழுச்சி பெறுகிற ஒரு மேல்தட்டு வர்க்கத்தின் அதிகாரத்திற்கே வழிகோலக் கூடும். அல்லாத பட்சத்தில் மேலெழுகிற ஒரு வர்க்கத்தை வலுப்படுத்தி அரச அதிகாரத்திற்கான இழுபறியை இன்னொரு சமநிலையை நோக்கி நகர்த்தக்கூடும். இதைப் பலவேறு நாடுகளின் நிலவுடைமைச் சமூகத்தின் உருவாக்கத்தில் அடிமைகளது கிளர்ச்சிகள் ஆற்றிய பங்கிலிருந்தும் விவசாயிகளின் கிளர்ச்சிகள் ஆட்சி அதிகாரத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்ததிலிருந்தும் காணலாம். போராடிய ஒடுக்கப்பட்ட வர்க்கம் குறுகிய காலத்தில் சில நன்மைகளையும் போராட்டங்களிலிருந்து பாடங்களையும் ஓரளவு அரசியல் முதிர்ச்சியையும் பெறுகிறது. ஆக மிஞ்சிச் சமூதாயத்தின் சுரண்டலுக்கான ஏற்பாடுகள் சிறிது மாறலாம். சுரண்டலும் ஒடுக்கு முறையும் வேறு வடிவங்களில் தொடருகிறது.

எனினும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் சமூக நீதிக்கான புதிய ஒரு சமுதாயத்திற்கான வாய்ப்புகளை வலுப்படுத்துகின்றன. முக்கியமாக ஒடுக்கப்பட்ட மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன என்பதை எவரும் மறுக்க இயலாது.

வண்டிக்காரர் வேலை நிறுத்தத்தின் பின்பான பத்தாண்டுகளில் இலங்கையின் பிற்கால அரசியற் போக்குக்களைத் தீர்மானிக்கக் கூடிய பல அரசியல், சமூக மாற்றங்கள் இடம் பெற்ற போதிலும் பரந்துபட்ட தொழிலாளி வர்க்கம் என்ற உணர்வும் வர்க்கப் போராட்டம் பற்றிய விஞ்ஞான ரீதியான பாட்டாளிவர்க்கச் சிந்தனையும் வேரூன்றாத நிலையிலேயே இவை நடந்தேறின.


## மறைந்த பாரிஸ்டர் ஆர். ஈ. தம்பிரட்ணம் என்றும் நினைவுக்குரியவர்

**கொலனித்துவ காலத்திலிருந்து** சட்டத்துறையில் வழிவழி யாக இருந்து வந்தவர்கள் மேட்டுக்குடி உயர்வர்க்கத்தினர். அத்தகையோரின் ஆதிக்கப்போக்கும் மக்களை மதிக்காத திமிர்த்தனங்களும் குறிப்பாக யாழ்ப்பாணச் சூழலில் நீடித்து வந்திருக்கிறது. அத்தகைய சூழலிலும் பாரம்பரிய எல்லைகளைத் தாண்டி சட்டத்துறை சார்ந்தோர் குறிப்பாக சட்டத்தரணிகள் சிலர் மக்கள் மத்தியில் மதிப்பிற்கும் அன்புக்கும் உரியவர்களாக வாழ்ந்து பணியாற்றி வந்திருக்கிறார்கள்.

அத்தகையவர்களில் ஒருவர் அண்மையில் தனது 74வது வயதில் சாவடைந்த பாரிஸ்டர் ஆர்.ஈ. தம்பிரட்ணம் ஆவார். அவர் சட்ட த்துறையின் சட்டத்தரணி தொழிலில் தனக்கென ஒரு தனித்து வத்தை இறுதிவரை பாதுகாத்து வந்தவர். தான் ஏற்றுக் கொண்ட வழக்கில் தனது தரப்பினருக்காக ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி வாதிடுவதில் வல்லமையுடையவராகவும் நேர்மையுடையவராகவும் இருந்து வந்தார். அவர் பண வருவாயை இரண்டாம் பட்சமாகவே மதித்தார். அவரிடம் பல சட்டத்தரணிகளிடம் இல்லாத மனித நேயமும் மனிதரை மதிக்கும் பண்பும் நிறைந்திருந்தது. ஆதிக்கத் தொனியும் மேட்டுக்குடி கர்வமும் இல்லாத ஒருவராகவும் தன்னை நாடி வருவோருடன் பண்புடன் பேசிப் பழகு பவராகவும் இரு ந்து வந்தார்.

1960பதுகளின் நடுக் கூறிலே யாழ்ப்பாணத்து சாதிய தீண்டாமை ஆதிக்க அமைப்பிற்கு எதிரான போராட்டங்கள் அமைப்பு ரீதியாக வெடித்தெழுந்தன. சாதியாதிக்கவாதிகளை எதிர்த்து மக்கள் போராடினர். அவ்வேளைகளில் பல வழக்குகள் போராடியோர் மீது தொடுக்கப்பட்டன. கீழ் நீதிமன்றம் தொடக்கம் உயர் நீதிமன்றங்கள் வரை அவ் வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அத்தகைய பல வழக்குகளில் மறைந்த தம்பிரட்ணம் அவர்கள் சந்தேக நபர்க ளாக நிறுத்தப்பட்ட பல சாதிய எதிர்ப்புப் போராளிகள் சார்பாக ஆஜராகி திறம்பட வாதித்து விடுபடச் செய்தவர். அக்கால த்தில் கம்யூனிஸ்ட் கட்சியும் தீண்டாமை வெகுஜன இயக்கமும் முன் னெடுத்த சாதிய தீண்டாமைப் போராட்டங்கள் மூலமான வழக்குகளில் பிரபலம் பெற்ற பல தமிழ்ச் சட்டத்தரணிகள் போராளிகள் சார்பாக வாதிட மறுப்போராகவே இருந்தனர். அத்தகையோரிடம் அவர்களது சாதி ஆதிக்க நிலைப்பாடு காரணமாக வழக்குகளை நம்பி ஒப்படைக்கவும் முடியாத நிலையும் காணப்பட்டது.

இந் நிலையில் அவ்வழக்குகளில் பாரிஸ்டர் ஆர். ஈ. தம்பிரட்ணம் துணிவுடனும் நேர்மையுடனும் மனித நேயத்துடனும் ஆஜாராகி வாதிட்டு வந்தார். அவர் தோன்றிய வழக்குகள் எதிலும் போராளிகள் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்படவில்லை. பிரசித்தி பெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டமான மாவிட்டபுரம் போராட்டத்தில் இடம் பெற்ற வழக்குகளில் அவர் துணிவுடனும் நேர்மையுடனும் வாதிட்டு ஆலயப் பிரவேச நியாயத்தை சட்டரீதியாக நியாயப் படுத்தி நின்றார். அவ்வாறே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் எஸ்.ரி. என். நாகரட்ணம் மீதான தேர் எரிப்பு வழக்கிலும் வாதாடி அவரை விடுவித்தார். மாதகல் கோடரிக் காடு இரட்டைக் கொலை வழக் கில் பொய்ச் சாட்சிகள் மூலம் பத் துப் போராளிகளைத் தண்டிக்க முற்பட்ட வழக்கிலும் தம்பிரட்ணம் அவர்கள் மிகத் திறமையாக வாதிட்டு விடுவித்தமை இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளது.



அப்போராட்ட காலங்களில் எண்பதிற்கு மேற்பட்ட வழக்குகள் போராடிய மக்கள் சார்பாக நீதிமன்றங்களில் விசாரணைக்கு இருந்தன. அவற்றில் முக்கியமான வழக்குகளில் எல்லாம் தம்பிரட்ணம் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த சட்டத்தரணி எஸ். அன் ரணி அவ்வேளை அவ்வழக்குகளில் துணிவுடன் போராளிகளு க்காக வாதாடி வந்தவர். கொழும்பிலிருந்து என். சத்தியேந்திரா, வனம் இராஜரட்ணம், எச்.எல்.கே. கரவிட்ட பன்ரி டி சொய்சா, எஸ். வைகுந்தவாசன் போன்றோர்

தொடர்ச்சி 13ம் பக்கம்

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## நோபல் பரிசின் பரிசு கேடு!

**2007ம் ஆண்டுக்கான** சமாதானத்திற்கான நோபல் பரிசு முன்னால் அமெரிக்கத் துணை அல் கோருக்கு வழங்கப்பட்டுள்ளது. அல் கோர் புவி வெப்பமடைதல் தொடர்பில் ஆற்றிய அரும் பணிக்காக அவருக்கு இப் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"உலகின் அமைதிக்காகவும், மனிதருள் சமாதானமாக வாழவும் வழிவகுக்கும் செயற்படுகளுக்கும் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப் படவேண்டும் என எழுதி வைத்தார்- அல்பிரட் நோபல் இங்கே மூன்று கேள்விகள் எழுகின்றன.

1. அல்கோர் உலக அமைதிக்கு என்ன செய்தார்?
2. உலக அமைதிக்கும் புவி வெப்பமடைதலுக்கும் என்ன தொடர்பு?
3. புவி வெப்பமடைதலை தடுக்க அல்கோர் ஆற்றிய பணி என்ன?

### உலக அமைதிக்காக அல்கோர் செய்தது. கொஞ்ச நஞ்சமல்ல.....

தான் துணை ஜனாதிபதியாக இருந்து காலப்பகுதியில் சேர் பியாவிலும், கொசோவிலும் குண்டுகளை வீசி பல்லாயிரக்கனக்கானோரைக் கொன்றது. ஈராக்குக்கு பொருளாதாரத் தடையை விதித்ததன் மூலம் நூற்றுக்கனக்கான அப்பாவிக் குழந்தைகளை உணவின்றியும், மருந்தின்றியும் இறக்கக் காரணமாக இருந்தது. "பாலைவன நரி நடவடிக்கை" மூலம் ஈராக் மீது தாக்குதல் தொடுத்து அப்பாவிகளின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்தது. ஆப்கானிஸ்தானிலும் சூடானிலும் குண்டு மழை பொழிந்தது. இதை விட மேலதிகமாக உலக அமைதிக்காக வேறென்ன செய்ய வேண்டும்?

### புவி வெப்பமடைதல் தொடர்பிலும் அளப்பரிய சேவைகளை அல் கோர் ஆற்றியிருக்கிறார்....

உலக நாடுகள் சூழலை மாசடையச் செய்வதைக் குறைப்பதற்கான "கியோட்டோ உடன்படிக்கை"யில் அமெரிக்கா கைச்சாத்திடாமல் பார்த்துக் கொண்டது. (உலகில் சூழலை அதிகளவில் மாசுபடுத்தும் நாடு அமெரிக்கா என்பது வேறு விடயம்)

இதைவிட "சங்கடமான உண்மை" (An Inconvenience Turth) என்றொரு ஆவணப்படத்தை (புவி வெப்பமடைதல் தொடர்பான) எடுத்து அதற்கு ஆஸ்கார் விருது பெற்றது. இவ் ஆவணப்படத்தின் அதி உன்னத நன்மையை எடுத்துக்காட்ட படத்தில் உள்ள மூன்று விடயங்களைக் கூறுதல் மட்டும் போதுமானது.

1. "உண்மை என்னவென்றால் காபன் வெளியிடுதலை பூச்சியமாகக் குறைக்க முடியும்" என்ற வரிகளுடன் ஆவணப்படம் முடிகிறது. மனிதர்கள் சுவாசிக்கும் ஒவ்வொரு கணமும் காபனீரொக்சைட் வெளியிடப்படுகிறது. மனிதனால் மட்டுமன்றி வேறும் பல வழிகளில் பல வழிகளில் காபனீரெட்சைட் வெளியிடலை நிறுத்த முடியாது. இந்த கூற்றானது. உலகின் அமைப்பு பற்றிய ஒரு ஆவணப்படம் "உலகம் தட்டையானது" என்ற வரிகளோடு முடிவதற்கு ஒப்பானது.

2. ஆவணப்படம் செல்லும் முக்கியமான செய்தி வழமையாக பயன்படுத்தப்படும் எண்ணெய்க்குப் பதிலாக விவசாயப் பயிர்களிலிருந்து பெறப்படும் இயற்கை வாயுக்களை பயன்படுத்தத் தொடங்க வேண்டும் என்பது. ஆனால் உண்மை எது வெனில் இயற்கை வாயு வெளியிடும் நைட்ரஸ் ஒக்சைட், காபனீரெட்சைட்டை விட 300 மடங்கு வலிமை உள்ள பச்சை இலை வாயுவாகும். அதேவேளை சேளம் எண்ணெய் காபனீரெட்சைட்டை விட இருமடங்கு வலுவான பச்சை இலைவாயுவாக தொழில்படுகிறது என்கிறார் நோபல் பரிசு பெற்ற வேதியிளாளர் பி.வே. ஜோர்சன்

3. ஆவணப்படம் செல்லும் தீர்வு சூரிய ஒளியையும் காற்றையும் மட்டுமே சக்தி மூலகங்களாக கெள்வதன் மூலம் சூரியகலன்களும், காற்றாலைகளுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் வருடம் முழுவதும் 24 மணிநேரமும் சூரிய ஒளி கிடைப்பதில்லை. காற்று வேகமாக வீசுவதுமில்லை.

ஆக மொத்தத்தில் மக்களை முட்டாள்ளாகின்ற ஒரு ஆவணப்படத்தை தயாரித்து அதற்கு ஆஸ்கார் விருதும் பெற்றிருக்கிறார். ஆல் கோர் (வழமையிலே முட்டாள்தனமான படங்களுக்கே ஆஸ்கார் விருது வழங்கப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்ததே)

ஹென்றி கீசிஞ்கர், ஜிம்மி காட்டர் என்ற அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கொலைகர்களின் வரிசையில் இன்று அல் கோர் நாளை யாருக்கு?

**சமதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற மாயைகள் களைவதற்கான நேரம் இது.**


# மனித அவலத்தில் எழுச்சி பெறும் நாசகார முதலாளித்துவம்

**அதிர்ச்சிக் கோட்பாடு–** எழுச்சி பெறும் நாசகார முதலாளித்துவம் என்ற தலைப்புடன் நாஓமி கெலின் (Naomiklen) என்பவர் லண்டனில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். அந்த நூலில் மனித அவலத்தில் முதலாளித்துவம் எவ்வாறு செழிப்படைகிறது என்பதை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளார். ஈராக், இலங்கை, நியூ ஓர்லியன்ஸ் போன்றவற்றில் இடம் பெற்ற அழிவுகளிடையே புனரமைப்புகள் எவ்வாறானவை என்பதையும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

லூசியானாவில் வற்றன்றோக்கில் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பெரிய தங்குமிட கொட்டகையில் ஜமர் பெரி என்பவரைச் சந்தித்தேன். அமெரிக்க மாநிலமான நியூ ஓர்லீன்ஸில் பிறந்து வளர்ந்தவர் பெரி. 2005ல் ஒருவார காலமாக வெள்ளத்தில் மூழ்கிய நகரை விட்டு வெளியேறியவர். அவரும் அவரது குடும்பமும் பாதிக்கப்பட்டவர்களை அப்புறப்படுத்தும் பேருந்துகளுக்காகக் காத்திருந்தனர். அவை வராமையால் கொடும் வெய்யிலில் நடந்து வந்து இக் கொட்டகையை அடைந்தனர். இங்கு இரண்டாயிரம் பேர் தஞ்சம் புகுந்துள்ளனர். கோபத்துடனும் களைப்படைந்த நிலையிலும் காணப்படும் மக்களைக் கொண்ட இந்த அகதி முகாமைச் சுற்றி ஈராக்கிலிருந்து திரும்பி வந்த படையினர் காவல் புரிகின்றனர்.

அன்று அந்தக் கொட்டகையில் ஒரு செய்தி பரவியிருந்தது. "நியூ ஓர்லீன்சின் பொதுவீட்டுத் தொகுதிகளை நாம் இறுதியில் துப்பரவு செய்துள்ளோம். எங்களால் செய்ய முடியாததை கடவுள் செய்து முடித்துள்ளார்" என குடியரசுக் கட்சிப் பிரமுகர் றிச்சாட் பேக்கர் வெளியிட்ட மேற்படி கருத்தே அகதிகளின் கோபா வேசத்திற்கு காரணமாயிருந்தது. இதையொத்த கருத்தையே நியூ ஓர்லின்சின் மிகச் செல்வந்தரான யோசேப் கனிசாரோவும் வெளியிட்டிருந்தார். "நாம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏதுவாகத் துப்பரவான இடம் இருப்பதாக நான் நினைக்கிறேன். இதன் மூலம் எமக்குப் பெரிய சந்தர்ப்பம் உள்ளது" என அவர் கூறியிருந்தார். அந்தக் கிழமை பூராவும் ராட்சத கம்பனிகள் பெரிய சந்தர்ப்பங்களை– குறைந்தவரி, தளர்த்தப்பட்ட விதிகள் என்பனவற்றுடன் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்களைக் கைப்பற்றுவதற்காக மொய்த்த வண்ணமிருந்தனர். "சிறிய பாதுகாப்பான நகரம்" என்பதன் மூலம் பொது வீட்டுத் தொகுதிகளை தரைமட்டமாக்குவதாகும். சில மைல்கள் தொலைவில் பெருஞ்சாலை ஓரத்தில் குவிக்கப்படும் கழிவுகள் இரசாயன வெளியேற்றங்கள் மனித எச்சங்கள் என்பன பற்றி நாம் மறந்திருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட ஒருவர் "வற்றன் றொக்கில் உள்ள மக்களுக்கு என்ன நடந்தது? இது ஒரு சந்தர்ப்பம் அல்ல. இது ஒரு அவலம்". சந்தர்ப்பம் பற்றிக் கூறுபவர்கள் குருடர்களா? எனக் கேட்டார். இரு பிள்ளைகளின் தாய் கருத்து தெரிவிக்கையில் "அவர்கள் குருடர்கள் அல்ல. அவர்கள் தீய எண்ணமுடையவர்கள். அவர்கள் கண்ணுக்கு எல்லாம் நன்றாகவேயுள்ளது" என்றார். நியூ ஓர்லீன்ஸில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் சந்தர்ப்பங்கள் உள்ளதாக தெரிவித்த நபர்களில் தங்கு தடையற்ற முதலாளித்துவத்தின் குருவாகக் கருதப்பட்ட மில்டன் பிறைட்மன் ஒருவர் "நியூ ஓர்லீன்சின் பெரும்பாலான பாடசாலைகள் அழிந்து போயுள்ளன. அதேபோல அப்பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் வீடுகளும் அழிந்து போயின. அந்தச் சிறார்கள் நாடு பூராகவும் சிதறிப் போயுள்ளனர். இந்த அவலத்திலும் சந்தர்ப்பங்கள் உள்ளன."

நியூ ஓர்லீன்சில் கோடிக்கணக்கில் செலவு செய்து புனநிர்மாண நடவடிக்கைக்குப் பதிலாக அதில் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு வவுச்சர்கள் வழங்கினால்



அவர்கள் அவற்றைத் தனியார் நிறுவனங்களுக்குச் செலவு செய்ய முடியும் என கருத்துத் தெரிவித்தவர் மில்டன் பிறைட்மன்.

புனர் நிர்மாண வேலைகள் நத்தை வேகத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் நியூ ஓர்லீன்சின் பாடசாலை அமைப்பு இராணுவ வேகத்தில் ஏலமிடப்பட்டது. வறிய மக்கள் அகதிகளாய் பத்தொன்பது மாதங்கள் கடந்த நிலையில் அரச பாடசாலைகள் அமைப்பு முற்றாக மாற்றப்பட்டு தனியார் கட்டிய பாடசாலைகளா மாற்றப்பட்டுள்ளன.

லூசியானாவில் பாடசாலைகளைச் சீரமைக்க வருடக்கணக்காக முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. ஆனால் கற்றீனா வெள்ளம் ஒரே நாளில் அதனைச் செய்து விட்டதாக" பிறைட்மன் நிறுவனம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

பிறைட்மனின் திட்டமானது "கல்வி நில அபகரிப்பு" என அரச பாடசாலை ஆசிரியர்கள் கூறுகின்றனர். பேரழிவைத் தொடர்ந்து அழிவ நிவாரணம் என்ற போர்வையில் சந்தைக்கான வாய்ப்பைத் தேடுவதென்பது "நாசகார முதலாளித்துவம் எனக் கூறலாம்."

மூன்று தசாப்தங்களாக பிறைட்மனும் அவனைப் பின்பற்றுபவர்களும் பாரிய நெருக்கடிகளை எதிர்பார்த்து நின்றனர். அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்யும் அதே சமயம் இதனைப் பார்த்த மக்கள் அதிர்ச்சியிலிருந்து விடுபடாத நிலையில் உள்ளனர். "ஒரு நெருக்கடியின் போதே மாற்றம் ஏற்படுகிறது" என பிறைட்மென் கூறுவார். ஒரு நெருக்கடியின் போது மக்களில் சிலர் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவை சேகரித்து வைப்பார்கள். ஆனால் பிறைட்மனும் அவரது சகாக்களும் சுதந்திர சந்தைக் கருத்துக்களை உரிய நேரத்தில் பரப்புகின்றனர்.

அதிர்ச்சியை அல்லது நெருக்கடியை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென பிறைட்மன் எழுபதுகளின் நடுப்பகுதியில் கற்றுக்கொண்டு சர்வாதிகாரி சிலியின் ஆகஸ்ட்டோ பினோச்சேக்கு ஆலோசனை வழக்கினான். சிலி நாட்டுமக்கள் பினோச்சேயின் பயங்கரச் சதியைத் தொடர்ந்து பெரும் அதிர்ச்சியில் மூழ்கியிருந்தனர். மிகவும் மோசமான பணவீக்கத்தில் மூழ்கியிருந்த சிலி நாட்டில் பாரிய பொருளாதார மாற்றங்களை செய்யுமாறு பிறைமன் ஆலோசனை வழங்கினான். வரிக்குறைப்பு சுதந்திர வர்த்தகம் தனியார்மயப்படுத்தப்பட்ட சேவைகள் பொது சேவைக்கான செலவீனக் குறைப்பு என்பன புகுத்தப்பட்டன. இம்மாதிரியான முதலாளித்துவ நடைமுறை வேறு எந்த நாட்டிலும் முயற்சிக்கப்படவில்லை. நூலாசிரியர் 2004 சுனாமிக்குப் பிந்திய சில மாதங்களின் பின் இலங்கைக்கு விஜயம் செய்தார். அங்கு மாத்திரையை வேறு ஒருபாணியில் கொடுக்கப்பட்டதைக் கண்டார். அன்னிய முதலீட்டாளர்களும் கடன் வழங்கும் சர்வதேச நிறுவனங்களும் அழிவுகள் கண்ட சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். அழகான கடற்கரை ஓரங்களில் விரைவாக உயர் ரக விடுதிகளை தொழில் முனைவர்கள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மீனவர்கள் தமது கிராமங்களை மீளக்கட்டியெழுப்புவது இதன் மூலம் தடையேற்படுத்தப்பட்டது.

ஈராக்கில், இலங்கையில், நியூ ஓர்லியன்சில் "புனர் நிர்மாணம்" என்ற முதலாளித்துவ மாயாஜாலத்தில் அழிவின் போது எஞ்சியிருந்த பொது நிறுவனங்களும் முற்றுமுழுதாகவே துடைத்து எறியும் வேலையே இடம்பெற்றது.

**தொகுப்பு:– சிறீ**

## மறைந்த பாரிஸ்டர்

12ம் பக்க தொடர்ச்சி

யாழ்ப்பாணம் வந்ததும் கொழும்பிலும் மேல் நீதிமன்றம் உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் வாதிட்டு போராளிகளை விடுவித்தனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய யாழ்ப்பணச் சூழலில் சாதிய ஆதிக்க வாதிகளான சக தமிழ்ச் சட்டத்தரணிகள் பற்றியோ சாதி வெறியர்களுக்கு அஞ்சியோ பாரிஸ்டர் தம்பிரட்ணம் பின்வாங்கி விடவில்லை. மல்லாகம் நீதி மன்றத்தில் இடம் பெற்ற பல வழக்குகளில் அவரது சகோதரர் ஆர்.ஈ. செல்வரட்ணம் சாதிவாதிகள் பக்கம் ஆஜராகி வாதிட்ட அதேவேளை ஆர்.ஈ. தம்பிரட்ணம் அவர் கள் எவ்வித தயக்கமும் இன்றி தனது மனட்சாட்சிப்படி வாதிட்டு வெற்றி பெற்று வந்தார். அவருக்கு உள்ள சிறப்பு யாதெனில் பணத்திற்கு பேராசைப் பட்டு அக்காலகட்டத்தில் சாதி ஆதிக்க வாதிகளின் பக்கம் எந்தவொரு வழக்கிலும் ஆஜராக வில்லை என்ப தாகும். அங்கே தான் அவரது நேர் மை மனட்சாட்சி மனித நேய த்தை அளவிட முடிந்தது. பாரிஸ்ட் ஆர்.ஈ. தம்பிரட்ணம் எந்த வொரு அரசியல் சார்பையும் வெளிப்படுத்தியதில்லை. ஆனால் மனிதநேயம் மனட் சாட்சி சமூக நீதி என் பனவற் றின் பக்கம் நின்றதை அவரது அமைதி யான நிதானமான சட்டத்துறைப் பணி மூலம் நிரூபித்துச் சென்றார்.

(ஆ.குழு)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருந்து உற்பத்தியில் கொள்ளை லாபமீட்டும் பல்தேசியக் கொம்பனிகள்

**இலங்கையுட்பட பல நாடுகளின்** சுகாதார சேவைகளை உலகின் ராட்சத பல்தேசிய மருந்துக் கம்பனிகள் எவ்வாறு படிப்படியாகப் பொறுப்பேற்கின்றன என்ற தகவல்களை பிரசித்தி பெற்ற மருத்துவ சஞ்சிகைகளும் மக்கள் நலன்பேணும் டாக்டர்களும் வெளியிட்டு வருகின்றனர். அண்மையில் இடம் பெற்ற ஒரு சொற்பொழிவை பேராசிரியர் கார்லோ பொன்சேகா நிகழ்த்தியிருந்தார்.

புதிய இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையிலிருந்து (New England Medical Journal) புள்ளி விபரங்க ளையும் தகவல்களையும் மேற்கோள் காட்டினார். உலகில் பெரும் இலாப மீட்டும் பாரிய 500 மருந்துக் கம்பனிகளுள் முதல் பத்து இடங்களை இராட்சத பல்தேசிய கம்பனிகள் கொண்டிருக்கின்றன.

அந்தச் சஞ்சிகை வெளியிட்ட தகவலின்படி குறிப்பிட்ட பத்து இராட்சத பல்தேசிய மருந்துக் கம்பனிகள் குறிப்பிட்ட ஆண்டில் 3600 கோடி டொலர்களை அதிக இலாபமாகப் பெற்றன. அதே சமயம் ஏனைய 490 கம்பனிகள் பெற்ற மொத்த இலாபம் 3400 கோடி டொலராகும். இந்த இராட்சத மருந்துக் கம்பனிகளின் பாரிய இலாபம் எங்கே போகிறது? இதன் பெரும் பகுதி ஆராய்ச்சிக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் புதிய வளர்ச்சிக்கும் செலவாகின்றன என்றே அக் கம்பனிகள் கூறிவருகின்றன. ஆனால் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்த போது உண்மை வேறாக உள்ளது. பலநூறு கோடி டொலர்கள் விற்பனை விரிவாக்கத்திற்கும் சந்தைப்படுத்தலுக்கும் வகைமாதிரிகளாகவும் அன்பளிப்பு பண்டங்களாகவும், டாக்டர்களுக்கும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் உல்லாசப்பயண செலவுகளுக்கும் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. ஒருவரது மருத்துவத் தொழில் வியாபாரமான பின் அவதியுறும் நோயாளிகளின் உயிரைப் பணயம் வைத்து அவ் வியாபாரம் நடைபெறுகிறது. சில சந்தர்ப்பங்களில் அது மனித உயிர்ச் சூதாட்டமாகவும் மாறுகிறது.

அவ்வாறே மூன்றாம் உலக நாடுகளின் முக்கியதுறையான விவ சாயத்துறையைச் சூறையாடுவதற்கு கபடத்தனமான முறையிலும் கலப்படம் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த முப்பதாண்டுகாலமாக இந்த பாரிய பல் தேசியக் கம்பனிகள் படிப்படியாக விவசாயத் துறையைத் தம் கைக்குள் கொண்டுவந்துள்ளன. பெரும்பாலான மக்களுக்கு இந்நிகழ்வுகள் தெரியாது. பலருக்கு இது தொடர்பாக அக்கறையே இல்லை. பல்லாயிரக் கணக்கான வறிய விவசாயிகள் பழச் செய்கையாளர்கள் ஏனைய விவசாய உற்பத்தியார்கள் நடப்பதென்ன என்பதை அறியாத நிலையில் அவர்களது வளங்கள் அவர்களுக்குத் தெரியாமலேயே சூறையாடப்படுகின்றன. அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் இதுபற்றி சிறிதளவே அறிந்துள்ளனர் அல்லது இதுபற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. ஏனெனில் மருந்துகளைப் போலவே இவர்களையும் இராட்சத பல்தேசிய நிறுவனங்கள் வெவ் வேறு வழிகளில் "கவனித்துக் கொள்கின்றன".

விவசாயத்துறை நிபுணர் உபாலி மாகெதரகமகே அண்மையில் வெளியிட்ட தகவல்களின்படி நவகொலனித்துவத்தினால் மூன்றாம் உலகின் வளங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட துறைகளில் விவசாயத்துறை ஒன்றாகும். கமகேயின் கூற்றுப்படி கோடிக்கணக்கான சிறுவிவசாயிகள் உடல் உழைப்பின் மூலமே வளர்ச்சியடையும் நாடுகளில் சீவியம் நடத்துகின்றனர். பெரும்பாலான வளர்ச்சியடையும் நாடுகளில் விவசாயிகளே அந்தந்த நாடுகளின் அரைவாசிக்கு மேற்பட்ட தொழிற்படையினராக விளங்குகின்றனர்.

உலகின் விவசாய இரசாயன சந்தையில் 91 வீதத்தை உலகின் முதல் பத்து விவசாய இரசாயன கோப்றேசன்கள் கொண்டுள்ளன. உலகில் 3000 கோடி டொலருக்கு வர்த்தக ரீதியான விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதில் நான்கில் ஒரு பகுதிக்கும் மூன்றில் ஒரு பகுதிக்குமிடைப்பட்ட வர்த்தகத்தை உலகின் முதல் பத்து அனைத்துலக விதைக் கம்பனிகள் கட்டுப்படுத்துகின்றன.

கால்நடை சுகாதாரத் தொழிற்துறைச் சந்தை 1600 கோடி டொலர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தையில் 61 வீதத்தை முதற் பத்து இராட்சத கம்பனிகள் கொண்டுள்ளன.

அண்மைக்காலம் வரை விவசாயத் துறையின் ஆராய்ச்சிக்கு பொது நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. இன்று அந்த ஆராய்ச்சி கூட தனியார் மயப்படுத்தப்பட்டு வருவதை நாம் அவதானிக்க முடியும். மனித நேயமோ சமூக அக்கறையற்ற கொடூர முதலாளித்துவச் சுரண்டலையே இக்கம்பனிகள் வெளிப்படுத்துகின்றன.

**தொகுப்பு: சிறீ**

# மக்களுக்காக வீரம் தியாகம் அர்ப்பணிப்பு புரிந்தவர்

**இச்சமயத்தில் நாம்** நம்மிடம் 'கட்சியின் உறுப்பினர் என்பவர் யார்?' என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டி இருந்தது. உறுப்பினர் என்பவர் மத்திய அதிகார அமைப்பு வழங்கும் தீர்மானங்களை அலசிப் புரிந்து கொண்டு அதை மக்களிடம் கருத்துக்களாகக் கொண்டு சேர்க்கும் அளவு தேவையான அரசியல் வளர்ச்சியை அடைந்துள்ள ஒரு தனிமனிதனாக இருக்க வேண்டும் என நாம் இதற்கு பதிலளிக்கலாம். இது தவிர மக்களின் அபிலாசைகளையும் ஆழமான செயல்நோக்கையும், துல்லியமாகப் புரிந்து கொள்ளக் கூடியவராகவும் அவர் இருத்தல் வேண்டும். சித்தாந்தம் மற்றும் நிர்வாக கோட்பாடுகளின் படி நடப்பவராய் அவர் இருக்க வேண்டும். பலதரப்பட்ட உண்மைகளில் இருந்து அதிகபட்ச பலன்களைப் பெறும் விதத்தில் வழிமுறையில் ஒழுங்குக்கு உட்படுத்தப்பட்ட முரண்பாடுகளை எப்படி மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதை அறிந்தவராய் அவர் இருக்க வேண்டும். உற்பத்தியில் கூட்டுத் தீர்மானம் தனிநபர் தீர்மானம் மற்றும் பொறுப்புகள் ஆகிய கொள்கைகளை எப்படி நடைமுறையில் செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிந்திருக்க வேண்டும். அவரது உடல் மற்றும் அறவியல் தைரியம் அவரது சித்தாந்த வளர்ச்சிக்கு தகுந்தாற் போல் இருக்க வேண்டும். அவர் எந்த போராட்டத்தைச் சந்திப்பதற்கும், புரட்சிக்காக உயிரை அர்ப்பணிப்பதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். மேலும் சுயவிமர்சனம் செய்யும் திறமையுடன், ஒழுக்கத்தை கடைப்பிடித்துக் கொண்டே, தேவையான தீர்மானங்களை எடுக்கவும் படைப்பாற்றல் மிக்க புதுமுயற்சிகளை மேற்கொள்ளவும் திறமையுடன் இருக்க வேண்டும்.




ஆகவே கட்சி உறுப்பினர் என்பவர் ஒரு படைப்பாளி; உயர்ந்த தலைவர்; உயர் வளர்ச்சியடைந்த அரசியல் வல்லுனர். அவரது பகுப்பாய்வுத் திறமையினால் அவரால் உற்பத்திப் பிரிவை தலைமையேற்று நடத்தவும் முன்னணியில் இருக்கும் அவருடைய நிலையினால் பொதுமக்களுக்கு கற்பிக்கவும் முடியும்.

கடினமாக உழைத்துப் பெற்றுள்ள நன்னடத்தையால் உருவாக்கப்பட்டுள்ள இச்சிறப்பான மனிதர், கியூப மக்களிடையே உள்ளார்; நாம் அவரைத் தினமும் சந்திக்கிறோம். இப்பொழுதிருக்கும் அனைத்து சந்தர்ப்பத்தின் நன்மைகளைப் பயன்படுத்தி அவரை அதிகபட்சமாக வளர்ச்சியுறச் செய்து, அவருக்கு கற்பித்து அவரது தனித்துவத்தில் இருந்து பெருவாரியான பயன்களைப் பெற்று தேசத்திற்கு மிக உபயோகமானவனாக மதிப்பு மிக்கவனாக அவரை மாற்றி விடுவதுதான் தற்போதைய தேவையான செயலாகும்.

ஒரு உறுப்பினன், தனது தினசரி செயல்கள் மூலமாக வளர்ச்சியடைகிறான். ஆனால் அந்த செயல்கள் ஒரு முறைப்படி அமையவேண்டும். உறுப்பினர்கள் விசேச பள்ளிகளில் மாணவர்களுக்கு முன்னுதாரண மாக விளக்கக்கூடிய ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு அவர்கள் சித்தாந்தரீதியான பெரு முன்னேற்றம் அடையும் படி செய்ய வேண்டும். சோசலிசத்தைக் கட்டி எழுப்பத் துவங்கியுள்ள இந்தத் தருணத்தில் மிக உயர்ந்த அரசியல் விழிப்புணர்ச்சி இல்லாதிருக்கும் உறுப்பினர்களை நம்மால் வைத்துக் கொள்ள இயலாது. அரசியல் விழிப்புணர்ச்சி என்பது மார்க்சிய கொள்கையை கற்பதை விட முக்கியமானது. ஒரு தனிப்பட்ட மனிதன் தன் செயல்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வதும் உயர்மட்ட உத்வேகத்துடன் பலவீனங்களைக் குறைத்து நல்லொழுக்கத்தைக் கொண்டிருப்பதும் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. புரட்சியின் அனைத்துப் பிரச்சினைகளிலும் அவர் தொடர்ந்து மூழ்கிக்கொண்டிருப்பதும் அவசியம். உறுப்பினர்களை வளர்ச்சியடையச் செய்ய முதலில் மக்களிடம் தேர்ந்தெடுத்த சிறப்பான கொள்கைகளை எடுத்துச் சென்று உறுப்பினர்களிடம் பதிய வைக்க வேண்டும். பொது மக்களிடம் இருந்துதான் தியாகத்தில் புடம் போடப்பட்ட வருங்காலத் தலைவர்களைத் தேட வேண்டும். வளரத் துவங்கி இருக்கும் மக்களை சிறப்புப் பள்ளிகளுக்கு அழைத்து வரவேண்டும். அதுவும் இல்லையெனில் அவர்களுக்கு பொறுப்பான கடமைகளை கொடுத்து, அதன் மூலம் நடை முறைப் பாணியில் அவர்களின் திறமையை உயர்த்த வேண்டும்.

கடந்த வருடங்களில் நாம் ஏராளமான புதிய உறுப்பினர்களைக் கண்டு பிடி த்துள்ளோம். ஆனால் போதுமான கட்சி வழிகாட்டுதல் இல்லாமல் நமது இளம் உறுப்பினர்கள் புரட்சிகர உருவாக்கத்தில் யதார்த்தத்தை சந்திக்க வேண்டி இருப்பதால் அவர்கள் அனைவரின் வளர்ச்சியும் சமமாக இருப்ப தில்லை. ஒருசிலர் வெற்றி பெற்று விடுகின்றனர். ஆனால் பலர் அதை முழுமையாகச் செய்ய முடியாத நிலையில் பாதி வழியிலேயே விலகி விடுகின்றனர். அல்லது அதிகாரத்துவச் சிக்கல்களிலும் பதவிக்கான ஆசைகளிலும் மாட்டிக் கொண்டு காணாமல் போய் விடுகின்றனர். எல்லாவற்றிக்கும் அடிப்படைத் தேவை அரசியல் விழிப்புணர்ச்சியாகும். புரட்சியின் கொள்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு என்பது இதற்கு பொருளல்ல. அறிவுபூர்வமான ஒத்துழைப்பு மற்றும் தியாகம் செய்வதற்கான சக்தி பகுப்பாயும் திறமை ஆகியவைதான் இதற்குத் தேவை. இத்திறமைகளை புரட்சியின் கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஒவ்வொரு தளத்திலும் மக்கள் பங்களிப்புகளை அளிக்கக்கோரும் இத்தோழர்கள் மக்களிடம் இருந்தே தேர்ந்தெடுத்து பெறவேண்டும். சிறப்பானவர்களே காலப்போக்கில் கட்சியில் தங்குவார்கள், சிறப்பானவர்களுக்கு வளர்ச்சியடைய அதிக சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த உறுப்பினர் சேர்க்கைக் கொள்கை அமைய வேண்டும்.

இயக்கத்தின் முதன்மையான வேலை உறுப்பினர்களை வளர்த்தெடுப்பதாகும். உறுப்பினர்களை வளர்த்தெடுப்பதை புரட்சிகர அரசாங்கம் மிகுந்த உத்வேகத்துடன் துவக்கி வைத்துள்ளது. அதன் தேர்தெடுக்கும் கொள்கையுடன் கூடிய உதவித் தொகை திட்டம், தொழில் நுட்ப பயிற்சிக்கு பலவித சந்தர்ப்பங்கள் அளிக்கும் தொழிலாளர் கல்வித் திட்டம் சிறப்பான தொழிற் கல்விப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை நிறுவுதல் ஆகியவையே தாரக மந்திரமாக இருக்கச் செய்தல் போன்ற இவைகள் இளம் கம்யூனிஸ்ட் லீக்கை அடிப்படையாகக் கொண்டுள்ள வளர்ச்சி ஆகும். அதிலிருந்து வருங்காலத்தில் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு வகையான உறுப்பினர்களும் உதித்தெழுவார்கள்.

உறுப்பினர் என்ற தத்துவத்தோடு, தியாகம் செய்யும் மனப்பான்மை புரட்சியின் முழுப் பரிமாணமாயும் அதற்கு உண்மையாய் தானே விளங்கிக் காட்டும் உணர்வும் பின்னிப் பிணைந்துள்ளன. உறுப்பினர் ஒரு அரசியல் தலைவரைப் போல் நன்மதிப்பை வென்றிட வேண்டும். புரட்சியின் முன்னணிப் பாதையில் தான் வழி நடத்திச் செல்ல வேண்டிய தோழர்களின் நேசத்தையும் மதிப்பையும் அவர் பெறுவது மிகவும் இன்றியமையாததாகும்.

**'கியூபா சோஸலிஸ்ட்' எண்13, 1962 செப்டம்பர்**

**வெற்றி நமதே- சேகுவேரா படைப்புகளும் உரைகளும் நூலில் இருந்து**

## நம்பிக்கையை நினைதல்

*1928 ஜீன் 14*
*பலகோடி பேர்களின்*
*தன்நம்பிக்கையின்*
*ஆத்மா கலந்து பிரசவித்தது*
*ஆர்ஜன்டினா.*
*ரொசாரியோ*
*சே- குவேரா பிறந்தான்.......*
*சூம்பிப் போன கால்கள்*
*மூச்சு விட சோம்பல் படும்*
*சுவாச உறைகள்- அவன்*
*பிறக்கும் போது கொண்டு வந்தவை*

*எந்த ஒளிவட்டத்தோடும்*
*அவன் பிறவாததால்*
*சேகுவரா இறைவனில்லை.*
*மனித குலத்திற்கான மனிதன்*
*மாக்ஸிம் கோர்க்கியின் 'மனிதன்'*
*இவனில் தான் வெளிப்பட்டான்.*

*அர்ச்சுனனை ஏவிய கிருஸ்ணனோ*
*விழிகளுக்கு புலப்படாத அல்லாவோ*
*இவனல்ல.*
*உலகத்துயர் கண்டு வனமேகிய*
*புத்தனோ*
*அநீதி ஏற்று சிலுவையேறிய*
*ஏசுவுமல்ல- ஆனாலும்*
*அடக்குமுறைக் கெதிரான அவதாரம்*
*மனித குல நம்பிக்கையின் ஆதாரம்.*

*சம தர்மக் கனவுகளுக்காக*
*உறக்கம் தொலைத்தவன்*
*சிம்மாசனம் மேறிய போதும்*
*வியர்வை சிந்திய அமைச்சன்.*

*உடல் மருத்துவம் பயின்று*
*உலகினுக்கே சிகிச்சை செய்ய*
*முனைந்த வீர வைத்தியன்.*
*பலவீன உடல் கொண்டு*
*ஏகாதிபத்தியத்தை எதிர்த்து*
*ஓயாமல் போர் தொடுத்த*
*புரோமித்தியஸ்*
*முப்பத்தொன்பது வயதுக்குள்*
*முந்நூறு வருடங்களை*
*வாழ்ந்த அதிசய மனிதன்.*
*ஆனாலும்*
*அவனை வாழ வைக்க*
*வாழ்க்கைக்கு அதிஸ்டமில்லை.*
*சே..........!*
*உனது ஒரு பொய்*
*எனக்கு மிகவும் பிடிக்கும்*
*அடிக்கடி சொல்வாயாமே*
*"நான் ஒரு சின்னஞ்சிறிய போராளி"*
*என*
*நீயா.........?!*

*எனக்குத் தெரியவில்லை சே.......*
*நீ எதிர் கொண்ட மரணம்*
*நீ எதிர்பார்த்த*
*'அழகிய மரணம் தானா என.*

**வே. தினகரன் பத்தலையூர்.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




# பெரிய திரை வக்கிரங்களும் சின்னத்திரை சீரழிவுகளும்

## மதம் மட்டுமல்ல சீரழிந்த சினிமாவும் மக்களுக்கு அபின் தான்

**பெரிய திரை எனப்படும் சினிமாவும்** சின்னத்திரை என்கிற தொலைக் காட்சித் தொடர்களும் முழுச் சமூகத்தையும் ஊடுருவி நிற்கின்றன. வசதிவாய்ப்புக்கள் பெற்ற மேல் தட்டு வர்க்கத்தினர் தொட்டு சாதாரண மக்கள் வரை சினிமாவையும் தொலைக்காட்சித் தொடர்களையும் உள்வாங்கி வருகின்றனர். முன்னையவர்களைப் பொறுத்தவரை அவை அவர்களுக்குப் பொழுது போக்காகவும் ரசனைக்குரியதாகவும் உள்ளன. அதே வேளை சாதாரண மக்களைப் பொறுத்தவரை இப் பெரிய திரையும் சின்னத்திரையும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துவனவாக இருந்து வருகின்றன.

இவ்விரு காட்சி ஊடகங்கள் மூலம் கருத்தியல் திணிப்பு, பண்பாட்டுப் பழைமை, பார்த்தொழுகுதல், மனித நேய மறுப்பு, சமூக சிந்தனைகளைச் சிதைத்தல், அரசியல் பொருளாதார சமூக விடயங்களில் இருந்து இளம் தலைமுறையினரைத் திசைதிருப்புதல், சமூக நீதி கோரி கேள்வி எழுப்பும் ஆற்றல்களை மழுங்கடித்தல் போன்றவை தினம் தினம் பரப்பப்படுகின்றன. தனக்கும் சமூகத்திற்கும் எவ்வித நன்மை தீமைகளை இவை ஏற்படுத்தி வருகின்றன என்ற தன்மைகளையும் உண்மைகளையும்




பகுத்தறிய முடியாத ஒரு ஒரு பயங்கரப் பண்பாட்டுச் சகதிக்குள் இச் சினிமாவும் தொலைக் காட்சித் தொடர்களும் பெரும்பான்மையான மக்களைக் குறிப்பாக இளம் தலைமுறையினரை வீழ்த்தி வருகின்றன.

சினிமா என்ற பெரியதிரை காட்சி ஊடகத்தினால்

### சினிமாக் கவர்ச்சியில் மூழ் மக்களிடமிருந்து

விரைவாகவே மக்கள் மத்திக்குச் செல்ல முடிந்தது. கருத்துக்களைக் காட்சிப்படுத்திக் காட்டக் கூடிய அச் சாதனத்தின் மூலம் சமூக சார்பானதும் சமூக நீதியை வென்றெடுக்கும் வகையிலான வளர்ச்சி ஏற்பட்டதா என்ற நியாயமான கேள்வியை எழுப்புவது முக்கியமானதாகும். தமிழ்ச்சினிமா என்பதன் பிறப்பிடமும் வளர்ப்பிடமும் தமிழகமாகும். தமிழர் பழைமைவாதத்திலும் மதப் பக்தி மார்க்கத்திலும் ஆரம்பித்த தமிழ்ச் சினிமா ஒரு கட்டத்தில் திராவிட இயக்கத்தின் சீர் திருத்தக் கருத்துகளுக்கு களஅமைத்து நின்றது. இருப்பினும் திராவிட இயக்கத்தின் முழுமையான பகுத்தறிவுக் கொள்கைகளை அதனால் முன்னெடுக்க முடியவில்லை. திராவிட இயக்கத்தின் ஆரம்ப கால சீர்திருத்தக் கருத்துக்கள் பின்பு பாராளுமன்ற தேர்தல் அரசியலுக்குள் புதையுண்டு தனது அற்ப சொற்ப சுயத்தையும் இழந்து கொண்டது. தி.மு.க.வின் தமிழ்த் தேசியவாத சட்டசபை அரசியலுக்கு தமிழ் சினிமா பயன்பட்டது. அதன் பின் தமிழ்ச்சினிமா முற்று முழுதான வர்த்தகமயமாகிக் கொண்டது.

தமிழ் சினிமா பல்வேறு நிலைகளிலும் வக்கிரத்தனங்களையும் ஆபா சங்களையும் வைத்து பிழைப்பு நடாத்தி விரிவு பெற்று வந்தது. இன்று அவற்றின் உச்சம் சமூக அவல ங்களுக்கு வழிகாட்டும் நிலைக்கு வளர்ச்சி கண்டு ள்ளது. தமிழர் பண்பாட்டு விழுமியங்கள் என்று கூறி க்கொண்டு காட்சிப்படுத்தப்படும் பெரும்பாலான படங்கள் நிலவுடை மைக் கருத்தியல்களின் தொடர்ச் சியாகவே காண முடியும்.

இவை சினிமாவின் பெரும் பெரும் நட்சத்திர நடிகர்கள் எனக் கொண்டாடப்படு பவர்களாலேயே விற்பனை செய்யப்பட்டு வருவதைக் காண்கிறோம். ஒரு சினிமாப் படத்தின் வெற்றிக்கு வன்முறையின் வீச்சும் பெண்களின் அங்கங்களை அரைகுறை ஆடைகளில் வெளிப்படுத்தும் போக்கும் ஆடம்பர வாழ்வுக் காட்சிகளும் ஆபாச ஆடல்பாடங்களும் தனி மனித வீர தீரம் போன்றனவும் பிரதான அம்சங்க ளாகின்றன. சமூகச் சார்புக் கருத்துக்கள் கொண்ட கதையம் சங்களோ அல்லது அறிவூட்டும் செய்திகளோ இடம் பெறுவது மிகக் குறைவு எனலாம். ஆங்காங்கே சொல்லப்படும் சில சமூக சார்புக் கருத்துகள் கூட வெறும் பெயருக்கான வைகளாகவே இருக்குமே தவிர வலுவான ஒன்றாக அமைவதில்லை.

காதல் கதைகள் என்ற பெயரில் வெளிவரும் படங்களில் இளம் தலைமுறையினரைச் சீரழிக்கச் செய்யும் கருத்துக்களும் காட் சிகளுமே நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. இத்தகைய சினிமாவின் தாக்கத்தால் நிசவாழ்க்கை பாழடிக்கப்படுகிறது. இளந் தலைமுறையினர் நடிகர் நடிகைகளின் நடை, உடை பாவனை அணிகலன்களைத் தாமதமின்றிப் பின் பறிக் கொள்கின்றனர். திருமணங்கள் பிறந்த நாட்கள் அல்லது கோவில் விழாக்கள் மத வழிபாடுகள், மூடப் பழக்கங்கள் போன்றவற்றைச் சினிமா மூலம் உள் வாங்கிப் பார்த்தொழுகும் சூழலை உருவாக்கிக் கொள்கின்றனர். சினிமாவில் சொல்லப்படுபவை யதார்த்தத்திற்கும் அறிவியலுக்கும் நடைமுறை வாழ்விற்கும் பொருந்துகிறதா? என்பதை விடக் கற்பனைகளே மேலெழுந்து நிற்கிறன. இவற்றின் மூலம் சீரழிந்து கொள்ளும் இளைஞர் யுவதிகளை நடைமுறை வாழ் வில் நிறையக் காண முடிகின்றது.

சினிமா நாளாந்தம் பாலியல் வக்கிரங்களுக்கும் பிறழ்வுகளுக்கும் வழி சமைப்பதுடன் மக்களிடமிருந்து பணத்தையும் வாரிச் சுருட்டிக் கொள்கிறது. இன்றைய வடக்கு கிழக்கின் அவலச் சூழலிலும் சினிமாத் திரையரங்

### கோடி கோடியாகப் பணத் கொள்ளை அடிக்கிறார்கள்

குகள் நிரம்பி வழிகின்றன. இறுவட்டுக்கள் மூலம் கிராமங்களின் பட்டி தொட்டியெல்லாம் தொலைக் காட்சி வழியாகச் சினிமாப்படங்கள் தாக்கம் விளைவிக்கின்றன. அண்மையில் வெளிவந்த ரஜனியின் சிவாஜி படம் கொழும்பின் சுற்றிவளைப்பு கைது தடுத்து வைத்தல் ஆட்கடத்தல் கொலைகள் எனத் தமிழ் மக்களை அச்சுறுத்தி நிற்கும் பயங்கரச் சூழலின் மத்தியிலும் நான்கு மாதங்களைக் கடந்து "வெற்றிகரமாக" பெரிய சிறிய திரைகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. இது சினிமாவின் அடிதடி ஆபாச மூடத்தன மோகத்தை எடுத்துக் காட்டுகிறது. ஒரு தடவை அல்ல மூன்று நான்கு தடவைகள் பார்த்துப் பரவசம் பெறும் இளைஞர்கள் யுவதிகளை எந்தளவிற்கு சினிமாப் பேய் பிடித்தாட்டுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். இத்தகையோரின் பணத்தில் கோடிகோடியாகத் தென் இந்தியத் தயாரிப்பாளர்கள் நடிகர்கள் விநியோகஸ்தர்கள் வருமானம் பெற்று உச்ச நிலை ஆடம்பரவாழ்வு நடாத்துகிறார்கள். அண்மையில் அமிர்தாப் பச்சன் என்ற வடநாட்டு நடிகன் திருப்பதி உண்டியலில் 51 லட்சம் ரூபாய்களை இட்டு தனது மகனது திருமணத்திற்கு ஆசி பெற்றுக் கொண்டார். ரஜனி தனது மகள்- மருமகனுக்கு தீபாவளி கைவிஷேசமாக 1 லட்சம் ரூபா கொடுத்தார். இதனை ஏமாந்த ரசிகர்கள் பெருமையாகப் பேசிக்கொண்டனர். இது யாருடைய பணம்? இவ்வாறு நடிக நடிகைகளின் சொத்துக் குவிப்பிற்கு யாருடைய பணம் பயன்படுகிறது என்பதையிட்டு மக்கள் சிந்திப்பதில்லை. மக்களது அறியாமையும் மூடத்தனங்களும் சீரழிந்த சினிமாவிற்கு அடிப்படையாகின்றன. அதனாலேயே ரசிகர் மன்றங்கள் வைத்து "வசூல் மன்னன்" பட்டமும் வழங்கி கட்டவுட்டுகளுக்கு பாலாபிஷேகம் செய்யப்படும் கன்றாவியைக்கான முடிகிறது. "ஏழைகளின் பணத்திலே நடிக ர்கள் நடிகைகளின் உல்லாச வாழ்வைக் காண்கிறோம்" என்பதே சினிமாவின் இன்றைய யதார்த்தம். இதனிடையே ஓரிரண்டு சினிமாப் படங்கள் சற்று வித்தியாசமாக வெளிவந்த போதிலும் அவற்றினால் வக்கிரங்கள் நிறைந்த வர்த்தகச் சினிமாவுடன் போட்டி போட முடிவதில்லை.

இதே வேளை சின்னத்திரை என்கின்ற தொலைக் காட்சித் தொடர்கள் மற்றொரு விதத்தில் மக்களிடையே வீட்டுக்கு வீடு புகுந்து ஆதிக்கம் பண்ணுகிறது. இலங்கைக்கு தங்கு தடை இன்றி இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து தொலைக்காட்சி நாடகத் தொடர்கள் இறக்குமதியாகின்றன. "சக்தி!" "ஐ" அலைவரிசை ஆகிய இரண்டும் இவற்றை ஒளிபரப்புகின்றன. பெரிய ஒளி வாங்கி மூலம் நேரடியாகவே தமிழகத்திலிருந்து அங்குள்ள தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகள் இங்கு வந்து சேருகின்றன. யாழ் குடாநாட்டிற்கு தமிழகத்திலிருந்து சாதாரண தொலைக் காட்சிகளின் ஒளிவாங்கிகள் மூலம் சகல குப்பைகளும் கொட்டப்படுகின்றன. இன்றைய யாழ்ப்பாண ராணுவ கட்டுப்பாட்டு ஊரடங்குச் சூழலில் தமிழகக் குப்பைகள் தொலைக் காட்சிகள் மூலம் தாராளமாகக் கொட்டி நிரப்பப்படுகின்றன. அவற்றின் மூலம் நேரங்களைக் கழிக்கும் மக்கள் மறுபுறத்தில் கருத்தியல் பண்பாட்டுச் சீரழிவுகளை உள்வாங்கிக் கொள்கின்றனர்.

சக்தி தொலைக்காட்சியில் காலையில் இருந்து இரவு 12 மணிவரை சினிமாவும் சின்னத்திரைத் தொடர்களும் மாறி மாறி காட்டப்படுகின்றன. ஏனைய நிகழ்ச்சிகளும் சினிமாப் பாடல்கள் ஆடல்கள் மட்டகரமான இரட்டை அர்த்த நகைச்சுவை என்றவாறு காட்டப்படுகின்றன. சின்னத்திரையால் அதிகம் பெண்கள் சிறுவர்கள் கடுமையான பாதிப்பை அடைந்து வருகின்றனர். நூல்களின் வாசிப்பு எழுத்து அல்லது இலக்கியம் சமூகம் அரசியல் போன்றவற்றுக்கான தேடல்கள் யாவும் தொலைக்காட்சியின் தொடர் நிகழ்ச்சிகளில் முன்னால் தொலைந்து போகின்றன. நடிகர்கள் கூறுபவற்றை திருப்பிக் கூறித் திருப்தியடையும் போக்கானது வாசிப்பின் மூலம் விடயங்களை தெரிந்து கொள்வதைத் தடுக்கின்றது. ஒரு பயனுள்ள நூலை பொறுமையுடன் வாசிப்பதற்குப் பதிலாக வடிவேலு கவு ண்டமணி செந்தில் போன்ற நடிகர்களின் மட்ட ரகமான நகைச்சுவைப் பேச்சுகள் என்று கூறப்படுபவற்றைப் பார்த்து ரசிக்கும் பரிதாபத்தைக் காண முடிகிறது. மேலும் பெண்கள் தொலைக்காட்சித் தொடர்களில் வரும் உயர் விலைச் சேலைகள் சட்டைகளையும் தங்க அணி கலன்களையும் பார்த்து வாய்பிளந்து நிற்கின்றனர். அத்துடன் ஆடம்பரத் திருமணங்களின் சகல நடைமுறைகளையும் உள் வாங்கிப் பார்த்தொழுகப் பார்க்கின்றனர். மேலும் இத் தொலைக் காட்சித் தொடர்கள் வருடக் கணக்கில் தொடர்கின்றன. கொலைகள், தற்கொலைகள், சொத்துப் பிரச்சினை, இரண்டு மனைவிகள் (சின்ன வீடு) பிரச்சினை, சதி சூழ்ச்சி ஆடம்பர வாழ்வு என்பனவற்றை மையப்படுத்தியே தொடர்கள் தொடர்கின்றன. இவை யாவும் மத்தியதர வர்க்க வாழ்வின் சீரழிவுகளாகவும் அதுவே சமூக வாழ்வின் கூறுகள் போல வுமே காட்டப்படுகின்றன. அவற்றுக்கான நியாயப்பாடுகளும் கூறப்படுகின்றன. அத்தடன் கடவுள்களின் அதிசயங்கள் பேய் பிசாசுகளின் அட்டகாசங்கள் போன்ற மூட நம்பிக்கைகள் ஊட்டப்படுகின்றன. இவற்றால் பெண்கள் சிறுவர்கள் ஈர்க்கப்பட்டு மூடத்தனங்களுள் மூழ்கின்றனர். இவற்றின் நடுவே வர்த்தக விளம்பரங்கள் வகை வகையாகக் காட்டப்படுகின்றன. மொத்தத்தில் சின்னத் திரைச் சீரழிவுகள் பல்கிப் பெருகி வருகின்றன. இவை யாவும் கலைகளுக்கான வளர்ச்சி என்றும் தமிழர் பண்பாட்டுச் செழுமை என்றும் கூறியே முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றை எல்லாம் பகுத்தாராய்ந்து சரி பிழை கண்டு சமூக சார்பையும் சமூக நீதி நியாயங்களையும் முன்வைக்கக் கூடிய ஒரு புதிய பண்பாட்டுச் சூழல் அவசியம். அப்பொழுது தான் குப்பை எது குண்டுமணி எது என்பதை அடையாளம் காண முடியும். பெருவோட்டமாக இன்று காணப்படுகின்ற சினிமாவின் வக்கிரப் போக்குகளையும் சின்னத்திரையின் சீரழிவுகளையும் அம்பலப்படுத்தி அவற்றின் மக்கள் விரோத சமூக விரோதப் போக்குகளைத் தடுத்து நிறுத்தக் கூடிய புதிய பண்பாட்டு இயக்கம் தேவைப்படுகிறது. இல்லாவிடின் இன்றைய உலகமயமாதலின் பண்பாட்டு அழிவுகளுக்குள் தமிழ் மக்களது செழுமையான பாரம்பரிய சமூகச் சார்பான விழுமியங்களும் கலை இலக்கியக் கூறுகளும் புதைந்து அழிவுற்றுக் கொள்ளவே செய்யும்.

**நமன்**


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


நவம்பர் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



வாஷிங்டனில் வெள்ளை மாளிகை முன்பாக ஈராக் யுத்த எதிர்ப்பாளர்கள் வீதியை மறித்து படுத்திருந்து நடாத்தும் ''மரணத் தோற்ற'' போராட்டப் படங்கள்




ஏகாதிபத்திய யுத்தவெறி உரை நிகழ்த்தும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்



முன்னாள் அமெரிக்க சட்டமா அதிபர் ராம்சி கிளார்க் ஈராக் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்நிற்கிறார்




வியட்நாம் யுத்த எதிர்ப்பு முன்னோடி ஜோன் அண்டசன் உட்பட ''மரணத் தோற்ற'' எதிர்ப்பு இயக்கப் போராட்டத்தில்








குர்திஷ் தொழிலாளர் கட்சியின் (PKK) போராட்டத்திற்கும் அதன் போராளிகளுக்கும் எதிராக துருக்கிய ராணுவம் ஈராக்கின் எல்லைக்குள் புகுந்து அழித்தொழிப்புச் செய்வதற்கு எதிரான மக்கள் பேரணிகள் இடம் பெறுகின்றன.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.